“மேன்மை [illegible] நீதி விளங்குக உலகமெல்லாம்”


# இந்து நெறி



## இந்து மன்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*1985*



இந்து மன்றத்திற்கு எமது நல்லாசிகள் !

"திருக்கோயிலை வழிபடுங்கள்
திருமுறையை ஓதுங்கள்"

மில்க் வைற்
தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டுக்கும் மக்களுக்கும்
பயனுள்ள நற்பணி
களுக்கே.

# மில்க்வைற் சோப் தொழிற்சாலை

"திரு ஆலவாய்"
த. பெ. இல. 77, காங்கேசன்துறை வீதி,

## யாழ்ப்பாணம்

Shanthi

உ
சிவமயம்

# இந்து நெறி

எங்களைப் பரம்பொருள் காப்பாற்றட்டும்
எங்களுக்கு (இக-பர) நிறைவு உண்டாகட்டும்
நாங்கள் ஆற்றலுடன் உழைப்போம்
எங்கள் கல்வி உள்ளொளி நிறைந்து மிளிரட்டும்
பகைக்காமல் இருப்போமாக
வாழ்வை உண்மையாகவே நோக்குவோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

— (உபநிஷதம்)

Shanthi. P.



தொகுப்பாசிரியர் :

க. சுவர்ணராஜா

இந்து மன்றம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.
1985

உ
Sivamayam

# Hindu neri

*"Let us be together, let us eat together, let us be vital together, let us be radiating truth, radiating the light of life, never shall we denounce anyone, never entertain negetivity."*

(*Maharishi Mahes Yogi*)

*Editor : K. SUWARNARAJAH*

*AN ANNUAL PUBLICATION OF THE HINDU MANRAM :*

*University of Jaffna ,*
*Thirunelvely.*
*1985*

# சமர்ப்பணம்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழக வளாவில்
கோயில்கொண்டிருக்கும்
பரமேஸ்வரனின் பாத கமலங்களுக்கு
பக்தி சுவறிய
வணக்கங்களுடன் இம்மலர்
சமர்ப்பணம்.

உ
சிவமயம்

அகரம் முதல எழுத்து எல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு !

மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம் !


# குளோபல்

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி : 23249 (6 தொடர்கள்)

With Best Compliments from :

# Suppiah & sons

20, MAIN STREET,

JAFFNA.

---

With best Compliments from :

# M/s. Rajkumar Construction Co.

**Contractor Arts Lecture Hall**

UNIVERSITY OF JAFFNA.

# இதழின் உள்ளே.....


ஆசிச்செய்தி — பேராசிரியர் கா. வித்தியானந்தன் ... 1

வாழ்த்துரை — திரு. வே. ந. சிவராசா ... 2

வாழ்த்துரை — பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் ... 3

வாழ்த்துரை — கலாநிதி சி. க, சிற்றம்பலம் ... 4

இந்துமன்ற தலைவரின் எண்ணத்திலிருந்து ... 5

இதழ் ஆசிரியர் இதயத்திலிருந்து ... 7

இந்து மன்ற நிர்வாகக்குழு 1984, 1985 ... 8

மீமாம்சா தரிசனம் - பிரமாணங்கள்
— பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் ... 9

யாழ்ப்பாணத்துச் சமயநடைமுறைகள் - சிலபொதுக்குறிப்புகள்
— பேராசிரியர் அ. சண்முகதாஸ் ... 17

திருமுறைகளில் காணப்படும் சைவசித்தாந்தக்கருத்துக்கள்
— திரு ப. கணேசலிங்கம் ... 21

சிற்பக்கலை மரபில் சிவலிங்கம்
— கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன் ... 27

நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழ்
— திரு வ. கோவிந்தபிள்ளை ... 33

நாட்டிய கரணங்கள் — திரு வி. சிவசாமி M A. ... 39

இந்தியக் கலையின் இயக்கசக்திமதம்
— திருமதி தி. ஜெயந்தி ... 44

எங்கள் பரம ஈஸ்வரனே — திரு. த. புவனேஸ்வரன் ... 48

திருக்கோயில்கள் — கலாநிதி. சி. க. சிற்றம்பலம் ... 51

வாழ்வின் துன்பநிலைச் சித்திரிப்புக்கள்
— திரு க. நாகேஸ்வரன் B:A (HONS) ... 55

கானத்தின் ஏழுபிறப்புத்தந்த ஞானத்தமிழிசை மூலக்கருநிதியம்
— திரு. நா. வி. மு, நவரத்தினம் ... 69

உன் அருளில் வாழ்வோம் — செல்வி. சுகந்தி சுப்பிரமணியம் ... 77

அழகியற்கலைகளும் ஆடல் அழகனும்
— செல்வி. க. சிவகுமாரி ... 81

சாங்கிய தரிசனமும் கடவுட்கொள்கையும்
— திருமதி. கலைவாணி இராமநாதன் M. A. ... 84

சிலப்பதிகாரத்தில் சிவநெறி — திரு. M. வேதநாதன் B. A. (HONS) ... 89

அவனருளாலே — செல்வி. அ. சுப்பையா, (உமா) ... 94

செயலாளர் அறிக்கை ... 97

கனிஷ்ட பொருளாளர் அறிக்கை ... 98

மங்களகரமான வைபவங்களுக்கென
சிறந்த முறையில் தூய்மையான
**விளைவு கற்பூரத்தினுல்** தயாரிக்கப்பட்டதுதான்

# நியூ வேல் முருகா கற்பூரம்

தயாரித்து விநியோகிப்பவர் : **உமா இன்டஸ்ரீஸ்**

**26, வளாக வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

நவநாகரீக ஆடைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.

# சிற்றி ரெக்ஸ்

**40, நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.**

எமது
நல் வாழ்த்துக்கள் !

# பரீஸ் மாட்ஸ்

**155, மின்சார நிலேய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**☎ 23635**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்,
## பேராசிரியர், கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின்
## ஆசிச்செய்தி.

நீதிக்காக மகனை முறைசெய்தவனும், தன்கை குறைத்தவனும் சைவர்கள். மூந் நூறுஊரும் பரிசிலாக அளித்தவனும், முல்லைக்கொடிக்கு தேர்தந்தவனும் சைவனே. புருவுக்காகத்துலை புகுந்தவனும்; மயிலுக்குப் போர்வையளித்தவனும் சைவர்களே. இப்பண்புகளாற் சைவநெறி புகழுடன் விளங்கியது. ஆனால் இன்று சைவநெறிக்குச் சோதனை மிக்ககாலம். இந்நிலையிற் சைவசமய வளர்ச்சியிற் கோயில்களுக்கும் மன்றங் களுக்கும் பெரும் பங்குண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரமேஸ்வரக் கோயிலைத் தளமாகக் கொண்டு பல்கலைக்கழக இந்து மன்றம் இயங்குகிறது. நெருக்கடி மிக்க இன்றைய சூழலில் அமைதியையும் தென்பையும் எமக்கு அளிக்கவல்லது சமயமே. எனவே பல்கலைக்கழக மாணவரின் ஈடேற்றத்திற்கு வழி காட்டுவது சமயமன்றங்களின் பொறுப்பாகும்.

இந்து மன்றத்தின் முதலாம் மலர் 1978ம் ஆண்டு வெளிவந்தது. அதன்பின் இவ்வாண்டிலே - ஏழாண்டு இடைவெளிக்குப்பின்னர் - மலர் வெளிவருகின்றது. இன்று மக்களின் நல்வாழ்விற்கும் சிந்தனைக்கும் ஏற்ற கட்டுரைகளைக் கொண்டு விளங்கும் இம்மலர் பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்க்கின்றேம். மன்றமும் மலரும் தொடர்ந்து பணியாற்ற என் மனமுவந்த ஆசிகளை வழங்குகின்றேன்.

சு. வித்தியானந்தன்

உ
சிவமயம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர்,

## திரு. வே. ந. சிவராசா அவர்களின்

## வாழ்த்துரை.

சிவனுக்கு ஆலயம் வளாகத்திலேயே அமைந்திருப்பது அவன் அருளாலே அவன் தாள் வணங்குவோர்க்கு அரிய வாய்ப்பு. அது நம் முன்னோர் நமக்குத்தந்த அருஞ் செல்வம். அரை நிமிட நேரம் மட்டிலாவது தவமுறை தியானஞ் செய்யத் தகுந்த இடம் இவ்வாலயம். பூசை முடிந்தவுடன் கண்ணை மூடிக்கொண்டு இருந்து பரீட்சித்துப் பார்க்கலாம். சில நிமிடங்கள் இதற்குப் போதுமானவை. சுகம் கண்டால் சிறிது சிறிதாக வசதிக்கேற்றபடி கூட்டலாம். ''நினைப்பு அற நினைந்தேன்'', ''இருள் கடிந்திட்டு உள்ளத்து எழுகின்ற சோதியே போன்று நின்ற நின்தன்மை'' ''ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை'' போன்ற அனுபவங்கள் பெறப் பல பிறவிகள் வேண்டும். இப்பிறவியிலும் ஆகலாம். ஏடு உடைய மலரால் முன்னைநாள் பணிந்து ஏத்திய புண்ணியம் இருந்தால் அது ஆகும். மலர் வெளியிடுவதும் உள்ளக்கமலத்தின் உணர்வுகளைப் புலப்படுத்தவதால் புண்ணியமானது.

அன்றாட வாழ்வு சமயவாழ்வாக அமையவும், ஓரளவிலேனும் ஆவணம் அடங்கிய நிலையில் பணிசெய்து கிடக்கவும், மாயாவாதம் உலோகாயதம் ஆகியவற்றில் சிக்குண்டுவிடாமல் நம்மை மேலாம் நன்னெறியடையச் செய்து நவையறு காட்சி நல்கும் முயற்சிகளில் சிவனது திருக்குறிப்பை அறிந்து நாம் செயற்பட எல்லாம் வல்ல எம்பெருமானது ஆசிகள் உரியதாகுக.

இந்து மாணவர் நித்திய பூசைகளிலும், சிவராத்திரி, நவராத்திரி போன்ற சிறப்புப் பூசைகளிலும் கலந்து ஏனைய மாணவ மாணவிகட்கு முன்மாதிரியாகத் திகழ்வதும், சில பேராசிரியர்களும் அவ்வாறே ''இருந்தனை இருந்தபடி இருந்து காட்டுவதும்'' பாராட்டுதற்குரியவை.

இந்து மாணவர்களின் நன் முயற்சி மேன் மேலும் வளர இறைவன் அருள்புரிவாராக.

வே. ந. சிவராசா

உ
சிவமயம்

இந்துமன்றப் பெருந் தலைவரும்,
இந்து நாகரீகத்துறைத் தலைவருமாகிய,

## பேராசிரியர், கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களின்

# வாழ்த்துரை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர் மன்றம் ஆற்றிவரும் சேவைகள் போற்றற்குரியன. இச்சேவைகளுக்கு சிகரம் வைத்தாற்போல் இருப்பது பல பொருட் செறிவுள்ள கட்டுரைகளைக் கொண்டுவரும் இந்துநெறி என்னும் இதழை ஆண்டுதோறும் வெளியிடுவதற்காக இவர்கள் வகுத்துள்ள திட்டம்.

சில காலமாக வெளிவராத இந்துநெறியை இற்றைச் சூழ்நிலையில் பெரிதும் முயன்று வெளிவரச் செய்வதற்காக இந்து மாணவர் மேற்கொண்டுள்ள முயற்சியைப் பாராட்டுகிறேன்.

இவ்விதழ், வழமைபோல், இந்து மணங்கமழும் பொருள் பொதிந்ததாக வெளிவருவது மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்து மாணவர் பெருமுயற்சி மேன்மேலும் வளர்வதாக.

கா. கைலாசநாதக்குருக்கள்

### இந்து மன்ற சிரேஷ்ட பொருளாளரும்,

### வரலாற்றுத்துறைத் தலைவருமாகிய

## கலாநிதி, சி. க. சிற்றம்பலம் அவர்களின்

## வாழ்த்துரை.

சேர். பொன். இராமநாதன் அவர்களால் இந்துமதச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக 1920ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பரமேஸ்வராக்கல்லூரியே 1974ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழக வளாகமாகிய பின்னர் பூரணத்துவம் வாய்ந்த ஒரு பல்கலைக்கழகமாக உருமாறியது அன்றைய பரமேஸ்வராக் கல்லூரியின் இதயமாக விளங்கிய பரமேஸ்வரன் ஆலயத்தில் தினமும் காலையில் தேவார திருவாசக ஒலி கேட்டதோடு விழாக்களும் வெகுவிமரிசையாக நடந்தன. துர்அதிஷ்டவசமாக இக் கல்லூரி பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றவுடன் இத்தகைய நியதி நிலைதளர்ந்தது என்றாலும் 1977ஆம் ஆண்டில் புவியியற் பேராசிரியராக நியமனம் பெற்ற அமரர் சோ. செல்வநாயகம் அவர்கள் அன்றைய இந்துமன்றப் பெருந்தலைவராக இருந்து காட்டிய ஊக்கமும் அக்கறையும், இந்துமன்றத்தினரைத் துடிதுடிப்புடன் செயற்பட வழிவகுத்தது. 1978ஆம் ஆண்டில் பல்கலைக்கழக இந்து மன்றத்தினரின் முதல் வெளியீடாக வந்த 'இந்துநெறி' அக்காலத்தில் இவர்கள் ஆலய வளர்ச்சியிலும், இந்து மதவளர்ச்சியிலும் காட்டிய கரிசனைக்குச் சிறந்த உரைகல்லாக விளங்குகிறது எனலாம். பின்னர் 1979ஆம் ஆண்டில் ஏற்பட்ட பேராசிரியர் சோ செல்வநாயகம் அவர்களின் திடீர் மரணம் ஆலயத்தில் நம்மவர் கொண்டிருந்த ஈடுபாட்டில் மறுபடியும் ஒருதேக்க நிலைக்கு வழிவகுத்தது. எனினும் இத்தகைய நிலை நெடிதுகாலம் நிலைக்கவில்லை.

கடந்த ஆண்டுதொடக்கம் ஆலய நம்பிக்கை நிதிப் பொறுப்பாளர் ஆலயப் புனரமைப்புப் பணிகளில் அக்கறைகாட்டி வருகின்றனர். எட்டுஆண்டு இடைவெளிக்குப்பின்னர் இன்று வெளிவரும் 'இந்துநெறி' இந்து மன்றத்தினரின் முயற்சிகளின் பிரதிபலிப்பே எனலாம். புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்ததும் மஹாகும்பாபிஷேகமும் அடுத்த ஆண்டில் நடைபெற உள்ளது. இதனால் நமது பல்கலைக்கழகத்தின் உயிர்நாடியே இப்பரமேஸ்வரன் ஆலயம் எனநாம் உணர்ந்து செயற்படும் காலம் அண்மித்து விட்டது. என்பதனையே மேற்கூறிய பணிகள் உணர்த்துகின்றன எனலாம். இத்தகைய இந்துமன்றம் ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் மிளிரச்செய்வதுடன் மீண்டும் அதை நமது பல்கலைக்கழகத்தின் அச்சாணி நிலைக்கு உயர்த்துவதோடு இந்து நெறியையும் தொடர்ந்து வெளியிடும் என்ற நம்பிக்கை ஒளி நம்மனக் கண்முன்னே தெரிகிறது.

சி. க. சிற்றம்பலம்

# இந்து மன்ற தலைவரின் எண்ணத்திலிருந்து....;

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் சென்றுவிட்டன. இப்பத்தாண்டுகாலத்தில் பல்கலைக்கழக வளர்ச்சிக்கு மாணவ மன்றங்களின் பங்களிப்பு சொல்லில் வடிக்கமுடியாதவை. இந்தவகையில் இப்பல்கலைக் கழகத்தின் பெருமைக்கும் உயர்வுக்கும் இந்துமன்றமும் தனது பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

1975ம் ஆண்டு அமரர் பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களின் முயற்சியினால் இந்துமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் மத்தியில் சமயசிந்தனைகளைப் பரப்பும் நோக்கத்துடன் 'இந்துநெறி' என்ற சஞ்சிகை 1978ம் ஆண்டு கன்னிவெளியீடாக வெளிவருவதற்கும் அமரர், பேராசிரியர் சோ, செல்வநாயகம் அவர்களின் அயராமுயற்சியே காரணமாக அமைந்தது. ஆனால் இவ் இந்துநெறியை பின்னர் வந்த இந்துமன்ற நிர்வாக சபையினர் தொடர்ந்து வெளியிட முயற்சி செய்தும் அம்முயற்சிகள் அனைத்தும் பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக செயலுருப் பெற முடியவில்லை.

இந்நேரத்தில் 1984 85ம் கல்வி ஆண்டில் இந்துமன்றத்தைப் புனரமைப்புச் செய்து அதனை புதுப்பொலிவுடன் இயக்கவைக்கும் பொறுப்பு தற்போதைய இந்துமன்ற நிர்வாகசபையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. 'அவன் அருளாலேஅவன் தாள்வணங்கி' என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியது போல பரமேஸ்வரனுக்குத் தொண்டுசெய்வதற்கும் அவனுடைய அருள் எமக்குக் கிடைத்தால்தான் எதுவும் எம்மால் செய்ய இயலும். இந்தவகையில் ஸ்ரீ பரமேஸ்வரனின் திருவருளாலே இந்துமன்றம் தனது பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. இந்நிலையில் எமக்கு மேலும் உற்சாகம் தரும் வகையில் எமது மன்றப்பெருந்தலைவர் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் அவர்களும், சிரேஷ்ட பொருளாளர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்களும், எமக்குச் சிறப்பாக ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்கள்.

பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறும் விசேட தினங்களை எதுவித குறையுமின்றிச் செய்துவருகின்றோம். இவ் ஆலயத்தில் நடைபெறும் நித்தியபூஜைகளை ஆலயப் பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ மு. கனகசபாபதிக்குருக்கள் சிறப்பாக நடத்திவருகின்றார். அத்துடன் இந்துமன்ற அலுவல்களை மேற்கொள்ள அலுவலகம் ஒன்றைப் பெற்று அதன்மூலம் எமது பணிகளை விரிவுபடுத்தியுள்ளோம். கலைநிகழ்ச்சிகள், நாடகம் முதலியவற்றையும் இந்துமன்றத்தின் சார்பில் நடத்தியுள்ளோம்.

இவ்வேளையில் பரமேஸ்வரன் ஆலயத்தில் அக்கறைகொண்டு ஆலய சுற்றுப்புறத்தைப் பசுஞ்சோலையாக்க வேண்டுமென்ற நோக்குடன் அயராது உழைத்துவந்த அமரர் டாக்டர் W. N D. வாட்சன் அவர்களின் திடீர் அமரத்துவம் எமக்குப்பெரும் துன்பமளிக்கின்றது. ஆனாலும் அமரர் டாக்டர் W N,D. வாட்சன் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் இந்துமன்ற நிர்வாகக்குழுவினர் செயற்படுகின்றார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்' என்ற முதுமொழிக்கிணங்க பரமேஸ்வரன் ஆலயத்தில் கோபுரம் இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இராஜகோபுரம் அமைப்பதற்கு பரமேஸ்வராக்கல்லூரி இயக்குனர் சபையினர் எமக்கு உறுதியளித்துள்ளமை பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதும் ஆகும்.

பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாட்டுநெறிகளை மேற்கொள்வதிலும் சமய கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதிலும் ஈடுபட்டிருந்த நாம் பண்பாட்டு ஆய்வுக்குக் களமாக அமையும் வகையில் இந்துநெறி எனும் ஆண்டிதழை ஏழாண்டு இடைவெளிக்குப் பின்னர் இரண்டாவது இதழாக உங்களுக்கு அளிக்கின்றோம்;

அ. பாலகுமார்

With Best Compliments from

**Merchant Finance Limited.**

**4, Ist, Floor Model Market Building,**

**Jaffna.**

**☎ — 24183**

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து.....

இந்து மன்றத்தின் ஆரம்பகால, வளர்ச்சிக்கும் இதன் முதல் வெளியீடான "இந்து நெறி" மலருக்கும், அதன் சிறப்பிடத்திற்கும் காரணகர்த்தாவாக விளங்கிய மறைந்த பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களைப் போற்றிக் கொண்டு ஏழு வருட இடையீட்டின் பின் வெளிவரும் "இந்து நெறி 1985" மலர் பற்றி சொல்ல விழைகின்றேன்.

பல்வேறு சிக்கலான பிரச்சினைகளின் மத்தியிலும், சமிக்காமடியாக பொருளாதாரக் கஷ்டங்களுக்கிடையேயும். பெரியோரின் நல்லாசிகளைப் பெற்று விரிவுரையாளர்கள், மாணவர்களின் ஆக்கங்களோடு இந்தமலர் இதழ் விரிக்கின்றது.

இந்து தருமம், இந்து கலை கலாசார பண்பாடு போன்ற அம்சங்களை சித்தரிக்கும் ஆக்கங்களை மலரில் சேர்த்துள்ளேன்.

இந்த மலரில் மாணவரின் ஆக்கங்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்றும் மாணவரின் படைப்புகள் நிறைய இடம் பெற வேண்டும் என்றும் ஆவல் கொண்டோம. முயற்சி செய்தோம், ஆனுல் எமது எண்ணம் அவ்வளவாக ஈடேறவில்லை. இருந்தும் சில ஆக்கங்களை நல்கிய மாணவ நண்பர்களை நன்றியுடன் நினைக்கின்றேன்.

அடுத்து எமது பணிவான வேண்டுகோளைச் செவிமடுத்து ஆசிச்செய்தி வழங்கிய உபவேந்தர். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கட்கும் வாழ்த்துரைகளை வழங்கிய, மன்றப் பெருந்தலைவர். பேராசிரியர். கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கட்கும் மன்றசிரேஷ்டபொருளாளர் கலாநிதி. சி. க. சிற்றம்பலம் அவர்கட்கும் இந்துமன்ற நலனில் அக்கறை கொண்ட பதிவாளர். திரு. ந. சிவராசா அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து சிறப்பான ஆக்கங்களைப் பல்வேறு பிரச்சினைகளின் நடுவேயும் அன்புடன் சமைத்துத் தந்த விரிவுரையாளர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கங்களை தெரிவிக்கின்றேன்.

இதனைவிட இந்தமலர் சிறப்புற அமைய பலவழிகளில் ஆலோசனைகளை வழங்கி எங்களை நெறிப்படுத்திய விரிவுரையாளர் திரு. எம். வேதநாதன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வார்த்தைகளைத் தேடிக் களைத்து நிற்கின்றேன்.

கடைசியாக நிறைகளைப் பாராட்டுமாறும் குறைகளை பெருமனதுடன் மன்னிக்குமாறும். தொடர்ந்தும் "இந்து நெறி" வெளிவர ஊக்கமளிக்குமாறும், பல்கலைக்கழக வாழ்விலிருந்து விரைவில் விடைபெறப் போகும் இத்தருணத்தில் வேண்டிநிற்கின்றேன்.

"திகட்டா தமிழ்
தென்றல் வீசும் இப்
பல்கலைக் கழக மண்ணில்
படர்ந்திருக்கும்
இந்து மன்றமும் — அதன்
இந்து நெறியும்
செழித்திருக்கட்டும் — என்றும்
மணம் குன்றுய் மலர்களாய் .........

— க. சுவர்ணராஜா

# இந்துமன்ற நிர்வாகக்குழு

## 1984 – 1985

பெருந்தலைவர் : பேராசிரியர். கா. கைலாசநாதக்குருக்கள்

சிரேஷ்டபொருளாளர் : கலாநிதி சி. க. சிற்றம்பலம்

தலைவர் : திரு. அ. பாலகுமார்

உபதலைவர் : திரு. க. முருகானந்தம்


செயலாளர் : திரு. செ. ஞானசேகரன்

உபசெயலாளர் : செல்வி. கா. சுபாசினி

கனிஷ்டபொருளாளர் : செல்வி. இ. உமையாள்

இதழாசிரியர்: திரு. க. சுவர்ணராஜா

குழு உறுப்பினர்கள் : திரு. இ. தயாளன்
திரு. ஜெ. மோகன்
திரு. மா. விஜயகுமார்
திரு. க. கஜேந்திரகுமார்
செல்வி. க. இராஜலஷ்மி
செல்வி. ச. மதிவதனி
செல்வி. சி. சந்திரவதனி
செல்வி. இ. உமாதேவி
செல்வி, வை. சசிகலா



உபவேந்தர் பேராசிரியர், சு வித்தியானந்தனுடன் நிர்வாகக்குழு

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

செல்வி. வை. சசிகலா (உறுப்பினர்) செ. ஞானசேகரன் (செயலாளர்) கலாநிதி. சி. க. சிற்றம்பலம் (சிரேஷ்டபொருளாளர்) பேராசிரியர். கை கைலாசநாதக் குருக்கள் (பெருந்தலைவர்) அ. பாலகுமார் (தலைவர்) செல்வி. ச. மதிவதனி (உறுப்பினர்)

**நிற்பவர்கள் இடமிருந்துவலம்**


செல்வி. இ. உமாதேவி (உறுப்பினர்) செல்வி. கா. சுபாசினி (உபசெயலாளர்) க. சுவர்ணராஜா (பத்திராதிபர்) மா. விஜயகுமார் (உறுப்பினர்) இ. தயாளன் (உறுப்பினர்) ஜெ. மோகன் (உறுப்பினர்) செல்வி. க. இராஜலஷ்மி (உறுப்பினர்) செல்வி சி. சந்திரவதனி (உறுப்பினர்)

**சமுகமளிக்காதோர்**

செல்வி. இ. உமையாள் (கனிஷ்ட பொருளாளர்) க. முருகானந்தம் (உபதலைவர்) ச. கஜேந்திரகுமார் (உறுப்பினர்)



பரமேஸ்வரன் ஆலயத்திலிருந்து இந்து மன்ற அலுவலக திறப்பு விழாவிற்கு சுவாமிப் படங்களுடன் கொண்டு செல்லப்பட்டபோது



''சகலகலாவல்லிமாலை'' நூல் வெளியீட்டுவிழாவில் திரு. S R. கனகநாயகத்திடமிருந்து முதற்பிரதியை கலாநிதி S. R. சிற்றம்பலம் பெற்றபோது.



22-3-1985 ல் இந்து மன்ற அலுவலகம் கலைப்பீடாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டபோது



நுண்கலைப்பிரிவு மாணவிகளின் இன்னிசை விருந்து கலைநிகழ்ச்சிகளின் போது

# மீமாம்சா தரிசனம் — பிரமாணங்கள்

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்
தலைவர் – இந்து நாகரிகத்துறை
யாழ் பல்கலைக் கழகம்

வேதங்களுள் பொதிந்து கிடக்கும் உயர் சிந்தனைகள் இரு தரிசனங்களாகப் பரிணமித்தன. இவ்விரு தரிசனங்களிற்கும் மூலப் பகுதிகளாய் அமைந்திருக்கும் வேதப் பிரிவுகள், கன்மகாண்டம், ஞானகாண்டம் என்னும் இரண்டுமாம். கன்ம காண்டம் கூறும் உயர் கருத்துக்களை நிலைக்களனாகக் கொண்டு உருவான தத்துவ தரிசனம் பூர்வமீமாம்சை எனப்படும். கன்மகாண்டம் வேதங்களின் முதற்பகுதியான மையால் இப்பெயர் பெறலாயிற்று வேதங்களின் பிற்பகுதிகளான ஞான காண்டத்தைத் தோற்றுவாயாகக் கொண்டு விரிந்த தரிசனம் உத்தரமீமாம்சை ஆயிற்று இதற்கு வேதாந்தம் என்பது பிரசித்தமான பெயர். இவ்விரு தரிசனங்களும் வேதத்தைத்தழுவி வேத பாரம்பரியத்தின் தொடர்ச்சி என அமைந்தது போல் வேறு எந்தத் தரிசனங்களாவது தத்துவ சிந்தனை முறைகளாவது உருவாகவில்லை.

பூர்வமீமாம்சை முற்றிலும் வேதத்தின் கன்ம காண்டம் கூறும் கிரியைகள் பற்றியே பேசுகின்றது. இத் தரிசனத்துக்கு இரு நோக்கங்கள் உண்டு. வேதங்களில் குறிப்பாகப் பிராமணங்களில வேதக் கிரியைகளான வேள்விகள் பற்றி விவரங்கள் பல்கிக் கிடக்கின்றன, வேதங்களிலே காணப்படும் இயல்புக்கமைய இவ் விவரங்கள் ஒன்றோடொன்று தொடர்பு பெருதவையாயும் புறத்தே நோக்குமிடத்துச் சிற்சில இடங்களுள் ஒன்றுக்கொன்று முரண்படுபவையாயும் காணப்படுகின்றன. வேதங்கள் முழுவதுமே தொகுப்பு நூல்கள் அன்றோ! இதைத் தொகுத்தவர் இக் காரணம் பற்றி வேதவியாசர் எனப் பெயர் பெற்றார். பூர்வ மீமாம்சையின் முதல் நோக்கம் இவ்வாறு சிதறுண்டு பரவிக் கிடக்கும் வேள்விகள் பற்றிய பல்வேறு விபரங்களை வேள்வி நெறி நிற்போருக்குப் பயன் தரும் வகையிலும் ஈடுபாடு உண்டாகும் வகையிலும் முறைப்படுத்திச் சீராய் அமைத்தல் ஆகும். இவ்வாறு முறைப்படுத்தி அமைத்தலுடன் விளக்கங்கள் மூலம் தெளிவு பிறப்பித்தலும் இந் நோக்கின் பயனாய் அமையும் இதனால் கிரியைகள் பற்றிய விதிமுறைகளை நன்கு விளங்கிக் கொள்ளவும் இவைபற்றி ஆங்காங்கு தோன்றும்புற முரண்பாடுகளை நீக்கி நன்கு இணைந்து இயங்கும் சூழ்நிலையில் கிரியைகளை இலகுவாகச் செயற்படுத்தவும் இது உதவும் மற்றையது வேதம் விதித்துக் கூறும் கிரியைகள் பற்றிய நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் விசாரணை நிகழ்த்து முகமாகத் தத்துவ அமைப்பின் கீழ்க்கொண்டு வருதல். இவவாறு தத்துவ அமைப்பு வழங்கப் பெற்ற காரணத்தினாலேயே பூர்வமீமாம்சை ஒரு தரிசனமாயிற்று.

பூர்வ மீமாம்சை ஒரு தரிசனமாக இந்து தத்துவ சாஸ்திர அமைப்பில் இடம் பெறினும் இது முற்றாக வைதிகக் கிரியை பற்றி மட்டுமே விதந்து கூறுவதான நோக்குடையது என்பதூ. தெளிவு. வேதங்கள் விதித்துக் கூறும் வேள்வி மரபு பல அமிசங்களை உடையது. இறப்பினைத் தொடர்ந்து ''வாழும்'' ஆன்மா கிரியைகளின் பெறுபேறுகளைச் சுவர்க்கத்தில் துய்த்தல் பற்றியும் இம்மையில் நிகழ்த்தப் பெறும் கிரியைகளில் விளைவுகளைத் தேக்கிச் சேமிக்கும் ''அபூர்வம்'' எனச் சுட்டப்படும் சக்தி பற்றியும் இவவாறு நிகழ்த்தப்பெறும் கிரியைகளிற்கு ஆதாரமாக இருக்கும் வேதங்கள் எதுவிதமான குறைகளோ தவறுகளோ அற்றவை என்பது பற்றியும் உலகம் உண்மைப் பொருள் என்பதுபற்றியும் இம்மையில் நாங்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் இவ்வாழ்க்கையும் வெறும் கனவல்ல என்பது பற்றியும் பூர்வமீமாம்சை விபரித்துரைக்கும். பௌத்தர்களும் ஜைனர்களும் சார்வாகர்களும் வேதங்களைப் பிரமாண

மாக ஏற்றுக் கொள்ள மறுப்பர். சில பௌத்தர்களோ வெளியின் உலகத்தின் உண்மையினையும் ஆன்மா என்றொன்றுண்டு என்பதனையும் மறுப்பர். சில உபநிடதங்கள் மனிதனின் உயர் இலட்சியம் சுவர்க்கம் என்ற கருத்தையும் கிரியைகள் மக்கள் ஆற்ற வேண்டிய தலை சிறந்த செயல்கள் என்ற கருத்தையும் மிகவும் தாழ்த்தியே குறிப்பிடுகின்றன. இன்னோரன்ன குற்றச் சாட்டுக்களையும் குறைகளையும் எதிர்த்து மறுப்பதுடன் கிரியை மரபில் அதி தொடக்கத்திலேயே எழுந்த புராதன நம்பிக்கையை வலியுறுத்துவதைத் தனி நோக்காகக் கொண்டது பூர்வமீமாம்சை.

ஜைமினி முனிவர் நூலுக்கு இயற்றிய மீமாம்சா சூத்திரம் பூர்வமீமாம்சைக்கு அடிப்படை நூல். இம்மூல நூலுக்கு சபர சுவாமி என்பவர் பெரியதோர் உரை கண்டார். அவர் பெயரும் இணையப் பெற்று இது சபர பாஷ்யம் என விளங்கும். இவர்வழி வந்த உரையாசிரியர் பலர். சிலர் மீமாம்சை பற்றித் தனிப்பட்ட நூல்களையும் இயற்றியுள்ளனர். இவர்களுள் இருவர் முக்கியமானவர்கள். குமாரிலபட்டர், பிரபாகரர் என்றும் இருவரும் இம்மீமாம்சைக்கு இருவகை அமைப்புகளைத் தந்தவர்கள். இவர்கள் பெயருடனிணைந்தே இம் மீமாம்சா பேதங்கள் தனித்தனி சுட்டப்படலாயின. இவ்வாறு மீமாம்சா தரிசனம் படிப்படையாக வளரலாயிற்று. மீமாம்சை என்ற சொல்லை அதன் வடிவத்தைக் கருத்தில் கொண்டு நோக்குமிடத்து மீமாம்சை என்பது குறைகளைப் பரிசீலனை செய்யும் விருப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் பற்றி மீண்டும் மீண்டும் சிந்திப்பதின் விளைவாகப் பெற்ற பெறுபேறு எனப் பொருள் தரும். மீமாம்சை பேசும் விசயம் கர்மம் எனப்படும் கிரியை பற்றியதே. இது பற்றியே இது கர்மமீமாம்சை எனவும் சுட்டப்படலாயிற்று.

வேதங்களே பிரமாணங்கள் என்பதை வலியுறுத்த வந்த மீமாம்சை, அறிவு எவ்வியல்பினது உண்மையின் இயல்பு யாது, உண்மையை எதைக் கொண்டு உணரலாம். பொய்மை என்பது யாது, பொய்மை இது என்பதை எதைக் கொண்டு துணிவது அசைக்க முடியாதவாறு உறுதி பெற்ற அறிவின் பல்வேறு தோற்றுவாய்கள் யாவை? என்பது போன்ற பல பிரச்சனைகளை மீமாம்சை ஆராயலாயிற்று. ஏனைய தரிசனங்கள் குறிப்பாக வேதாந்தம் பிரமாணங்களைப் பற்றிய அளவில் மீமாம்சையிடமிருந்தே கருத்துகளைப் பெறுகின்றன.

மீமாம்சையும் ஏனைய தரிசனங்களை போன்று இருவகை அளவைகளைக் குறிப்பிடுகின்றன. ஒன்று நேரடியாகப் புலனாகும். மற்றையது மறைமுகமான அளவை. குறிப்பிட்ட ஒரு பொருள் பற்றி ஏற்கனவே தெரிந்திராத புதிய விபரங்களை வேறு பிரமாணங்களால் நிராகரிக்கப்படாத வகையிலும் குறைகள் மலிந்த இந்திரியங்கள் போன்ற ஊனம் மிகுந்த சூழ்நிலையில் பெறப்படாத வகையிலும் விபரங்களை அறியத் தரும் வகையில் வலிமை மிக்க அளவையேயாகும்.

நேர்முகமான அறிவு எதைப்பற்றியதோ அப்பொருள் சத்து எனப்படும் உளதான பொருளாய் அமைதல் வேண்டும். இத்தகைய பொருள் மனத்துடனாவது ஞானேந்திரியங்கள் ஐந்தினுள் ஏதாவது ஒன்றுடனாவது தொடர்வு பெறும்போது குறிப்பிட்ட பொருள் பற்றிய நேரடியான அறிவு ஒருவருக்கு ஏற்படுகின்றது. நேரடித் தொடர்பு ஏற்படும் நிலையைத் தொடர்ச்சியாக அவதானிப்பின் நோக்கும் பொருள்பற்றித் தெளிவு மேலும் பிறக்கும். ஒரு பொருள் இந்திரியத்துடன் தொடர்பு றும் நிலையில் முதன் முதலாக அப் பொருள் உளது என்ற எண்ணம் மட்டுமே தோன்றும். இந்நிலையில் இவ்வாறு கண்ட பொருள் ஒன்று உண்டு என்ற எண்ணம் மட்டிலும் ஏற்படுகின்றதேயன்றி, அப் பொருள் யாது என்பது அப்பொழுது தெரிவதில்லை. இவ்வாறு பொருளை முதன் முதலாகக் கண்ட மாத்திரத்தே தெளிவில்லாதவாறு எழும் நேரடி அறிவு நிர்விகல்ப பிரத்தியட்சம் எனப்படும் இதற்கு ஆலோசன ஞானம் என்ற மறுபெயரும் உண்டு. இதை அடுத்த நிலையில் இந்தப்

பொருள் எதைக் கருதுகின்றது என்று வினவி பழைய அநுபவப் பூர்வமான ஞானத்தைக் கொண்டு அதுபற்றி அறிய முற்படும்போது எவ்வினத்தைச் சேர்ந்தது இப் பொருள்? இதன் இயல்பு யாது? இது எவ்வாறு இயங்கும்? இதன் பெயர் யாது? என்று வரிசையாக வினவி இதுபற்றி விளக்கம் எழும்பொழுது தெளிவு மிகுந்த சவிகல்ப பிரத்தியட்சம் ஏற்படுகின்றது இவ்வாறு ஏற்படும் வேளையிலேயே இது ஒரு மனிதன் இவன் கையில் கோலேந்தி நிற்கின்றான் இது அசைகின்றது. இவன் இராமனெனத் தீர்மானங்கள் பிறக்கின்றன.

"இவ்வாறு இருவகைகளாக நேரிடும் பிரத்தியட்சக்காட்சி பல்வேறு பொருள்கள் விரவ உருவான உலகம்பற்றிய உண்மை அறிவைத் தருகின்றது. காட்சி நிகழும் வேளை முதலில் குறிப்பிட்ட நிலையில் பொருட்கள் விளக்கம் பெறும் அளவிற்குத் தெளிவாகத் தெரியவில்லை எனினும்," அதையடுத்த நிலையில் நாம் தெரிந்துகொள்ள இருக்கும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய வகையில் பொருளை விளக்கிக் கொண்டோம். இரண்டாவதாக நிகழ்ந்த விளக்கம் நிகழ்ந்த நிலையில் முதலில் கண்ட காட்சியைப் பழைய அனுபவத்தின் அடிப்படையில் மனம் விளக்கம் செய்வதை மட்டுமே நிகழக் காணலாம். இங்கு மனம் அப் பொருள் பற்றிக் கற்பனையில் வரும் விபரம் எதுவும் தருவதில்லை ஏற்கனவே ஒரு மனிதனையோ வெள்ளையான தொன்றையோ கண்ட அனுபவம் இராத நிலையில் பின்னர் அது மனிதனென்றும், அது வெள்ளை என்றும், அது பசுவென்றன்றும் கரியதென்றன்றும் எவ்வாறு துணிதல் கூடும்? எனவே, பௌத்தர்களும் ஒரு சில வேதாந்திகளும் கூறுவது போன்று பிரத்தியட்சம் விளக்கிக் கூறும் உள் நிகழ்ச்சியை உள்ளடக்கியது எனினும் நிச்சயமாக கற்பனை பொதிந்ததாகவோ ஒரு பொருள் இன்னொரு பொருளாக் கருதுவதாகவோ ஆகாது மனம் விளக்கம் தருவதன் முன் நாம் நேரடியாக உணரும் பொருள் தனித் தன்மை வாய்ந்த (ஸ்வலக்ஷணமுடைய) குறிப்பிட்ட ஒன்று பற்றியதோ அல்லது பௌத்தர்கள் கருதுவது போன்று இனம்பற்றிய இயல்பு கொண்டு பகுத்தறிய முடியாததோ? அல்லது வேதாந்திகள் கூறுவது போன்ற வேறுபடும் பண்பு வாய்ந்த சுத்த சத் என்றோ கருதுவது தவறு பொருளைக் காட்சியால் முதல் உணரும் வேளை வெவ்வேறு இயல்புகள் வாய்ந்த பல்வகைப் பொருள்கள் மனதில் பொருந்தி நிற்கும்.

நேரடியாக நிகழும் காட்சியை விட நியாயபூர்வமாக அறிவு பிறப்பிக்கும் வழிகளை - பிரமாணங்களை பூர்வமீமாம்சை ஏற்றுக் கொண்டுள்ளது. இவை அநுமானம், உபமானம், சப்தம், அர்த்தாபத்தி, அநுபலப்தி என்பனவாம். அநுபலப்தி என்ற பிரமாணத்தை பிரபாகர மதத்தவர் ஏற்க மறுப்பர் இது குமாரில பட்டருக்கும் அவர் வழி வந்தோருக்கும் உடன்பாடானதாகும். அனுமானம் பற்றி மீமாம்சகர் தரும் கருத்து நையாயிகர் தரும் கருத்தைப் பெருமளவில் ஒத்து நிற்கும். ஏனைய நான்கு பிரமாணங்களைத் தனித்தனி நோக்குவோம்.

நியாய தரிசனம் உபமானத்தைத் தனியொரு பிரமாணமாகக் கூறக் காண்கின்றோம். மீமாம்சையும் அவ்வாறே இதை ஒரு பிரமாணமாகக் கணிக்கின்றதெனினும் இதை முற்றிலும் வேறான அமைப்பிலேயே ஏற்றுக்கொள்கின்றது. மீமாம்சையின்படி உபமானம் வேறுவகையில் எப்படி நிகழ்கின்றதென்பதை அவதானிப்போம். முன்னர் நேரே கண்ட ஒரு பொருளை நிகர்க்கும் வேறொரு பொருளை நேரடியாகப் பார்க்கும் பொழுது இரண்டிற்கும் இடையில் ஒப்பீடு நிகழ்கிறது. முன்னிலையில் நேரே பார்க்கும் பொருள் ஏற்கனவே நினைவில் இருக்கும் ஒரு பொருளை நிகர்க்கின்றதென்றும் அறிவுபிறக்கும் பொழுது உபமானம் நிகழ்கின்றது. உதாரணத்தின் மூலம் இவ் விளக்கம் மேலும் தெளிவுபெறும். ஒருவன் வீட்டில் பசுவைப் பார்த்திருக்கிறான். காட்டிற்குச் செல்லும் சந்தர்ப்பம் அவனிற்கு நேரிடுகின்றது. அங்கு அவன் முன்பு கண்டறியாத காட்டுப்பசு ஒன்றைப் பார்க்கிறான் அது தான் வீட்டில் பழகிய வீட்டுப் பசுவை

ஒத்திருப்பதை அவதானிக்கிறான். உபமானத்தினால் அதாவது ஒத்திருப்பதை அவதானித்த காரணத்தால், அவனிற்குத் தொடர்ந்து ஏற்படும் அறிவு வீட்டுப்பசு காட்டுப்பசுவை ஒத்தது என அவனுக்கு உணர்த்துகின்றது.

இத்தகைய அறிவு நேரடிக்காட்சியால் ஏற்படுவதன்று. ஏனெனில் காண்பவன் ஒற்றுமை பெறக் கண்டதான பசுவை அப்போது காண்கின்றானில்லை. இது ஞாபகத்தின் வழிவந்த அறிவு என்றும் கொள்ள முடியாது ஏனெனில் இப்பொருள் (வீட்டுப்பசு) முன்னர்ப் பார்க்கப்பட்டதெனினும் பின்னர்ப் பார்க்கப்பட்ட வீட்டு பசுவுடன் அது பெறும் ஒற்றுமை அப்பொழுது அறியப்படாததொன்று, எனவே இவ்வொற்றுமை ஞாபகத்தில் இருந்த ஒன்று எனக் குறிப்பிடுதல் பொருந்தாது. இது அனுமானமும் அன்று. இக் காட்டுப்பசு வீட்டுப்பசுவைப் போன்றதொன்று என்ற அறிவிலிருந்து வீட்டிலிருக்கும் பசு காட்டிலிருக்கும் பசுவுக்கு ஒப்பானதென்று முடிவு கொள்ளுதல் பொருந்தாது. அவ்வாறு கொள்வதாயின் எல்லாப் பொருள்களும் எப்பொருள்கள் தம்முடன் ஒத்தவையோ அவற்றுடன் தாமும் ஒத்தவை என்று வாதிக்கும் அடிப்படை ஒன்று அமைதல் வேண்டும். இவ்வாறு எங்கும் பொருந்தவல்லதான. குறிப்பிடப்பட்ட இரண்டு பொருள்களிற்கிடையே வேறுபடாத இணைப்பை ஏற்படுத்தக் கூடியதான இவ் வடிப்படைக் கோட்பாடு இங்கு பிரயோகிப்பதற்குரியதன்று. ஏனெனில், ஒருவர் இங்கு காணப்படாததான பசுவின் ஒப்புமையை நேரே காணும் காட்டுப்பசுவில் காணுகிறார். இங்கே வெறும் அறிவு காட்டுப்பசு வீட்டுப்பசுவை நிகர்ப்பது என்பது மட்டுமே மேலும் இவ்வகை அறிவு நேரிதாகத் தெரியும் அளவில் இதை சப்தப்பிரமாணமாகவும் கொள்ளுதல் முடியாது இந் நிலையில் உபமானமாகிய பிரமாணத்திற்கு மீமாம்சையில் தனியிடம் உண்டு

ஒரு ஆப்தரிடம் இருந்து காட்டுப்பசு வீட்டுப்பசு போன்றது என்பதை அறிந்த பின்னர் ஒருவன் காட்டிற்கு சென்று பசுவைப்போல் ஒரு பிராணியைப் பார்க்கிறான். உபமானத்தின் மூலம் அவ்வாறுதான் காணும் பிராணி காட்டுப்பசு எனத் துணிகிறான். மீமாம்சகர் இவ்வகை உபமானத்தை மறுப்பர். நோக்கப்பட்டதான பிராணி பசுபோன்றதென்பது நேரடியான காட்சியின் விளைவாகப் பிறந்தது. இவ்வாறு பசு போன்று தோற்றமளிக்கும் பிராணி காட்டுப்பசு என்பது ஏற்கனவே வேறு ஒரு ஆப்தரிடமிருந்து பெற்ற விபரத்தை ஞாபகத்திற்கு கொண்டு வருவதனால் பெறப்படுவது. இறுதியாக, குறிப்பிட்ட இப்பிராணி காட்டுப்பசு என்ற அறிவு முன் பெற்ற ஓரறிவினின்றும் எழுந்த ஒரு அனுமான மூலமே. எனவே ஒரு புது அறியும் முறையால் இது பெறப்படுகின்றது. அதாவது உவமை மூலம் என்பது உண்மையன்று.

இதுவரை கூறிய கருத்துக்கள் பின்வந்த மீமாம்சகர்களிற்கு பெரும்பாலாக உடன்பாடானவையெனினும் சபர சுவாமி உபமானத்திற்கு வேறு விளக்கம் தருகிறார். இன்னொரு ஆன்மா உண்டு என்பதை நிறுவுவது எங்ஙனம் ஆன்மா உண்டென்பதை எவ்வடிப்படையில் ஏற்றுக்கொள்கிறாயோ அதே அடிப்படையில் மற்றவர்களும் தங்கள் தங்கள் ஆன்மாக்கள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள் இவ்வாறு கொள்ளும் முறையே உபமானமாகிறது என்பது அவர்கருத்து. சபரசுவாமி உபமானத்திற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுவர். காணப்படாத ஒரு பொருள் ஏற்கனவே காணப்பட்ட ஒரு பொருள் போன்று இருத்தலை உவமித்து அறிதல் உபமானமாகும், என்பதை இவ் வரைவிலக்கணம் முன்னர் குறிப்பிடப்பட்ட ஒன்றை முன்மாதிரியாகக் கொண்டு மற்றதையும் அந் நிலைப்படுத்தும் முறைக்கு இது முரணானதன்று.

மீமாம்சை பெருமதிப்புத் தருவது சப்த பிரமாணத்திற்கேயாம் மீமாம்சை வேதங்கள் மிகஉயர்ந்த பிரமாணங்கள் என்னும் தன்கருத்தை நிலைநாட்டுவதையே நோக்காக உடையது. அநாப்த வாக்கியம் என்பது எங்கள் மதிப்பிற்குப் பாத்திரமற்றவர்களின் வாக்கியம். இவ்வாறு அமையாது பெரும் செறிவுவாய்ந்த கருத்து

விரவிய வாக்கியம் அறிவை வழங்கும். இத்தகைய வாக்கியம் வார்த்தை வடிவில் எங்களிற்கு விவரங்கள் வழங்கப்படும் சான்று. இது சப்தபிரமாணம் எனப்படும் இச்சப்த பிரமாணம் பௌருஷேயம் அபௌருஷேயம் என இருவகைப்படும் பௌருஷேய சப்த பிரமாணம் தனியொருவர் வரிவடிவிலோ ஒலிவடிவிலோ வழங்கிய சான்றுகளை உள்ளடக்கியது வேதங்கள் அபௌருஷேயமான சப்தபிரமாணம். இவ்வாறு விளங்கும் சப்த பிரமாணம் இரண்டு வகையாக எங்களிற்கு விவரங் கூறும் உள்ள நிலைகளை எடுத்துக் கூறும் இயல்பினது ஒருவகை இது சித்தார்த்த வாக்கியம் எனப்படும். மற்றையது குறிப்பிட்ட ஒன்றைச் செய்யும்படி ஏவி விதித்துக் கூறுவது இது விதாயக வாக்கியம் எனப்படும். மீமாம்சை வேதங்கள் அபௌருஷேயங்களாக விளங்கும் பிரமாணங்கள் என்பதை முக்காலும் வலியுறுத்துவன. வேதங்கள் வேள்வி வேட்பதுபற்றிக் கட்டளைகளை இடுவன. வேதங்களைக் கட்டளைகள் நிரம்பிய கட்டளை நூல்கள் எனக் கூறுவது பொருந்தும். வேதங்கள் கிரியைகளை நெறிப்படுத்துவதிலேயே முழு அவதானத்தையும் செலுத்திப் பயன்தருவன கிரியைகள் பற்றிக் கூறுவதனால் பயனெதுவுமற்ற வேறேதாவது பகுதிகளைப் பற்றிக்கூறும் பகுதிகளாய்த் தென்படினும் அவை யாகங்களை வேட்டல் வேண்டும் என விதித்துக் கூறும் நெறிப்படுத்தலுடன் ஏதாவது வகையில் தொடர்பு கொண்டதாக அமைதல் வேண்டும். இவ்வாறு வேதங்களின் எல்லாப்பகுதிகளையும், எல்லாவேதவாக்கியங்களையும் ஆன்மா அமிரத்துவம் போன்ற வாக்கியங்களையும் கூட மேலே குறிப்பிட்டவாறு ஏதாவது வேள்விபற்றி நெறிப்படுத்துதலுடன் தொடர்புபடும் படியாக வேதம் விதித்த வேள்விகளை வேட்கவும் நீக்கும்படி தடுத்து கூறியவற்றை விலக்கி ஒதுக்கியும் ஏற்றவாறு தெளிய வைத்து வேதங்களை விளக்க வந்தது மீமாம்சா தரிசனம்.

வைதிகமரபைச் சார்ந்த எல்லாச்சிந்தனை முறைகளிற்கும் வேதங்கள் ஈஸ்வரனின் வாய்மொழியாக வந்தவையென்பது உடன்பாடு. உலகத்தை படைத்தவன் என்றோ அழிப்பவன் என்றோ எவரையும் சுட்டாத மீமாம்சையோவெனின் வேதங்களும் உலகங்களைப் போன்று என்றும் உள்ளவை. அவை மக்களாலோ எவ்வகைத் தெய்வங்களாலோ ஆக்கப்படாதவை. எனவே, வேதங்கள் பிரமாணமாய் அமையும் முறையில் குறிப்பிட்ட ஒருவரோடு தொடர்பு பெறாத அபௌருஷேயமானவை. இக்கருத்தை நிலைநிறுத்த மீமாம்சகர் பல காரணங்கள் காட்டுவர்.

முதலாவதாக வேதங்களை ஆக்கியோர் ஒருவர் இருந்திருந்தால் அவர் பெயர் தெரியவந்திருக்கும். தெரியாமல் இருப்பதில் நியாயம் எதுவும் இல்லை. இரண்டாவதாக வேதநூல்கள் இடையீடு இல்லாத வகையில் பரம்பரை பரம்பரையாக எத்தனையோ மாணவ சந்ததிகளினூடாகவும் ஆசிரிய சந்ததிகளினூடாகவும் சற்றும் சிந்திக்கமுடியாத தொன்மை வாய்ந்த காலம்முதல் வழிவழியாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தவை இந்நிலையில் ஆசிரியர்கள் இருந்திருந்தால் அவர்கள் பெயரும் இணைந்து வந்திருக்கும்

இந்திய சிந்தனையாளர்கள் வேதங்கள் சனாதனமானவையல்ல அவை ஆக்கப்பட்டவையே எனக்கருதும் ஒரு சிலரும், வேதங்களை ஆக்கியோர் பற்றி ஒருமுகமான அபிப்பிராயம் கூறவில்லை. சிலர் ஈஸ்வரன் வேதங்களைத் தோற்றுவித்தான் என்பர். ஹிரண்ய கர்ப்பர் வேதங்களை உருவாக்கினார் என்பர். இன்னும் சிலர் பிரஜாபதியே வேதகர்த்தா என்பர். வேறுசிலர். இவ்வாறு வேதம் செய்தவர் பற்றிப் பலவிதமாகக் கூறப்பட்டிருப்பதும்அவதானத்திற்குரியது. உலகியல் நூல்கள் யாவும் ஆக்கியவர்களைக் கொண்டமைவது நியதி. இதேபோன்று வேதங்கள் விஷயத்திலும் தெளிவு பிறக்காத நிலையிலும் ஆக்கியகர்த்தாக்களைக் குறிப்பிடுகின்றனர்.

மேலும் வேதங்களுடன் சில பெயர்கள் இணைக்கப்படுவது உண்மையே. இப்பெயர்களிற்குரியோர் ரிஷிகள் எனப்படுவர் இவ்விரு ரிஷிகளிற்கு அபௌருஷேயமான வேதங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இவர்கள் வேதங்களின் வெளிப்பாட்டிற்கும் வேத சம்பிரதாயங்களைப் பரப்புவதற்கும் நிறுவுவதற்கும் காரணகர்த்தாக்களாக விளங்கினார்களே ஒழிய இவர்கள் வேதங்களின் இயல்பான மூலகர்த்தாக்கள் இல்லை

எனவே வேதங்கள் தனி ஒருவரின் ஆக்கமன்று வேதங்கள் சொற்களைக் கொண்டமையவில்லையா? சொற்கள் ஆக்கத்திற்குட்பட்டவையன்றோ ஆக்கத்துட்படுபவையாதலின் இவை நிலையற்றனவல்லவா. இப்படி ஒன்றன்பின் ஒன்றாய் வரும் வினாக்களிற்கு மீமாம்சகர் விடையிறுப்பர். அவர்கூறுவது பின்வருமாறு; ஒலிகள் உண்மையில் உணரப்படுகின்ற தொனிகள் அன்று. பேசுபவர் அவற்றையெழுப்ப அதைத் தொடர்ந்து கேட்பவர் காதில் உணரப்படும் தொனி, தோற்றுவிக்கப்படாது. என்றும் உள்ள ஒலிகளை வெளிக்காட்டும் இயல்பினதே ஒலிகள் உற்றுநோக்கின் பகுதிகள் எவையும் இல்லாதவையும் என்றும் ஆக்கப்படாதவையுமான மூல எழுத்துக்களேயாம் 'க்' போன்ற எழுத்தை நன்கு அவதானிக்கும் இடத்து இதுவெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு வகைகளில் ஒலிக்கப்படக் காண்கிறோம். இந்த ஒலி எழுத்தில் இவ்வாறான பல்வேறு ஒலிகள் தம்முள் நன்கு வேறுபடினும் எல்லோராலும் இவ்வாறு ஒலிக்கப்பட்டது ஒரே எழுத்து என்பதை உணருகிறோம் இவ்வாறு எல்லா 'க்' ஒலிகளும் ஒன்றே என்று பிறக்கும் உண்மை குறிப்பிட்ட இடம் காலம் என்பவற்றுள் அடங்காது எல்லாவற்றையும் தாண்டிநிற்கும் மூல ஒலிநிலைபற்றி உணரத்தரும். எனவே சொற்களும் எழுத்துக்களும் என்றும் அழிவற்றவை என்பது மட்டுமன்றி அவை என்றும் உள்ளவை ஆக்கப்படாதவை என்பதும் தெளிவாகின்றது.

வேதங்கள் அபௌருஷேயங்கள் என்பதை மேலும் வலியுறுத்த இன்னொரு விளக்கமும் தரப்படுகின்றது. வேதங்கள் கிரியைகளை விதித்துக்கூறுவதுடன் அவற்றின் பயனை சுவர்க்கப்பேறு பற்றியும் குறிப்பிடுகின்றன செயல்களிற்கும் மிக மிக நீண்ட இடைவெளிக்குப்பின் நிகழஇருக்கும் விளைவுகளிற்கும் இடையே உள்ள தொடர்பை குறிப்பிட்ட ஒருவன் அவதானிப்பது சாத்தியமன்று. குறிப்பிட்ட மருந்தைச் சாப்பிடுதலையும் அதைத்தொடர்ந்து அந்தநோய் தீருதல் போன்று ஒருவன் அவதானிக்கக் கூடிய நிலையில் நின்றும் இது வேறுபட்டதென்பதை மீமாம்சாநூல்கள் சுட்டிக்காட்டும் எனவே வேதத்தை ஆக்கியோன் ஒருவன் எனக்கூறுவது பொருந்தாது. மேலும் சார்வாகர்கள் கூறுவது போல் வேதத்தைச் செய்தவன் ஒரு தந்திரசாலியான ஏமாற்றுக்காரன் எனக்கூறுதல் தவறு. அவ்வாறு இருந்தால் இவ்வாறு ஏமாற்றும் இயல்பு வாய்ந்த நூல்களைப் படிப்பதற்கும் அவற்றைப் பரம்பரையாகப் பின் சந்ததியினர்க்குப் பேணி வணங்கி வருவதற்கும் எவரும் முன்வந்திருக்க மாட்டார்கள்.

வேதங்களில் தவறுகள் எதுவும் கிடையா. தவறுகள் நிறைவற்றவர்களின் குறையுற்றவர்களின் ஆக்கங்கள்தான் குறை பொருந்தும் இயல்பின.

அபௌருஷேயங்களாக வேதங்களில் எவ்வகையான குறைகளிற்கோ தவறுகளிற்கோ இடமேயில்லை.

அபௌருஷேயங்களான வேதங்களிடமிருந்து மட்டுமல்லாமல் ஆப்தர்கள் என்னும் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்தும் பெறற்குரிய சப்தப்பிரமாணம் பாட்டர்களால் வலிமை வாய்ந்த பிரமாணமாக ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படினும் வேதப்பிரமாணங்களிற்கு அதிஉன்னதமான இடம். ஏனைய பிரமாணங்களின் அந்தஸ்தை உற்று நோக்கினால் அவ்வவற்றிற்குரிய குறைகள் தெரியவரும். தர்மங்கள் பற்றி வேதங்களில் இருந்து நாம்பெறும் விபரம் காட்சி, அனுமானம் முதலிய பிரமாணத்தின் மூலம் அறிதல் முடியாது. பௌருஷேயமான பிரமாணங்கள் மூலம்பெறும் அறிவு பிரத்தியட்சம் அனுமானம் மூலமும் அறியலாம். வேதங்களிடம் இருந்துபெறும் அறிவோவெனின் வேறுவகையில் பெறமுடியாததாய் விடும். ஏற்கனவே பெற்ற அறிவை அடிப்படையாகக் கொண்டதாக இராது. ஏனெனில் வேதங்கள் சநாதனமானவை.

அர்த்தா பத்தி என்பது மீமாம்சகர் சிறப்பாகக் கொள்ளும் ஒரு பிரமாணம் கண்ணால் நேரே காணப்பட்டதும் ஒரு நிகழ்ச்சியினை சூழ்நிலை அனுசரணையுடன் நிகழும் வாய்ப்புகளை தர்க்கரீதியாக வரையறுக்கும்போது வேறெவ்வகையிலும்

விளக்கமுடியாத நிலையில் விளக்கந்தரவல்ல, ஒரு முடிவை ஏற்று அதை உறுதிப் படுத்துதல் அர்த்தா பக்தி எனப்படும். ஒருவன் கொழுகொழுவென வளர்ந்து வருகிறான். ஆயின் அவன் பகலில் உண்ணுவதில்லை. அவன் கொழுத்து வளர்வதிலும் அதேவேளை பகலில் உண்ணாதிருத்தலிலும் ஒரு முரண்பாடு தெரிகிறது. உண்ணாதிருத்தல் இவனிடத்தில் எவ்வாறு புஷ்டியை வரவழைக்கும் என்ற கேள்வி எழுதல் இயல்பே. இவன் இரவில் உண்கிறான் என்பதை ஏற்றுக்கொள்ளுதல் தவிர இதை விளக்கிக் கூறுவதற்கு வேறு வழி இல்லை. உண்ணாதிருத்தலைத் தொடர்ந்து இவனிடம் வெளிப்படும் புஷ்டி எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை இவன் இரவில் உணர்கிறான் என்றமுடிவு விளக்குகின்றது. இவ்வாறு முடிவை அடைவிக்கும் அர்த்தாபத்தி என்ற பிரமாணம் தனித்துவம் வாய்ந்தது. இது பிரத்தியட்சம் ஆகாது. அனுமானமும் ஆகாது. இது சப்தப் பிரமாணமும் அன்று. எனவே இதைத் தனிப்பிரமாணமாக மீமாம்சகர் கருதுவர். இவன் இரவில் உண்ணுவதை நேரே காணாததால் இது பிரத்தியட்சம் அன்று. எங்கெங்கே எல்லாம் புகையுண்டோ அங்கங்கே எல்லாம் நெருப்புண்டு என்பதுபோன்று இரவிலே உண்பவர்கள் எல்லாம் புஷ்டியாக இருப்பவர்கள் என்ற வியாப்தி இங்கு இல்லாததனால் இதை அனுமானமாகவும் கொள்ளல் பொருந்தாது.

குமாரிலபட்டரின் வழிவந்த மீமாம்சகர்களும் அத்வைத வேதாந்திகளின் கருத்துப்படி நேரடியாக ஒரு பொருள் காணப்படாமை அப்பொருள் இல்லாதிருக்கும் நிலையை நேரடியாக உணரத்தகும், ஒரு தனிப்பிரமாணமாக, அமையும். இதற்கு மீமாம்சகர் வழங்கும் பெயர் அநுபலப்தி, எனக்கு முன்னால் ஒரு மலை இல்லைஎன்பதைஎப்படி நான் அறிதல் கூடும். இவ்வாறு மலை இல்லாத நிலையில் மலை என் முன் நிலையில் இல்லை என்னும் உண்மையினை இந்திரியங்களால் உணர்வதில்லை. இங்குமலை இல்லாதிருத்தல் என்ற உண்மையினை என் இந்திரியங்கள் எதுவும் இல்லாத மலையுடன் நேரடித் தொடர்பு மூலம் அறிய முடியாதவையாக இருக்கின்றன. நேரடியாக இருக்கும்பொருளைப் பார்க்கும்போது இந்திரியங்களின் நேரடித் தொடர்பால் நிகழும் பிரத்தியட்சம் போலல்லாது மலைஇல்லாதநிலை இந்திரியங்களின் நேரடித் தொடர்பால் நிகழாத இடத்து இங்கு நிகழ்வது மறைமுகமாக நிகழும் அநுபவமாகி விடுகிறது.

எனவே மலை இல்லாது இருத்தலை நேரடியறிவு மூலம் பெறும் நிலை அநுபலப்தி மூலம், நேரே காணாதிருத்தல் மூலம் நிகழ்வதால் இதுவும் தனிப்பிரமாணம் ஆயிற்று.

வேத பாரம்பரியத்தை இடையீடின்றியும் மிகவும் இறுகப் பற்றியும் முழுஈடுபாட்டுடன் பின்பற்றுபவர்கள் பூர்வமீமாம்சகர் ஆதலால் அவர்கள் கருத்துக்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இதுவரை சுருக்கமாக தரப்பட்ட பிரமாணங்கள். அவர்கள் கையாளும் பிரமாணங்கள். இவற்றின் அமைப்பே இவர்கள் இவற்றை துணைக்கொண்டு நிறுவிய தத்துவங்களின் தனித்தன்மையைக் குறிப்பாக உணர்த்தி நிற்கின்றன.

"இந்துநெறி"

வளர்க! வாழ்க!

வாழ்த்துகின்றோம்.

**APIRAAMY**

**Palaly Road, Thirunelvely Junction**

உலகம் உள்ளமட்டும் வாழ்க...
"இந்துநெறி"

வீடியோ, கசற்
தொலைக்காட்சி (TV)
டெக் (TV Deck)

இவைகளை வாடகைக்கு
பெற்றுக்கொள்ளவும்,

மற்றும்...
உங்களுக்கு தேவையான
எவர்சில்வர் பாத்திரங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**"மல்ரிவிஷன்"**

802/3, பலாலி வீதி, திருநெல்வேலி

தையல் உலகின் நவீன
முன்னோடிகள்!

*Abtheen*

**ஆப்தீன்**

24/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

With best Compliments from

**S. Sinnathurai & Co.**

IMPORTERS
AND MOTORS SPARES DEALERS.

**25, Stanley Road,**

**JAFFNA.**

23357

# யாழ்ப்பாணத்துச் சமய நடைமுறைகள் - சில பொதுக்குறிப்புகள்

**பேராசிரியர், அ. சண்முகதாஸ்**
**தமிழ்த்துறை**
**யாழ். பல்கலைக் கழகம்**

வரலாற்று நிகழ்வுகள் கொண்டு நோக்குமிடத்து யாழ்ப்பாணத்துச் சமயமரபு தனித்துவமானதொன்றாகும். பல்வேறு சமயமரபுகள் ஒன்றிணைந்து இங்குகாணப்படுகின்றன. இந்துசமயத்தின் அறுவகைப்பிரிவுகளும் இன்னமும் பேணப்பட்டு வருகின்றன. பிறமதங்களின் பரவல் ஏற்பட்ட காலங்களில் அம்மரபுகளும் இணைக்கப்பட்டன. காலத்தின் தேவைக்கேற்றவாறு சமய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சைவ, வைஷ்ணவ, சாக்த, கௌமார, சௌர, காணபத்திய நெறிகள் யாழ்ப்பாணத்தில் சமரசமனப் பாங்குடன் பேணப்படுகின்றன. பல கோவில்களிலே இவ்வாறுவகைச் சமயத்துத் தெய்வங்களும் ஒன்றாகவைத்து வணங்கப்படுகின்றன. புராணங்களிலே கூறப்பட்ட மரபுகளும் உறவுமுறைகளும் இதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

பிறநாட்டவர்களது ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் இருந்த சந்தர்ப்பங்களில் இந்துசமய நம்பிக்கைகளுக்குப் பாதகமான சூழல்கள் இருந்தபோது மக்களின் ஆதரவு குன்றவில்லை. 19 ம் நூற்றாண்டில் சமயசீர்திருத்தவாதியாக நாவலர் நின்று இந்துசமயமரபுகள் அழியாது தொண்டாற்றினார். ஆனால் அதே சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவமதக்கொள்கைகளும் முற்றாகமறையாது நின்றன. பல்வேறு சமயங்களும் ஒன்றாக இணைந்திருந்திருந்தமையால் அவ்வச்சமய நம்பிக்கைகள் எல்லோராலும் பொதுவாகப் பேணப்படுகின்ற ஒருமரபு இருந்தது. எனினும் குறிப்பாகச் சிலபிரதேசங்களில் ''குலதெய்வம்'' என்ற நிலையிலே தனித்தனிச் சமயமரபுகளும் பேணப்படுகின்றன. சமயநம்பிக்கைகளின் அடிப்படைகளாக விழாக்களும், விரதங்களும், நேர்த்திகளும் இன்றுவரை நிலைத்துள்ளன.

சமயவிழாக்கள் யாழ்ப்பாணத்திலே ஒழுங்காகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்துசமய நம்பிக்கைகளைப் பேணும் தன்மையில் இவ்விழாக்கள் அமைந்துள்ளன. புராணக்கதைகளில் கூறப்பட்ட சிறப்புநிகழ்வுகள் பலவிழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. அடிமுடிதேடிய வரலாற்றை உணர்த்தும் சொக்கப்பனை, சிவராத்திரி, நவராத்திரி, தீபாவளி, பொங்கல், சதுர்த்தி, பிரதோஷம், சூரன்போர், ஆடிப்பிறப்பு, ஆடிஅமாவாசை, சித்திராபௌர்ணமி என்பன குறிப்பிடத்தக்கவை. இதிகாசக்கதை நிகழ்வுகளும் இவ்வாறே கொண்டாடப்படுகின்றன, விஷ்ணுவின் அவதாரச்சிறப்புகளை விழாக்கள்மூலம் உணர்த்தும்மரபும் இன்றுவரை நிலைத்திருக்கின்றது. கிருஷ்ண ஜயந்தி, வைகுந்தஏகாதசி என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை

விழாக்கள் கோவிலின் தனித்துவம் காரணமாகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கமாக உள்ளது. உதாரணமாக நாகர் கோவில் நாகதம்பிரான் கோவிலில் நடைபெறுகின்ற **கப்பல்திருவிழா** இவற்றுள் குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேயரது வருகையினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சமயத்தாக்கங்களை விளக்கும் வகையில் இவ்விழா இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றது. கப்பல் அலங்காரத்துடன் மாலுமிகளும் வேடமிட்டு நடைபெறும் இவ்விழா அக்காலத்துச் சமய

நம்பிக்கைகளை விளக்கி நிற்கிறது. அத்துடன் பிறமதத்தின் பரம்பல் இந்துசமயத்தை எவ்வாறு நிலைதளர்த்தமுயன்றது என்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இந்துசமயத்தின் பரிந்தபோக்கு சமயநம்பிக்கைகளை ஆழமாகக்கடைப் பிடிக்கின்ற பண்பினால் காப்பாற்றப்பட்டு வந்துள்ளது.

யாழ்ப்பாணத்துக் கோவில்களிலே நடைபெறுகின்ற வருடாந்த உற்சவங்கள் சமயஉணர்வினை மக்களிடையே வளர்த்து வருகின்றன. பத்துநாட்கள், இருபத்தைந்துநாட்கள், பதினைந்துநாட்கள், என கோவிலின் பொருள்வருவாய்க்கேற்ப வருடாந்தஉற்சவங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

எல்லாக்கோவில்களிலும் ஆலயப்பிரதிஷ்டைத்தினம் முக்கியமாகக் கணிக்கப்பட்டு விழாநாளாகச் சிறப்பிக்கப்படுகின்றது. நல்லூர்க்கந்தசாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் போன்ற பெரிய கோவில்களில் இருபத்தைந்துநாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவற்றுள் குறிப்பாகச் சிலநாட்கள் புராணக்கதை மரபுகளை மக்களிடையே நிலைநிறுத்த விசேட பெயரிடப்பட்ட விழாக்களாக அமைந்துள்ளன. கைலாயவாகனம், ஒருமுகம், கார்த்திகை, மஞ்சம், மாம்பழத்திருவிழா, சப்பறம், பூங்காவனம், தண்டாயுதபாணி, தேர், தீர்த்தம் என்பன குறிப்பிடத்தக்கவை. கோவில்உற்சவங்கள் நடைபெறுகின்ற காலத்தில் கோயிற்சூழலிலே வாழ்கின்றமக்கள் ஒருங்குசேர்ந்து அவ்விழாவைச்சிறப்பித்துத் தமது சமயஉணர்வை மட்டுமன்றி ஒற்றுமைப்பண்பையும் பேணிவருவது குறிப்பிடத்தக்கது. உற்சவங்களில் கிரியைமரபுகளும் பேணப்பட்டு வருகின்றன. கோவிற்புனருத்தாரண காலங்களிலும், புதுக்கோவில் கட்டப்படும்போதும் கும்பாபிஷேகம் போன்றகிரியைகள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன.

கிரியைகள் பற்றிக் குறிப்பிடும்போது இருவகையான கிரியைகள் யாழ்ப்பாணத்தில் செய்யப்படுகின்றன. பூர்வக்கிரியைகள், அபரக்கிரியைகள் என அவை வழங்கப்படுகின்றன. கோயிற்கிரியைகள் பூர்வக்கிரியைகள் என்றும் மரணத்தின்போது செய்யப்படுகின்ற கிரியைகள் அபரக்கிரியைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. கிரியைகளோடு தொடர்புடையனவாக விரதங்கள் பல யாழ்ப்பாணத்தில் மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. விரதங்கள் சமய நம்பிக்கைகளில் முதலிடம் வகிக்கின்றன. கந்தசஷ்டி, சதுர்த்தி, நவராத்திரி, சிவராத்திரி, வெள்ளிக்கிழமை போன்ற விரதங்கள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இவற்றிற்கான பலன்கள் புராணக் கதைகளிலே வகுத்துக்கூறப்பட்டுள்ளன. அவற்றை மக்கள் பூரண நம்பிக்கையுடன் அநுட்டித்து வருகின்றனர். கந்தசஷ்டி விரதம் ஆறுநாட்கள் உபவாசமாக இருந்து கடைப்பிடிக்கும் முறையும் வழக்கிலுண்டு. சிறுவர் தொடக்கம் பெரியவர்வரை அநுட்டிக்கப்படுகின்ற விரதங்கள் பல உண்டு. ஒருவாரத்தில் குறிப்பிட்டசில கிழமைகள் விரதநாட்களாக சிறப்பிக்கப்பட்டுள்ளன. வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை என்பன முறையே முருகன், சனீஸ்வரன், விஷ்ணு, சிவன், பார்வதி, வியாழன் முதலிய தெய்வங்களின் விரதங்களாகக் காணப்படுகின்றன.

கோவில்களில் செய்யப்படும் நேர்த்திகளும் யாழ்ப்பாணத்தில் தனிச்சிறப்புப் பெற்றவையாகும். கோவில் உற்சவங்களிலே காவடி, கரகம், தீ மிதித்தல், உருவாடுதல் போன்றவை குறிப்பிடத்தக்கவை. துலாக்காவடி, சந்தனக் காவடி, ஆட்டக் காவடி, பாற்காவடி எனப் பல்வேறு காவடிகள் எடுப்பதுண்டு. இசையும், ஆட்ட

மும் சேர்ந்து இது அமைந்தது. முருகன் ஆலயங்களிலும் அம்மன் ஆலயங்களிலும் காவடி நேர்த்தி செய்யப்படுகின்றது கரகம் சிறப்பாக அம்மன் ஆலயங்களிலே ஆடப்படும் தீமிதித்தல், உருவாடுதல், பக்தியின் உச்சநிலையைக் காட்டும் நேர்த்திகளாகின்றன. உருவாடும்போது அவர்கள் வாயிலிருந்து வரும் சொற்கள் தீர்க்க தரிசனங்களாகக் கொள்ளப்படுகின்றன. சமய நம்பிக்கைகளில் பொங்கலிடுதல் காய்மடை பூமடைபோடுதல், மிருகங்களை நேர்ந்துவிடுதல் என்பவையும் இன்னும் வழக்கிலுள்ளன. சிறுதெய்வங்களான காளி, வைரவர், முனியப்பர், ஐயனார், துர்க்கை, கண்ணகி, அண்ணமார், நாகதம்பிரான் போன்றவற்றிற்கும் இந்த நேர்த்திக் கடன்கள் செய்யப்பட்டு வருகின்றன. 'வேள்வி' எனப்படும் பழைய மரபு யாழ்ப்பாணத்தில் பேணப்படுகின்றது ஆடு, கோழிகளைப் பலியிடும் வழக்கம் முன்னர் இருந்தபோதும் தற்போது கைவிடப்பட்டுவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் உடுக்கு பறை, மத்தளம், தாளம், தப்பட்டை போன்ற இசைக் கருவிகளைப் பயன்படுத்தி பக்தி உணர்வைத் தூண்டுவர் கிராமப்புறத்தில் இச்சமய நம்பிக்கைகள் முனைப்பாகக் காணப்படுகின்றன. சமூகத்திலே காணப்படுகின்ற சாதிப்பாகுபாட்டுடன் ஒட்டிச் சமய நம்பிக்கைகள் வேறுபடும் பண்பும் உண்டு. குறிப்பாகக் குறைந்த சாதியினரிடையே சிறுதெய்வ வழிபாடே நிலவுகின்றது எனினும் கல்வி வளர்ச்சியின் பயனாக இவ் வேறுபாடு அருகி வருகின்றது யாழ்ப்பாணத்து கோவில்களில் பக்தர் என்ற நிலையில் மக்களிடையே மறுக்கப்பட்ட சில மரபுகள் இன்று உடைத்தெறியப்பட்டுள்ளன.

ஆகமக்கிரியை மரபுகள் மாற்றமடைந்து வருகின்றன. சிறுதெய்வங்களுக்குரிய பூசை, படையல் போன்றவற்றை எல்லோரும் செய்கின்ற மரபும் தொடங்கப்பெற்று வளர்ந்து வருகின்றது. குறிப்பாகப் பெண்களுக்கு மறுக்கப்பட்டு வந்த இந்த பூசை மரபுகள் இன்று தளர்ந்துள்ளன. ஆலய நிர்வாகங்கள் பெண்களாலும் செய்யப்பட்டு வருகின்றன. தெல்லிப்பளையில் அமைந்துள்ள துர்க்காதேவி ஆலயம் இதற்குச் சான்ருக விளங்குகின்றது.

சமயநம்பிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காகச் செய்யப்படும் சடங்குகள் கோவிலுடன் தொடர்புறுமல் வீட்டோடு மட்டும் தொடர்புடையவும் உள்ளன; ஒரு குழந்தை பிறந்து மனிதனுகி இறக்கும் வரை பல்வேறு சடங்குகள் செய்யப்படுகின்றன. காதுகுத்துதல் அன்னப்பிரசன்னம், உபநயனம், பூப்புநீராட்டு, திருமணம், மரணக்கிரியை என்பன இந்நிலையில் முக்கியமானவையாகப் பேணப்பட்டு வருகின்றன. திருமணச்சடங்குகள் விரிவாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. எழுத்து ( கசாது எழுதுதல்' என்றும் கூறுவர் ) மாப்பிள்ளை அழைப்பு, தாலிகட்டுதல், சோறுகொடுத்தல், பொன்னுருக்கல், கால்மாறுதல் அம்மிமிதித்தல், அருந்ததிபார்த்தல், மோதிரம் மாற்றல், மோதிரம் எடுத்தல், பூதாக்கலம் பால்பழம் அருந்துதல், கண்ணுடி பார்த்தல், திலகமிடல், மாலைமாற்றல் பசுக்கன்றில் விழித்தல் போன்ற பல வேறு சடங்குகள் இன்றும் நம்பிக்கையுடன் யாழ்ப்பாண மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவரவர் பொருளாதார நிலைக்கேற்ப இச்சடங்குகளின் விரிவைக் காணமுடிகின்றது. மரணத்திலும் கூடியழுதல், வெற்றிலை கொடுத்தல், குளிப்பாட்டுதல், கொள்ளிவைத்தல் பால்ஊற்றல், எட்டுக்குப் படைத்தல், அந்தியேட்டி, திவசம், போன்ற பல சடங்குகள் வழக்கத்திலுள்ளன. இச்சடங்குகளில் பல்வேறு சாதிப்பாகுபாடுகளும் கணிக்கப்பட்டு வருவதும் கவனிக்கத்தக்கது. இன்று நவீன அறிவின் தாக்கத்தால் இச் சடங்குகள் பல கைவிடப்பட்டும் வருகின்றன. ஆனல் ஆரம்பத்தில் இச்சடங்குகள் குடும்ப உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் பெரும் உதவியாக இருந்தன. சொத்துக்களைப் பாதுகாக்கும் வழிகளாகவும் அமைந்திருந்தன. குப

நிகழ்ச்சிகளிலும் செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் இதை நிரூபித்து நிற்கின்றன. வீடுகட்டுதல், கிணறுவெட்டுதல், தொழில்களை ஆரம்பித்தல், போன்ற சந்தர்ப்பங்களிலும் சிறப்பான சில சடங்குகள் செய்யப்படுகின்றன. நவதானியமிடல் பொதுவான ஒரு சடங்காக பல சந்தர்ப்பங்களிலே செய்யப்படுவது செய்கின்ற காரியம் வளமாக நடைபெறவேண்டும் என்ற ஒரு அடிப்படையான நம்பிக்கையைப் பேணுவதாக அமைந்துள்ளது. சுபகாரியங்களில் முன்னின்று செய்யும் உரிமை சுமங்கலிகளுக்கே வழங்கப்பட்டது. இப்பண்பு இருபாலாரிடையேயும் பேணப்பட்டது. தற்போது இவ்வழக்கம் அவ்வளவாகக் கடைப்பிடிக்கப்படுவது இல்லை

சடங்கு என்ற சொல் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பொருள்களில் வழங்குவதற்கு அவற்றின் வேறுபாடே காரணமாகின்றது. திருமணம் என்ற சிறப்புப் பொருளையும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் செய்யப்படுகின்ற செயல்களையும் இச்சொல் குறிக்கின்றது. பிரதேசரீதியாக இச்சடங்கு முறைகள் வேறுபட்டமைவதால் யாழ்ப்பாணத்துச் சடங்குகள் என்னும்போது 'முறைகள்' என்ற கருத்தையும் இச்சொல் குறித்து நிற்கிறது.

யாழ்ப்பாணத்துச் சமய நடைமுறைகள் சில விரிவான நுண்ணாய்வுகளுக்குட்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை இம்முயற்சியிலே வழிகாட்டி நிற்கின்றது. இன்னும் பல நடைமுறைகள் விரிவான நுண்ணாய்வுக்குரியனவாயுள்ளன. இவற்றைப்பற்றி ஆய்வு மேற்கொள்ளவேண்டியது அறிஞர் கடன்.

---

''அரசன் ஒழிக'' என்று கைதிகள் கூச்சலிட்டாலும் கைதிகளுக்கு உணவு கொடுத்து அரசன் காப்பாற்றுகிறான்.

அது போலவே ''கடவுள் இல்லை'' என்று நாத்திகம் பேசுபவனையும் கடவுள் காப்பாற்றுகின்றார்.

— கிருபானந்தவாரியார்

பேத புத்தியைத் தருவது அஞ்ஞானம்; ஐக்கிய புத்தியைத் தருவது ஞானம்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

# திருமுறைகளில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

ப. கணேசலிங்கம்,
கலைப்பீடம், முதலாம் வருடம்

சைவத்தின் இருகண்கள் என விளங்குவன பன்னிரு திருமுறைகளும், மெய்கண்ட சாத்திர நூல்களும் ஆகும். சாஸ்திர நூல்கள் தலைவினையும் தன்னையும் உலகையும் பற்றி அறியவேண்டிய விஷயங்களை வரையறுத்துக் கூறும். தோத்திரங்கள் சாத்திரங்களால் அணைப்பட்ட தலைவனை நன்கறிந்து அவன்பால் பத்தி உண்டாகச்செய்யும் இருகண்களும் அவன்பால் உண்டாகச் செய்யும் பக்தி ஒன்றையே நோக்கும். காலத்தால் முந்தியன திருமுறைகள். இவை பல்லவராட்சிக் காலத்திலும் சோழர் காலத்திலும் இருந்த நாயன்மார்களால் பாடப்பட்டன என்பர். இதனைத்தொடர்ந்து வந்த சோழர் காலத்திலே இருந்த நம்பியாண்டார் நம்பி பன்னிருதிருமுறைகளாகத் தொகுத்தார் என்பது வரலாறு. சோழர் காலத்தின் இறுதிப் பகுதியிலே எழுந்தவையே சைவசித்தாந்த சாஸ்திர நூல்களாகும். சைவசித்தாந்தமும் திருமுறையும் சைவ சமயத்தின் உண்மைநிலையை எமக்கு எடுத்துக்காட்டுவனவாக விளங்குகின்றன.

தேவாரம் பாடிய நாயன்மார்கள் முதல் பெரிய புராணம் பாடியசேக்கிழார் பெருமான் வரை பாடியருளிய பாடல்களில் உள்ள கடவுள் பற்றிய கருத்துக்களே பின்பு சைவசித்தாந்தசாஸ்திர நூல்களுக்கு கருவூலமாக அமைந்தன எனலாம். இவர்கள் இறைவன் ஒருவன் உளன், அவனே சிவன். அவனை அறிந்து, வழிபட்டு அவனோடு இரண்டறக்கலந்து அத்துவிதமுத்தி பெற்றுப் பேரின்பம் அனுபவிப்பதற்கான உயிர்கள் எண்ணிறந்தன இருக்கின்றன. அவ்வுயிர்கள் இறைவனை அறியா வண்ணம் இருக்கின்றன. இவற்றினை நீக்குவதற்கு மனமொழி மெய்களால் வழிபட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிகளிலே முறைதவறாமல் நின்று ஒழுகுதல். இறைவனே உயிர்களுக்கு அத்துவித முத்திதந்து அருளுவான் என்ற சைவ சித்தாந்தக்கூற்றுக்கு எடுத்துக்காட்டாக அப்பர்சுவாமிகள் சரியைநெறியிலும், சம்பந்தசுவாமிகள் கிரியைநெறியிலும், சுந்தரசுவாமிகள் யோகநிலையிலும், மாணிக்கவாசகசுவாமிகள் ஞானநெறியிலும் வாழ்ந்துகாட்டி முக்தியடைந்தார்கள் என்பதைக் கொண்டு, பின்வந்த சாஸ்திரநூல்கள் நால்வகைநெறிகளையும் வற்புறுத்துவதைக் கொண்டு நாம் திருமுறைகளில் இருந்த சைவசித்தாந்தக்கருத்துகளையே பின்வந்த சாஸ்திரநூல்கள் பின்பற்றின எனலாம்.

முதலிற் திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் சைவசித்தாந்தக் கொள்கைகளை இன்னும் தெளிவாகவும் விரிவாகவும் கூறுகின்றது. சைவத்திறத்துச் சித்தாந்தம் என்னும் பெயரும் திருமந்திரத்திலேயே முதன்முதலாக வழங்கப்பட்டிருக்கக் காண்கின்றோம். 'வேதாந்தத்தெளிவாம் சைவசித்தாந்தத்திறன்' என்று சிவப்பிரகாசம் கூறுகிறது. இக்கருத்தனைத் 'சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்' என்றும் 'நலமான வேதாந்த ஞானசித்தாந்தமே' என்று திருமூலர் முன்னரே கூறியுள்ளார். திருமந்திரத்திலே முதலாந்தந்திரத்தில் யாக்கை நிலையாமை, முதலான நிலையாமை, பற்றிய செய்திகளும், அந்தணர் ஒழுக்கம், அரசர்கடமை முதலியனவும், அன்பு, பிறர்க்குதவுதல், கல்விச்சிறப்பு, மனவடக்கம் ஆகியனவும், கூறப்பட்டுள்ளன. இரண்டாம் தந்திரத்திற் சிவபெருமானுடைய ஐந்தொழில்கள், எட்டு வீரச்செயல்கள், சிவலிங்

கத்தோற்றம், தக்கனின் யாகம் முதலான புராணச்செய்திகள், உயிர்களின் (ஆன்மாக்களின்) வகைகளும், இயல்பும், கோவிலைக்காக்கும் வழிவகைகளும், அதன் அழிவால் உண்டாகும் தீமைகளும் பேசப்படுகின்றன, மூன்றாந்தந்திரம் யோகம் பற்றிய செய்திகளை கூறுகின்றது. நான்காம் தந்திரத்தில் மந்திரம் அல்லது உபாசனை மார்க்கம் விளங்கப்படுகின்றது. ஐந்தாம் தந்திரத்திலே சைவத்தின் பலவகைப் பிரிவுகள் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன, ஆறாந்தந்திரத்திலே திருநீற்றின் பெருமையும், குருவின் பெருமையும் விளக்கப்படுகின்றது. ஏழாம் தந்திரத்தில் குருலிங்க சங்கம வழிபாடுபற்றியும். புலனடக்கம் பற்றியும் விளக்கங்கள் உள்ளன. எட்டாம் தந்திரத்திலே சிவதத்துவ விளக்கம், சித்தாந்த விளக்கம் ஆகியன இடம்பெறும். ஒன்பதாம் தந்திரத்திற் குரு, குருமடம், பஞ்சாட்சர மகிமை, ஞானநடனச்சிறப்பியல்புகள் என்பன விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன. உண்மையிலே, திருமந்திரம் தமிழில் ஆகமப்பொருளையும் பின்வந்த சைவசித்தாந்தசாஸ்திரக் கருத்துகளுக்கும் வழி நூலாகவே விளங்குகின்றது.

சில திருமந்திரப் பாடல்களைப் பார்ப்போம் சைவசமயத்துக்கு ஆதாரமாயிருப்பது அன்பு இதனை 'அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்பதன்மூலமும் முப்பொருளான பதி, பசு, பாசம் என்பன அநாதியாய் உள்ளவை என்பதை 'பதி பசு, பாசம் எனப்பகர் மூன்றில்' என்றபாடல் மூலமும் சைவசித்தாந்தம் வலியுறுத்தும் மெய்யுணர்வு பெறுவதற்கு உயிருக்கும் உடம்பு இன்றியமையாதது என்பதை ''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்'' என்பதன் மூலமும் உயிருக்கு அழிவுஇல்லையாயினும், உயிர் ஆணவத்தின் பிடியில் இருப்பதனால் தன்னையும் அறியாது தலைவனையும் அறியாது, சடமாய் கிடந்து அழியும் என்பது கருத்து.

முத்தி நிலையிற் சீவன் (உயிர்) சிவனாகி, அத்துவித இரண்டற்ற நிலைஅடையும் என்பதை ''சீவனெனச் சிவனென்னவே றில்லை'' எனவும் சிவநெறியில் நிற்போர் தாம் இன்புறுவது போல உலகு இன்புற விழைவர் என்பதை ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனவும் கூறியிருப்பதன் மூலம் திருமந்திரம் சைவசித்தாந்தசாஸ்திர நூலுக்கு வழிகாட்டியாக இருந்தன எனத் திட்டவட்டமாகக் கூறலாம்.

தேவாரம் பாடிய மூவர்களில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பாடல்களை எடுத்து நோக்கினால் இத்திருமுறைகளிலும் இயற்கையழகு, மக்கள் வாழ்க்கை முறை, இறைவன் திருக்கோலம், சூழலமைவு, புராணக்கதைகள், இதிகாசநிகழ்ச்சிகள், வரலாற்றுக் குறிப்புகள் முதலியன அமைந்துள்ளன.

இறைவனுடைய தோற்றத்தைப் பற்றிக் கூறும்போது ''தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி'' எனத்தொடங்கும் திருப்பதிகம் முதலில் வந்துள்ளது. திருஞானசம்பந்தர் அடியார்களின் துயரைப்போக்க பலஅற்புதங்களை நிகழ்த்தினார். 'வாசிதீரவே' என்னும் திருப்பதிகத்தால் படிக்காசுபெற்று அடியார்களுக்கு அன்னதானம் செய்தமைமூலம் சைவசித்தாந்தம் கூறுகின்ற மூவகை வழிபாடுகளில் ஒன்றான சங்கமவழிபாடு வற்புறுத்தப்படுகின்றது. '' போகமார்த்த '' என்னும் திருப்பதிகத்தால் அனல்வாது செய்து சமணரை வென்றமையின் மூலம் புறமதத்தைக் கண்டித்தார் என்பதையும், திருவாலவாய் என்னும் மதுரையில் அரசுவீற்றிருந்த கூன்பாண்டியனுற்ற வெப்புநோயை ''மந்திரமாவது நீறு' என்னும்திருப்பதிகம் பாடியருளி, அரசனின் வெப்புநோயையே மாற்றி திருநீற்றின் மகிமையை

காட்டினார். மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் மேலான திருவைந்தெழுத்து என்னும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தைப் போற்றிப் பாடியருளிய திருப்பதிகமும், தம்மைவாது செய்யுமாறு வலிந்தழைத்த சமணரோடு தாழ்வாது செய்வதற்கு திருவருளை இணைந்து ''காட்டு மாவதுரித்துரிபோர்த்து'' எனத்தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

சிவபெருமானை வழிபட்டு உய்தியடையுமாறு அறிவுறுத்தும் முறையில் அடியவர்களுககு உய்திகாட்டும் பாடல்களும் உள்ளன. ''சித்தந் தெளிவீர்கள் அத்தனாரைப் பக்தி மலர்தூவ முக்தியாகுமே'' என்றும் ''உய்யலுறுவீர்களாம் ஐயனாருரைக் கையினால் தொழிலுறையும் வினைதானே'' என்றும் பாடுவர். இன்னும் இறைவழிபாட்டின் பெரும்பயனையும், இறைவனருளால் தாம் பாடியபாடல்களைப் பக்தியோடு பாடுபவர் வீடுபேறடைதல் திண்ணம் என்றும், தமது பாடல்களில் எடுத்துக்கூறுகிறார். வேதக்கருத்துக்களையும் ஐப்புலன்களையும் ஒடுக்கி, அரிய தவத்தொண்டு செய்தல் வேண்டுமெனவும், அவைதீக சமயங்களில் குறைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

தேவாரம் பாடிய திருநாவுக்கரசரின் பாடல்களிலே நடராஜ மூர்த்தியின் தத்துவத்தினை ''குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயில் குமிழ்சிரிப்பும்'' எனவும் தாம் செய்த குற்றம்நீக்கி ஆட்கொள்ளவேண்டும் என்பதை ''குற்றம்நீ குணங்கள் நீ கூடலாலவாயிலாய்'' என்பதன் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். இறைவனின் திருக்கோலப் பொலிவு, இறைவனை அடையும் வழியை மக்களுக்குக் கூறல், யாக்கை, இளமை, செல்வம் என்பன நிலையா எனக்கூறல், இறைவனே உயிர்களுக்குத் தஞ்சமும் துணையுமெனக் கூறல், இறைவனை குறையிரந்து வேண்டுதல், சமணரின்பயனற்ற வாழ்க்கையை வெறுத்துக்கூறுதல், ஐந்தெழுத்துத்தின் பெருமை, பிரணவத்தின் மகிமை முதலியனவும், அடியார் வழிபாட்டினையும் வற்புறுத்திக்கூறுவதன் மூலம் இத் திருமுறைகளிலுள்ள கருத்துக்கள் சைவசித்தாந்தத்தில் கூறப்படுவதைக் கொண்டு திருமுறை இவ் சைவசித்தாந்த நூல்களுக்கு வழிகாட்டியுள்ளன எனலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய தேவாரத்தினை நோக்கினால் இறைவனின் பெருமைகளைக்கூறும் போது 'பேராயிரம் உடையானை, எண்குணத்தினை, தொண்டரைப்பெரிதும்'' ''உகப்பானை'' என்றெல்லாம் பாடுவர். நாயனார் பாடியருளிய பாடல்களில் இறைவன் இயல்பு, உயிர்வாழ்க்கையின் இயல்பு, இறைவன் திருவருளைப்பெறுதலின் இயல்பு முதலியன வந்துள்ளன. இறைவன் எழுத்துக்கள் எல்லாவற்றுக்கும் முதலாகவுள்ள அகரவெழுத்தைப் போல் உலகில் முதல்வனாக உள்ளான் என்பர். சுந்தரமூர்த்தி சுவாமிகர் அடியார்களின் பெருமைகளை எடுத்துக்கூற அவர் அருளிய நூல் திருத்தொண்டர் தொகையாகும். இந்நூல்களிலிருந்து உதாரணங்கள் மேற்கோள்களும், பின்வந்த சைவ சித்தாந்த சாஸ்திர நூலான திருக்களிற்றுப் படியாரில் தரப்பட்டுள்ளன என்பதைக் கொண்டு திருமுறைகளில் காணப்படும் சைவசித்தாந்தக்கருத்துகள் பின்வந்த சாஸ்திரநூல்களுக்கு வழிகாட்டியுள்ளன என்பது நிச்சயமான ஒன்றாகும்.

மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகத்தை நோக்கினால் இவற்றிலே, இறைவனே ஆகமங்களை ஆன்மாக்கள் உய்திபெறுதற் பொருட்டு அருளிச்செய்தார். என்பதை இவர் பலவிடையங்களில் பாடியுள்ளார். ''மன்னுமாமலை மகேந்திரமதனிற் சொன்ன ஆகமம்' என்றும் ''ஆகமமாகி நின்றண்ணிப்பான்'' என்றும் பாடுவர். இறைவனின் பெருமையும் ஆன்மாவின் சிறுமையையும் கூறி, ஆன்மாவுக்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாவதையும் இறைவன் ஆன்மாவுக்கு எளியனாகிவந்து

ஆட்கொண்டருளும் வித்தகத்திறமையையும், இறைவன் குருமூர்த்தமாய் எழுந்தருளி வருவதைக்கூறும் முறையினையே பின்வந்த சைவ சித்தாந்த நூலான சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரத்தில் தம் முதல் குருவுமாகத் தவத்தினில் உணர்த்து தலைக் கூறுகிறது. மாணிக்கவாசகர்தம் குருவைப்பற்றிக் கூறும்போது, ''கோகழி யாண்ட குருமணி' என்றும் கூறுகின்றார். இவர்காலத்தவர் சிலர் நாத்திகம் பேசி திரிந்தும், வேதியர் சாஸ்திரம் பேசியதும், சமயவாதிகள் தத்தம் கோட்பாடுகளே அமைவானவை எனக்கூறித் திரிந்ததும், சிலர் மாயாவாதம் பேசித் தங்கள் வாக்கு வல்லபம் காட்டியதும் தாம் அவற்றால் அலைக்கப்பட்டாலும் தெய்வ உணர்வில் விடாப்பிடியாக மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாது, பிரமபத்தைக் கண்டித்தார்.

சேக்கிழார் பாடியருளிய பெரிய புராணத்தில் அடியார் பெருமையினைச் சொல்கிறார் இதன்மூலம் மூவகை வழிபாட்டின் ஒன்றான சங்கம வழிபாட்டினை இத் திருமுறை வற்புறுத்துகிறது. இப்புராணத்திலிருந்து உதாரணங்களும் மேற்கோள்களும் சைவசித்தாந்த நூலான திருக்களிற்றுப் படியாரில் தரப்பட்டுள்ளதைக் கொண்டு, காலத்தால் முந்தியனவாக இருக்கும் திருமுறைகளில் கூறப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பின்தோன்றிய சைவசித்தாந்த சாஸ்திர நூல்களுக்கு வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருந்தன எனக்கூறலாம்.

(தினகரன் சைவமஞ்சரியில் 30-5-83ல் பிரசுரிக்கப்பட்டது)

---

எல்லா மனிதர்களிடத்திலும் ஈஸ்வரன் இருக்கிறான். ஆனால் ஈஸ்வரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்கு காரணம்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

உன் அறிவான் எப்பொழுது அவிவேகம் என்னும் அழுக்கைக் கடக்குமோ அப் பொழுது கேட்கப்போவதிலும் கேட்டதிலும் பற்றின்மையைப் பெறுவாய்.

— ஸ்ரீமத் பகவத்கீதை

இந்து மன்றமும் அதன் இந்து நெறியும்

வளர்க — — — — — — வாழ்க

பல்கலைக்கழக மாணவர்களின் நலனில் அக்கறையுடன்
இயங்கும் ஒரே ஸ்தாபனம்

சிறந்த சுத்தமான உணவு வகைகளுக்கு




# பல்கலைக்கழக
# சிற்றுண்டிச்சாலை

நிர்வாகம் : வி. எஸ். செல்வராஜா

★ கலை, விஞ்ஞான பீடம் } திருநெல்வேலி
★ மருத்துவ பீடம்
★ சித்த ஆயுள்வேத பீடம், கைதடி

இந்து மன்றம் வளர்க! இந்து நெறி தழைக்குக !!



சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை
விரும்பிய டிசைன்களில் தெரிவுசெய்ய



# செல்லையா சிவபாதலிங்கம்

— வைரக்கல் நகை வியாபாரம் —

220, 1A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

☎ 23794

# சிற்பக்கலை மரபில் சிவலிங்கம்

**கலாநிதி, ப. கோபாலகிருஷ்ணன்**
இந்து நாகரிகத் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

சிவாகமங்கள் சைவத்தின் முதனூல்களெனச் சிறப்பிக்கப்படுகின்றன. அச்சமயம் சார்ந்த பல்வேறு அம்சங்களுக்கு அவை அடிப்படையாக அமைவதும் குறிப்பிடத் தக்கது. சித்தாந்தக் கருத்துக்களுக்கு மாத்திரமன்றிச் சிவனது திருவுருவ அமைப்புக்கும் திருவுருவவே வழிபாட்டு மரபுக்கும் சிவாகமங்களே பிரமாணமாக அமைவன. இவற்றில் சிவ வடிவங்கள் பற்றிய தனித்தனி விபரங்கள் ஒவ்வொரு மூர்த்தியினதும் பிரதிஷ்டைக்குரிய விதிமுறைகளுக்கு முன்னோடியாக அமைவன. சிவாகமங்கள் இருபத்தெட்டுனுள் காமிகாகமமும், காரணாகமமும் முக்கியத்துவம் பெறுகின்றன.

சிவாகம வழிபாடு திருவுருவத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வதாகும். திருவுருவங்கள் இறைவனை மனத்தாற் கிரகிப்பதற்கு உறுதுணையாக அமைவன. அத்துடன் இறைவனைப் பற்றிப் புராணங்கள் கூறும் தத்துவப் பொருள் செறிந்த தெய்விக வரலாற்றை அறிவதற்கும் உணர்வதற்கும் பெருந்துணை புரிவன. திருவுருவங்களும் அவற்றுக்கு நிகழும் கிரியைகளும் வழிபடுவோனது உள்ளத்திலே படிப்படியாகப் பரம்பொருட் தத்துவச் சிறப்பினை உணர வைப்பன. சமய அனுபவத்தை வளர்ப்பதற்கும் அவை உதவுவன.

சிவனுக்கெனச் சிறப்பாகவுள்ள திருமேனிகள் மூன்று நிலைகளில் உள்ளன. அவை முறையே அருவம், உருவம், அருவுருவம் என்பனவாகும். அருவம் ஊனக்கண்களுக்குப் புலப்படாதவாறு நுண்ணியது. அகக்கண் கொண்டு நோக்கும் யோகிகளுக்கு மட்டுமே புலப்படுவதாகும். உருவத்திருமேனி கை, கால், முகம் முதலிய உறுப்புக்களுடன் கூடியது. இதற்குரிய எடுத்துக் காட்டாக சிவனது சந்திரசேகரமூர்த்தியைக் குறிப்பிடலாம். இவ்விரண்டிற்கும் புறம்பானதாக உருவம் அருவம் கலந்த தனி நிலையில் உள்ளதே அருவுருவமாகும். இதில் உருவத்திற்கு வேண்டுவனவான கை. கால் முதலிய உறுப்புக்கள் இல்லாததனால் அருவமாகியும் கண்ணாற் பார்க்கும் பொழுதும் கையாலே தொடும் பொழுதும் உணரத்தக்கதாதலால் உருவமாகியும் இரு நிலைகளும் விரவப் பெறறதே இந்நிலை. இவ்வுருவத் திருமேனி சிவனுக்கு மட்டுமே சிறப்போடியமைந்தது. அதுவே சிவலிங்கமாகும்.

சிவனுக்குரிய திருவுருவங்கள் அவற்றின் தன்மைக்கேற்ப மேலும் மூன்றுவகையினுள் அடக்கலாம் அவற்றை முறையே **சலம், அசலம், சலாசலம்** எனக் காரணாகமம் வகுத்துக் கூறும். படிமங்கள் செய்த இடத்திலிருந்தோ அல்லது முறையாக வழிபாட்டுக்கு நிறுவப்பட்ட இடத்திலிருந்தோ அசைக்க இயலாவண்ணம் அல்லது அசைப்பது தவிர்க்கப்பட்ட நிலையில் இருப்பின் அவை **அசலம்** என்ற வகையில் அடங்குவன. படிமங்களை ஓரிடம் விட்டு வேறிடம் நகர்த்தக்கூடிய வண்ணம் இருப்பினும் அல்லது அத்தேவைக்காக உருவாக்கப்பட்டிருப்பினும் அவை **சலம்** என்ற பிரிவில் அடங்குவன. படிமங்களை இடம்விட்டு இடம் மாற்றக் கூடியதும் ஆனால் மாற்றக் கூடாதென்ற நோக்கில் நிறுவப் பெற்ற படிமங்கள் **சலாசலம்** என்ற வகையில் அடங்குவன. தாதுக்களாற் செய்யப்பட்டவை **சலம்** என்றும் கல்லாற் செதுக்கப்பட்டவை **சலாசலம்** என்றும் மண்ணினால் உருவானவையும் சுவரில் வரைந்தவையும் **அசலமெனவும்** ஆகமம் கூறும்.

**அசல**மெனக் கூறப்படும் படிமங்கள் ஆகமமரபின்படி நிறுவப்படும் இடம் கர்ப்பக்கிருகம் ஆகும். இதுவே கருவறை எனச் சுட்டப்படுவது. இதற்கு "மூலஸ்தானம்" என்ற பிறிதோர் பெயருண்டு. சிவாலயத்தில் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ள இடத்தையே இது குறிக்கும். சிதம்பரம் என்னும் தில்லைப் பெருங்கோயிலில் அருவுருவாகிய சிவலிங்கம் நிலைபெற்று விளங்கும் இடம் "திருமூலட்டானம்" எனச் சுட்டப்படுகின்றது. தென்னாட்டிலும் ஈழத்திலும் உள்ள சிவத்தலங்கள் யாவற்றிலும் கருவறையில் விளங்குவது சிவலிங்கத் திருமேனியாகும் வீதிக்கு எழுந்தருளும் மூர்த்தம் அம்மூலலிங்கத்தின் படிமத்திருமேனியாக அமையும். இவ்வகையில் மூர்த்தி விசேடம் பெற்று சிவலிங்கம் கருவறையில் மூலவிக்கிரகமாய் முதன்மை பெற்று விளங்கும். ஆகம முறைப்படி அமைந்த கோயில்களில் இலிங்க ஸ்தாபனம் இல்லாதகோயிலைக் காணலரிது.

**அசலம்** எனக் குறிக்கப்படும் பிரதிமைனம் பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்கு ஆகமம் குறிப்பிடும் பிரதிஷ்டை என்ற கிரியையுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதும் பொருத்தமாகும். திருவுருவங்களை உரியவாறு நிறுவும் கிரியையே ஆகமங்கள் பிரதிஷ்டை எனச் சுட்டுகின்றன. கும்பாபிஷேகத்தின்போது கோயிலில் உரிய கிரியைகளைக்கொண்டு நிகழ்த்தப்படும் **பிம்பஸ்தாபனம்** என்னுங் கிரியையின் போதே சிவலிங்கம் அசையாமல் கர்ப்பக்கிருகத்தில் நிறுவப்படுவதாகும். இலிங்கத்தை உரியவாறு நிறுவி, **அஷ்டபந்தனம்** என்னும் மருந்துக்கலவை, பிம்பம் அசையாமலிருக்கும் பொருட்டுச் சாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து இடம்பெறுவது பிரதிஷ்டை என்னும் கும்பாபிஷேகக்கிரியை, இக்கிரியையின்போது யாகசாலையில் உரியவாறு பூசிக்கப்பட்ட புனிதமான குடநீரினால் இலிங்கம் நீராட்டப்படுதல் முக்கிய அம்சமாகும். இக்கிரியையின் பின்னர் இலிங்கம் அசைக்கப்படாமல் நிறுவப்பட்ட இடமாகிய கர்ப்பக்கிருகத்தில் நிலைபெற்று இருத்தல் வேண்டும் என்பது விதி. இந்நிலையைத் தொடர்ந்து உரிய நித்திய நைமித்திகக்கிரியைகள் மூலம் வழிபாடு நிகழ்வதாகும். எனவே **அசலம்** என்று குறிக்கப்படும் திருமேனி பற்றிய விளக்கத்திற்கு ஆகமம் விதித்துக்கூறும் கும்பாபிஷேகம் பற்றிய விளக்கமும் துணை செய்கிறது. இக்கிரியையின் பின்னர் சிவனது நிறைவான தெய்விகசாந்நித்தியம் இலிங்கத்தில் அமைந்து விளங்குவதாகும் என்பதே சைவரது உறுதியான நம்பிக்கை. அந்நம்பிக்கையின் அடிப்படையிலேயே அது நிறுவப்பட்டும் வழிபடப்பட்டும் வருவதைக் காணலாம். சுருங்கக்கூறின் சிவனது அடையாளமே இலிங்கம்.

சுவேதாஸ்வதர உபநிடத்தில் யோனி, லிங்கம் என்ற சொற்கள் காணப்படுகின்றன. இங்கு இலிங்கம் என்பது 'அடையாளம்' அல்லது 'அம்சம்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் நுண்ணிய உடம்பு என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தியானத்திற்குரிய அடையாளமாக விளங்கும் இலிங்கத்தில் தேவையேற்படும் காலத்தில் இறைவன் தோற்றம் பெறுவன் என்ற கருத்தைப் புராணங்கள் தரும் விபரங்களிலிருந்து நாமறியலாம். சிவலிங்கவழிபாட்டின் தொன்மை பற்றிய கருத்துக்கு இலிங்க புராணத்தில் இடம்பெறும் பிரம்மா விஷ்ணு அடிமுடி தேடிய கதை முக்கியத்துவமுடையதாகும். சிவபுராணம் இலிங்கத்தை பிரணவத்தோடு தொடர்புபடுத்துகின்றது. இவ்வாறு புராணங்கள் இலிங்கத்தைச் சிவனுக்குரிய அடையாளமாகவே குறிப்பிடுகின்றன. இராமன் தனக்கேற்பட்ட தோஷங்களிலிருந்து விடுபட இராமேசுவரத்தில் இலிங்கமொன்றினை நிறுவி வழிபாடு செய்தான் என்பது மரபு.

சிவலிங்கத்தின் அமைப்பு மிகவும் நுட்பமானது. அதன் அமைப்பு முறைபற்றி ஆகமங்களும் சிற்பநூல்களும் மிக விரிவாகக் கூறுகின்றன. சிவனது ஏனைய வடிவங்களுக்கு அடிப்படையாக விளங்குவதோடு, கருவறையில் பிரதான மூர்த்தியாக நிறுவப்படும் காரணத்தாலும் இதன் அளவு முறைபற்றி இந்நூல்கள் விரிவான விளக்கங்களை உள்ளடக்கியுள்ளன. இலிங்கத்தினை உருவாக்குவதற்கு வேண்டிய கற்களைத் தேர்ந்தெடுக்கும் முறைபற்றியும் தெளிவான கருத்துக்கள் காணப்படுகின்றன. பூர்வ காரணாகமம் 'லிங்கலக்ஷண விதிப் படலத் தில் இதனோடு தொடர்புடைய பல விளக்கங்

களைத் தருகின்றது. பூர்வகாமிகாகமும் இதேபோன்று ஒரு தனிப்படலத்திலேயே இதுபற்றி விரித்துரைக்கின்றது. மானசாரம் என்ற சிற்பநூல் 'லிங்கவிதானம்' என்ற தலைப்பிலும் காசியப சில்பசாஸ்திரம் 'சிவலிங்க லக்ஷணம்' என்ற தலைப்பிலும் சில்பரத்தினம் 'லிங்க லக்ஷணம்' என்ற தலைப்பிலும் குறிப்பிடுகின்றன.

காரணாகமம் இருவகை இலிங்கங்களைக் குறிப்பிடுகின்றது அவை முறையே ''ஸ்தாவரம்'' ''ஜங்கமம்'' எனப்படுவன. ஸ்தாவர இலிங்கம் கருவறையில் நிறுவப்பட்டு வழிபடப்படுவதாகும் ஜங்கமம் பூசைக்காக கொண்டு செல்வதற்குகந்தது

இலிங்கம் அமைப்பதற்குரிய பொருட்களைப் பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. கல், உலோகம், மண். மரம், நவரத்தினம் ஆகிய பொருட்களே உகந்தவை. சிவலிங்கமானது அடியிலிருந்து மேல் நோக்கி பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என மூன்று அங்கங்களாக ஒரே அமைப்பில் விளங்கும். இவற்றில் பிரமபாகம் கருவறையின் தரைமட்டத்திற்குக் கீழேயும் விஷ்ணுபாகம் தரைமட்டத்திற்கு மேல் ஆவுடையாருள்ளும் மறைந்திருக்கும். மூன்றாவது கூறிய உருத்திரபாகம் ஆவுடையாருள்ளும் மேல் மட்டத்திலிருந்து ஓங்கியும் நிற்கும். இங்ஙனம் வெளியே தெரியும் பாகம் பூஜாபாகம் எனப்படும்.

இலிங்கம் அமைக்கப்படுவதற்குரிய பொருட்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. இலிங்கத்திற்குரிய கல்லைத் தேர்ந்தெடுப்பது ''சிலாகிரகணம்'' எனக் குறிப்பிடப்படுகின்றது. உரிய தகைமை வாய்ந்த சிற்பி ஆசாரியனுடன் நல்ல நிமித்தங்களை அனுசரித்து கல்லைத் தேர்ந்தெடுக்கப் புறப்படுதல்வேண்டும். உரிய கல்லைத் தேர்ந்தெடுக்கும் நுட்பம் சிற்பிக்கு அனுபவ ரீதியிலும் சாத்திரரீதியிலும் தெரிந்திருத்தல் அவசியமாகும். மலை, மலையையண்டிய பிரதேசம், வனம், உபவனம், ஆற்றங்கரை, ஆகிய இடங்களிலிருந்து இலிங்கத்திற்குரிய பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன. குளிர்மையானதும் பசுமையானதுமான இடத்தில் கல் சேகரித்தால் அது தண்ணீர் பசுமையுடன் கூடியதாக இருக்கும். ஆகவே அவ்விடத்திலுள்ள கல் **வாருணி** என அழைக்கப்படும். இது இலிங்கத்திற்குரியது. நெல்வயல், பால்மரம் வளரும் இடம் ஆகிய பிரதேசங்களிலிருந்து பெறப்படும் கல் **மாஹேந்திரி** எனப்படும். பலாச, கருங்காலி, வேம்பு ஆகிய மரங்கள் உள்ள இடத்திலும் மலைகள் காணப்படும் இடத்திலும் நீர் குறைந்து காணப்படும் இடத்திலும் உள்ள கல் **வாயு சிலா** எனப்படும். இவைகளும் இலிங்கம் உருவாவதற்குகந்தவை. நாவல் மற்றும் கானல் நீர் உள்ள இடத்திலுள்ள கல் **அக்கினிசிலா** என்ற பெயரைப் பெறும். இவ்வகையைச் சார்ந்த கல் இலிங்கத்திற்கு உகந்ததல்ல. இலிங்கத்திற்குரிய கல் நல்ல நிறமுள்ளதாகவும் கனமுள்ளதாகவும், மழமழப்பாகவுள்ளதாகவும் ஆற்றுநீரில் அமிழ்ந்து அழுத்தம் பெற்றதாகவும் நல்ல அகலம் நீளம் கொண்டதாகவும் அமைதல் சிறப்பாகும். கற்களில் எழும் ஓசையைக் கொண்டு அவற்றின் பேதங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. கற்கள் பாலை, **யுவதி, விருத்தை** என்றும் **புருஷசிலை, ஸ்திரீசிலை, நபும்ஸகசிலை** என்றும் பாகுபடுத்தப்படுகின்றன. ஆகமத்தில் புருஷ சிலையினால் இலிங்கத்தை உருவாக்க வேண்டுமெனவும் ஸ்திரீ சிலையினால் பீடமாகிய பிண்டிகையைச் செய்ய வேண்டுமெனவும் இலிங்கத்தின் அடித்தளத்தின் ஆதாரமாகிய பாதாதாரத்தை நபும்ஸகசிலையினால் செய்ய வேண்டுமெனவும் விதிக்கப்பட்டுள்ளது.

இலிங்கம் அமைய வேண்டிய அளவு முறைகளின் நுட்பங்களையும் ஆகமங்கள் கூறுகின்றன. கோயிற் கட்டிட அமைப்புக்கும் இலிங்க நிர்மாணத்திற்குமிடையே நெருங்கிய ஒற்றுமை உண்டு. இலிங்கத்தின் சில அளவு முறைகள் கோயிலின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு நிச்சயிக்கப்படுகின்றன. இலிங்க நீளத்திலிருந்து அகலத்தைக் கொள்ளும் முறையை அடிப்படையாகக் கொண்டு விளங்குபவையே **நாகர, திராவிட, வேஸர** இலிங்கங்கள்.

கல்லிலே அமைந்த இலிங்கங்கள் ஆலய வழிபாட்டிற்கு ஏற்றவை. இலிங்கங்கள் பல வகைப்படுவன. **சுவயம்பு, தைவதம், மானுஷம், காணபம், ஆர்ஷிகம்** ஆகிய இலிங்க வகைகள் குறிப்பிடத்தக்கன. மற்ற எவராலும் தாபிக்கப்படாமல் தானேதோன்றியது சுவயம்பு லிங்கம் என்று சிறப்பிக்கப்படுகின்றது.

சுவயம்பு லிங்கங்கள் பல வகையின சில பழுதடைந்து காணப்படுவன. சில மெல்லிய தோற்றத்தவை. இவற்றுக்கு நீளம் அகலம் உயரம் முதலிய அளவைகளில் வரையறையில்லை சில பீடத்துடன் காணப்படுவன. சிலவற்றுக்குப் பீடம் இருக்காது. சில கோயில்களிலும் காடு, மலை, ஆறு, புண்ணிய தீர்த்தம், தலங்கள் ஆகிய இடங்களிலும் விளங்குவன. அவை எந்நிலையில் உள்ளனவோ அந்நிலையிலேயே அவை பூசிப்பதற்கு உகந்தவை.

மகரிஷிகளால் நிறுவப்பட்டவை ஆர்ஷ இலிங்கமாகும். மனிதர்களால் தாபிக்கப்படுவது மானுஷ இலிங்கமாகும். கணதேவதைகளால் பூசிக்கப்படுவது காணபம் எனப் பெயர் பெறும். மானுஷ இலிங்கத்தை ஆகமங்களும் சிற்ப நூல்களும் மேலும் எட்டுவகையில் கூறுகின்றன. அவையாவன **சமகண்டம், வர்த்தமானம், சைவாதிகம், ஸ்வஸ்திகம், சர்வதோபத்ரம், சர்வதேசிகம் த்ரைராசிகம், தாரா** என்பனவாகும்.

முகலிங்கம் இலிங்க வகைகளுள் குறிப்பிடத்தக்கது. இலிங்க நாளத்தின் உருத்திர பாகத்தில் இலிங்கத்திலிருந்து புடைப்புச் சிற்பமாக மார்பளவிலான உருவங்கள் அமைக்கப்படுவன. இவை சதாசிவ மூர்த்தியின் முகங்களாகக் கொள்ளப்படுவன.

இலிங்கங்களின் சிகரத்திற்கேற்ற வடிவம் கொண்டதாக இலிங்கபீடம் அமையும். நாகர இலிங்கத்திற்கு நாகர பீடமும் திராவிட இலிங்கத்திற்கு திராவிடபீடமும் வேஸர இலிங்கத்திற்கு வேஸர பீடமும் செய்யப்படவேண்டும். நாகரம் என்ற பீடம் நான்கு கோணங்களையுடையதாகவும் திராவிடம் என்ற பீடம் எட்டுக்கோணங்களையுடையதாகவும் வேஸரம் என்னும் பீடம் வட்டவடிவமானதாகவும் இருக்கவேண்டுமென சிற்பநூல்கள் கூறுகின்றன. இலிங்கத்தின் பீடம் கோமுகத்துடன் இருக்கவேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது. பீடத்தின்மேல் மட்டத்தில் அபிஷேகநீர் செல்வதற்கேற்றவாறு கரையோடுகூடிய நீர்த்தாரையும் அமையும். இலிங்கத்தின் பீடம் பல்வேறு அலங்கார முறைகளைக் கொண்டு விளங்குவன. பீடத்தில் இடம்பெறும் முக்கிய அம்சங்களாவன **உபானம், ஜகதி, குமுதம், பத்மம், கம்பம், கண்டம் பட்டிகை, நிம்நம், கிருதவாரி** என்பனவாகும். இப்பீடங்களுக்குரிய அளவு முறைகளும் உண்டு.

இலிங்கத்தையும் பீடத்தையும் கர்ப்பக் கிருகத்தில் அமைப்பதற்குமுன் கர்ப்பக் கிருக தரைமட்டத்தில் இலிங்க பீடத்தைத் தாங்குவதற்காக நான்கு கற்களை ஸ்வஸ்திகமாகப் பதித்தல் அவசியமாகும். இவற்றுக்கு **பாதசிலை, ஆதாரசிலை, பிரமசிலை** என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இந்த பிரமசிலையின் நடுவில் இலிங்க நாளத்தின் பிரம்ம பாகம் பதிக்கப்படும். பாதசிலையும் பீடத்தைப்போன்று முக்கியத்துவமுடையது. எனவே இதற்கும் இலக்கண விதிகள் உண்டு.

இவ்வாறு சிற்பக்கலை மரபின்படி உருவாக்கப்பட்டு கர்ப்பக்கிருகத்தில் நிறுவப்படும் சிவலிங்கம் சூக்கும லிங்கமாக விளங்கி, உலகில் உள்ள உயிர்கள் ஒடுங்கும் இடமாகவும், லயப்படுவதற்குரிய நிலைக்களனாகவும் அமையும் சிறப்பினைப் பெறுகின்றது. சிற்பத் திறனில் உருவாகிய இலிங்கத்திற்கு பிரணவமாயமையுந் தத்துவ விளக்கமும் கொடுக்கப்படுகின்றது. நாதமாகிய அகரம் சிவத்தையும் விந்துவாகிய உகரம் சக்தியையும் கலையாகிய மகரம் பரத்தையும் குறிப்பதாகும். திருமூலர் திருமந்திரத்திலே, ஏழாந் தந்திரத்தில் ஓங்காரத்தை சிவனுருவாகிய தாபரலிங்கமாகச் சிறப்பித்துக் கூறுமிடத்து,

இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற்கண்ட நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்கம் அகாரநிறை விந்து நாதமே

எனக் குறிப்பிடுகின்றூர்.

சிவன் மந்திரவடிவினன் என்றநிலை இங்கு வற்புறுத்தப்படுகின்றது. திருமூலரது இக்கருத்துக்குப் பொருத்தமாக ஸ்ரீ சுாசியப சில்ப சாஸ்திரம் கூறும் கருத்தும் அமைகின்றது. சிற்ப மரபைக் கூறும் வகையால் தத்துவ விளக்கத்தையும் இந்நூல் தருவது குறிப்பிடத்தக்கது. இச்சிற்பநூல் இலிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, நாதமே இலிங்க வடிவமென்றும் பிந்துவே அதன் பீடமென்றும் கூறும். இலிங்கமானது சிவஸ்வரூபமென்றும் பீடமாவது சக்திஸ்வரூபமென்றும் இலிங்கமும் பீடமும் சேர்ந்து ஒன்ருகவே இருப்பதால் நெருப்பும் வெப்பமும் ஒன்ருகச் சேர்ந்து இருப்பது போன்று சிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்ருகவே விளங்குவதாக இந்நூல் விளக்கி நிற்கின்றது.

இவ்வுலகனைத்தும் ஊடுருவி நிற்பது ஆனந்தமயமான சிவலிங்கமே என்ற கருத்தும் திருமந்திரத்தில் இடம் பெறுகின்றது. இதனைப் புறவுலகனைத்தையும் சிவவடிவில் காணும் ஞானக்காட்சி எனக் கொள்ளலாம். இந்நிலையில் சிவலிங்கத்தை அண்டலிங்கமாகப் போற்றுமிடத்துத் திருமூலர் ''தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணும்'' எனக் குறிப்பிடுகின்றூர். இதன்படி நிலப்பகுதி சக்தியாகிய பீடம் என்றும் விண் இலிங்கம் என்றும் சிறப்பிக்கப்படுகின்றது.

இயற்கை அழகைச் சிவவடிவிற் காணுவதைப் போன்று ஐம்பெரும் பூதங்களையும் சிவலிங்கத்திற் காணும் மரபும் உண்டு. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களோடு சூரியன், சந்திரன், இயமானன் ஆகிய மூன்றுஞ் சேர்ந்து இறைவன் அட்டமூர்த்தியாகக் குறிக்கப்படுவன் தென்னுட்டில் பஞ்சபூதத் தலங்களில் இயற்கைச் சக்திகள் தெய்விக நிலையிற் போற்றப்படுகின்றன. திருவாரூர் (அல்லது காஞ்சி) பிருதிவி தலமாகவும், திருவானைக்கா அப்புத்தலமாகவும், திருவண்ணுமலை தேயுத்தலமாகவும், காளத்தி வாயுத்தலமாகவும், சிதம்பரம் ஆகாயத் தலமாகவும் போற்றப்படுகின்றன. இத்தலங்களில் உள்ள சிவலிங்கங்கள் இவ்வகையிற் சிறப்புப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோயிலில் இடம்பெறும் பிரதிஷ்டையாகிய கும்பாபிஷேகத்திலும் இவ்வியற்கைத் தத்துவத்தினை உணர முடிகிறது. எங்கணும் வியாபித்து விளங்கும் இறைவன் இவ்வியற்கை சக்திகள் வழியே, அதாவது ஆகாயம், காற்று, தீ, நீர், என்ற வரிசையில் படிப்படியாக ஒடுங்கி பிருதிவி அம்சம் பொருந்தி கர்ப்பக்கிருகத்தில் உறையும் சிவலிங்கத்தில் இறுதியில் நிறைவெய்துவதும் குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகக் கிரியையில் ஆகாய வெளியிலமைவது அக்கிரியை நிகழத்தேவைப்படும் யாகசாலை, அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனேடு நெருங்கிய தோழமை பூண்ட வாயுவும் ஓமகுண்டங்களில் ஒருங்கு உறைவன. வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர். கும்பாபிஷேகத்தின் பின்னர் இறைவன் இறுதியில் மண் அம்சம் வாய்ந்த சிவலிங்கத் திருவுருவில் நிலைபெறுகின்றூன். இதனையே இக்கிரியை உட்பொருளாகக் கொண்டுள்ளது. இவ்வாறு பாரெங்கணும் நிறைந்து விளங்கும் இறைவனைச் சிவலிங்கத்தில் சிறப்பாகப் புலனுகும்படி செய்யும் கிரியையும் சிவலிங்கதத்துவத்தினை உணரத்துணைபுரிவதாகும். இவ்வகையில் உலகும் உயிர்களும் பூதங்களும் சிவனிடத்தே பொலிவு பெறும் காரணத்தால் ''எல்லாம் சிவமயம்'' எனச்சைவர் போற்றுவர்.

சிற்பக்கலைஞனது கைவண்ணத்திறனலன்றி சுயம்புவாக அதாவது தான்தோன்றியாகவுள்ள சிவலிங்கங்கள் உறையும் தலங்கள் 'விடங்கத்தலங்கள்'' எனத் தென்னகத்திற் போற்றப்படுகின்றன. இவ்வகையில் ஏழு தலங்கள் சிறப்படைகின்றன. 'விடங்க' என்பது உளியாற் செதுக்கப்படாமல் தான்தோன்றியாக விளங்குவதைக் குறிக்கும்'

சிற்பக்கலைமரபில் உருவாகிய சிவலிங்கமும் தான்தோன்றியாகவுள்ள சிவத்திருமேனியும் உயர்ந்த தத்துவார்த்த சிறப்புடன் சைவரது வழிபாட்டுச் சின்னமாக போற்றப்பட்டு வருவதை நாம் வரலாற்று ரீதியிலும் அறியமுடிகின்றது. இவ்வாறு சிவாகம வழிபாட்டு மரபில் முதன்மை பெறும் இலிங்கத்தின் சிற்பவியல் நுட்பங்களை சிவகாமங்கள் பிரமாணமாக எடுத்துக்கூற, சிற்பநூல்கள் நடைமுறை நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலும் விளக்கிக்கூறுவதை அவதானிக்கலாம். அவற்றை ஒப்புநோக்கிப் பயன்படுத்துவதன் மூலம் சிவலிங்கத்திருமேனியின் அமைப்பினையும் தத்துவத்தினையும் சிறப்பாக அறியும் வாய்ப்புண்டு.

## உசாவியவை


**காமிகாகமம் (பூர்வபாகம்), ஷண்முகசுந்தர முதலியார் கொ. (பதி) சென்னை, 1889**

**சில்பரத்தினம், தேவ நாதாச்சாரியார் (பதி), தஞ்சை, 1961**

**திருமந்திரம், உலகநாத முதலியார், வி· (பதி), சென்னை, 1924**

**பூர்வகாரணகமம், ஷண்முகசுந்தர முதலியார், கொ. (பதி), சென்னை, 1900**

**மானசாரம், (பகுதி 1) வெங்கட சுப்ரஹ்மண்ய சாஸ்திரி, நீ. வை. (பதி) தஞ்சை, 1963**

**லிங்கபுராணம், லக்ஷ்மி வெங்கடேஸ்வரர் நீரரவி அச்சகம், பம்பாய்**

**ஸ்ரீ காசியபசில்ப சாஸ்திரம், சுப்ரஹ்மண்ய சாஸ்திரி, கே. எஸ், (பதி) தஞ்சை, 1960**

**அருணசலம், ப. திருமந்திரக்கோட்பாடு, சென்னை, 1982**

**கணபதி ஸ்தபதி, வை. சிற்பச்செந்நூல், சென்னை, 1978**

**கைலாசநாதக்குருக்கள், கா. சைவத்திருக்கோயிற் கிரியைநெறி, கொழும்பு, 1963**

S'vetasvataropanisad, Swami Tyagisanard (ed.), Madras. 1971

# நல்லைக் கந்தன் பிள்ளைத்தமிழ்

வ. கோவிந்தபிள்ளை

## தாலப் பருவம்

பொங்கிடு மலைகட லூடொளி வீசிடு
பொற்கதிர் முகவழகும்
பொன்னொளி மின்னொளி யென்னொளி காட்டிடு
புத்தொளி விழியழகும்
தங்கிய கலையொளி பூடொளி வீசொளி
தாரணி மார்பழகும்
தண்ணொளி யீந்திடு முத்தொளி யின்னொளி
தருகுறு நகையழகும்
பங்கைய மென்னொளி அழகொளி விரிதரு
பரிபுர கழலழகும்
பரிவுறு மருளென அறிவென வேல்நிதம்
பயில்திருக் கரவழகுஞ்
சங்கம மாகியொர் மதலையாய் நல்லையில்
தவமுருக் காட்டிடவும்
தந்துயர் மறந்துநின் றுன்புகழ் பாடிடத்
தாலோ தாலேலோ.

## சப்பாணிப் பருவம்

ஓதமுறு மறிகடலு முலகமுந் திக்குகளு
முருமா றிடாத புவனம்
உண்டான அணடங்கள் வானவர்க ளுயிர்கள்திரு
மேனியி லமைந்த தன்றிப்
பேதமற வேறில்லை என்னவோ ருருவமாய்ப்
பெருவியன் வடிவு கொண்டு
பெருமைபொலி பேரழகுஞ் சீருடன் இளமையும்
பிறக்கின்றி நின்ற காலை
ஆதரம் பெருகவும் அச்சமிக் காளவும்
ஆரிதனை நின்று கண்பார்
அழியாத சிர்வரம் பெற்றதா லழியாத
அழகினை யீண்டு கண்டேன்
நாதனே என்றுகு ருலைமெழுகு போல்நின்ற
நற்செயலைக் காட்டி வைத்த
நற்றமிழ்ச் சுவைகண்ட நல்லைவளர் கந்தனே
சப்பாணி கொட்டி யருளே.

திருவருள் வயத்திறைற் பெற்றவொரு தலைமையும்
செல்வமும் போக வென்றே
செய்தபெரு சூழ்ச்சியிற் புயலூடு சிக்கியுளர்
சிறுகலம் போலொத்து நான்
உருமாறி யருள்நாடி ஓலமிட் டுன்பதம்
ஓவென்று தாழ்ந்தி றைஞ்ச
உருகியுள் மடியவ ருறுந்துயர் பொறுதநீ
ஓடோடி வந்த ணைந்தே
கருமுகிலை யொத்துவிழி பொழிநீர் மிகுத்திடுதல்
காணப்பொ றுத்தி டாதே
கஞ்சமல ரனையதிரு வருள்கண்து காமதாற்
கண்மலரை நீவி விழிநீர்
பெருகாம லாறுத லளித்தமுரு காவிறைவைப்
பேரிளந் தாரி யாகிப்
பெருமகிமை யுறுநல்லைப் பதியில்வளர் கந்தனே
சப்பாணி கொட்டி யருளே.

## வருகைப் பருவம்

அழகு விளையும் அரிய உருவை
அடியார் காண வருகவே
அகமும் முகமும் மலர மயிலில்
அழகு பொலிய வருகவே
மழலை பழகு தமிழின் நறவ
மதுர வருக வருகவே
மலரும் மதியும் பொழியும் எழிலின்
நகையன் வருக வருகவே
பழகு நடையும் கமல முகமும்
பழகுங் கௌரி புதல்வனே
பவள விதழும் கருணை விழியும்
உறையும் நிலையம் வருகவே
விழவு முகிரும் வடிவும் நீறு
வீரவும் திலகன் வருகவே
விழியும் மனமும் குளிர நல்லை
நகரின் மதலை வருகவே.

கவிஞர் சித்தந் தனிலு திக்குங்
கவிதை யாறு வருகவே
கவிதை தோறும் பொருள் சுரக்கும்
அழகு முத்தம் வருகவே
செவிந யக்கும் சுவைப யக்கும்
தமிழின் இனிமை வருகவே
தெருள ளிக்கும் இருளொ ளிக்கும்
தெய்வ வருக வருகவே
கவிதை யாகித் தமிழு மாகிக்
கவியு மாகி வருகவே
கனிவு கொண்டு பொருள ளிக்கும்
கந்த வருக வருகவே
புவிபு ரக்க நல்லை வந்த
புனிதன் நித்தம் வருகவே
புனித கங்கை நதிக ளிக்கும்
இனியன் வருக வருகவே.

## சிறுபறைப் பருவம்

ஆயிரங் கிங்கரர்கள் சூழ்நதுநின் றென்னுடைய
ஆவியைச் செகுப்ப ரேனும்
அண்டமுக டிடிபட்டெ னுச்சிமிசை தொம்தொமென்
றடுக்குறினு மஞ்ச கில்லேன
நீசெய்த தமிழ்கற்ற பேர்மாயக் கலையையே
நீடுகுடை யிற்தரிக்க
நெஞ்சுழித் தீகண்ட நிலையாகி யனுதினமும்
நின்பதந் தஞ்சமென்றே
காயோடு தளிரிலைகள் கனிகளென் பனவின்றிக்
காலங்க ழிக்க நேரக்
கலைகள் பொலி திருநடனக் காட்சிபல காட்டியுன்
கருணையைத் தெரிய வைத்தாய்
வேய்சிகர்த் தோளுடைய வள்ளிகுற மாதினை
விரும்பியே மணந்த குகனே
மேலான நல்லையிற் காட்சிதந் துளமகிழச்
சிறுபறை முழக்கி யருளே.

With Best Compliments from

23628

*Arthe Jewellers*

**225, KASTHURIAR ROAD, JAFFNA.**

"சுப்பேப் ராங்க்" ஸ்தாபனத்தார் இந்து நெறிக்கு தமது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள் !

# SUPERB RANK
# சுப்பேப் ராங்க்

- ஆங்கில மருந்து வகைகள்
- பால்மா வகைகள்
- பட்டர் வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- தயிர் யோக்கட் (Yoghurt)
- உணவுப் பொருட்கள்

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் தெரிவுசெய்ய சிறந்த இடம்

**சுப்பேப் ராங்க்**

Palaly Road,
Thirunelvely, Jaffna.

பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

---

**With best Compliments from :**

# KARAN TEXTILES
and
# RAMKARAN BOOK DEPOT

**Thirunelvely Junction, ::: Jaffna.**

T'Phone : 2 2 7 6 2

*With best Compliments from :*

# KALKISONS

**(Importers and Hardware Merchants)**

**147, Stanley Road,** **JAFFNA.**

With Best Compliments from

# UNION TRUST & Investments Ltd.

122. K. K. S. Road, :: :; :; JAFFNA.

☎ 24267

# நாட்டியகரணங்கள்

**வி. சிவசாமி**, எம். ஏ
தலைவர், சம்ஸ்கிருதத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

மனிதன் தோற்றுவித்த நுண்கலைகளிலே காலத்தால் முந்தியது நாட்டியக்கலையெனக் கருதப்படுகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும், அவ்வந்நாடுகளின் சமூக, சமய, பண்பாட்டு நிலைகளுக்கேற்ப இக்கலையும் வளர்ந்து வந்துள்ளது. இந்தியாவில், இவ்வழகியற் கலை மிகப் பழைய வரலாறு கொண்டதாகும். இங்கு இக்கலை பெரும்பாலும், சமயச்சூழ்நிலையிலே, சமயக் கருத்துக்களையும், தத்துவக் கருத்துக்களையும் புலப்படுத்தி மக்களை ஆன்மீகவழிப்படுத்தும் சாதனமாகவே பெரும்பாலும் விளங்கி வந்துள்ளது அழகியலும், ஆன்மீகமும் இக்கலையில் ஒன்றிணைந்து விளங்குகின்றன. உலகிலேயே மிகச்சிறந்த சிலகலைவடிவங்கள் இதன் வெளிப்பாடுகளாக உருவாகின. இவ்வகையிலே, **நடராஜ** வடிவமும், **பரதநாட்டியமும்** நன்கு குறிப்பிடத் தக்கவை.

வரலாற்றுரீதியிலே நோக்குப்போது, சிந்துசமவெளி நாகரீக காலத்திற்கு முன்பே இந்தியாவின் நடனக்கலை அரும்பத்தொடங்கிவிட்டது. இந் நாகரீகச்சின்னங்களிலே கிடைத்துள்ள வெண்கலத்தாலான நடனமாதின் சிலையும், தலையற்ற மனிதனின் கற்சிலையொன்றும் குறிப்பிடத்தக்கவை; பின்னையதன் கீழ்ப்பகுதி அமைந்துள்ளவாற்றினை உற்றுநோக்கிய சேர் ஜோன்மார்சல் என்னும் தொல்லியலாளர் இது நடராஜவடிவத்தின் முன்னோடியென்றார். மேலும், இக்காலத்தினையடுத்துவந்த வேதகாலத்திலே நடனக்கலை நனகு நிலவியதற்கான அகச்சான்றுகள் வேத இலக்கியத்தில் உள்ளன. ஆகவே, தொல்லியலும், இலக்கியமும் இந்திய நடனக்கலையின் தொன்மைக்குச் சான்றுபகருவன. காலப்போக்கிலே நடனக்கலையின் கோட்பாடுகளைக் கூறும் நூல்கள் பலதோன்றின அவற்றுள்ளே **பரதரின் நாட்டிய சாஸ்திரமும்** (கி. மு. 2ம்நூ. — கி. பி 2ம்நூ. வரை) அதன்வழி நூல்களும், இளங்கோவின் **சிலப்பதிகாரமும** நன்கு குறிப்பிடற்பாலன.

ஏற்கனவே. குறிப்பிட்டவாறு சமயநிழலிலேதான், இக்கலை பெருவளர்ச்சியடைந்தது. சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானும், அவருடைய சக்தியாகிய பார்வதியும், பிள்ளைகளாகிய விநாயகர், முருகன் ஆகியோரும், சக்தியின் சகோதரனாகிய திருமாலும் நடனக்கலையில் மிக்க ஈடுபாடுள்ளவராகக் கூறப்படுகின்றனர் இவர்களிலே, சிவபிரானே நடனத்தில் மிக்க ஈடுபாடுடையர்; நடனத்தின் வடிவமாகவும், முடிவாகவும், பிரதானஇலட்சியமாகவும், நடனமூலமான வழிபாட்டினை விரும்பி ஏற்பவராகவும விளங்குகின்றார்; தாமேயாவருக்கும் ஆதிநடன ஆசானாகை, நடராஜமூர்த்தியாக மிளிர்கின்றார். அண்டசராசரங்கள் அனைத்தினையும் தமது தாண்டவங்கள், குறிப்பாக, **ஆனந்த தாண்டவ** மூலம் தோற்றுவித்து. காத்து, அழித்து, மறைத்து, அருளும் அருட்பிரவாக மூர்த்தியாக அவர் இலங்குகின்றார்.

ஆன்மாக்கள் வினைப்பயன்களிலின்றும் விடுபட்டு, வீடுபேற்றினைப் பெற்றுய்யும் வண்ணம் அவர்புரியும் தாண்டவங்கள், ஏழு, பன்னிரண்டு, நூற்றெட்டு எனப்பலவாறு கூறப்படுகின்றன. **இந்நூற்றெட்டுத் தாண்டவங்களும் கரணங்கள் எனவும் அழைக்கப்படுவன.** இவற்றை விபரிக்கும், நாட்டியசாஸ்திரத்தின் நாலாவது அத்தியாயம் **தாண்டவலக்ஷணம்** என்ற தலைப்பினைக் கொண்டுள்ளது. இவற்றைச் சிவபிரானே தோற்றுவித்துத் தண்டுவுக்குப், பரதருக்கும் கற்பித்தார் எனவும், நாடோறும் சத்

தியாவந்தனவேளையில் ஆடுகிறார் எனவும் கூறப்படுகிறது. இக்கரணங்களைப்பற்றிப் பிற்காலத்திய **சங்கீதரத்னாகரம், நிருத்தரத்னாவளி** போன்றநூல்களும், **சைவாகமங்களும்,** கூறுவன. ஆனால் இவைபற்றிக்கூறும் விதத்திலே நாட்டியநூல்களுக்கும், ஆகமங்களுக்குமிடையில் சிலகருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால், அடிப்படையிலவை ஒரே பொருளையே கூறுவன.

**'கரணம்'** என்ற சொல் 'கிரு' எனும் வடமொழிவினையடிக வந்ததாகும். இது ''செய்தல்'' ''திறமை'' ஏற்படுத்தல், ஒன்று செய்ய உதவுதல், ஒழுங்குபடுத்தல், குறிப்பாக, 'முழுமையான செயல்' எனப்பொருள்படும். மேலும், இப்பதம் கருவி அமிசம், உறுப்பு, ஒன்றன்பகுதியெனவும் பொருள்படும். 'உறுப்பு அசைவுகளுக்கும்' அவைமூலம் செய்யப்படும் செயலுக்கும், இப்பதம் பயன்படுத்தப்படும். 'குட்டிக்கரணம்' எனமக்கள் அன்றாட வாழ்க்கையிலிப்பதத்தினைப் பயன்படுத்தல் கவனித்தற்பாலது. நடனத்தில் இப்பதம் ஒருசெயலின் ஒருமைப்பாட்டினைக் குறிக்கும். ''எனவே கரணம் ஒருநோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான சாதனம்'' எனக் கலாநிதி பத்மா சுப்பிரமணியம் குறிப்பிடுவர். கரணம்நடனத்தின் ஓர்அலகு ஆகவும் மிளிர்கின்றது. இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட கரணங்களின் கோவைகள் **அங்கஹாரங்கள்** (உடல்அசைவுகள்) ஆகும் என நாட்டியசாஸ்திரம் கூறும். **''நடனத்திலே கைகளும் (ஹஸ்தங்களும்). கால்களும் (பாதங்களும்) கூட்டாக ஒன்றிணைந்து செயற்படுதலே கரணமாகும்''** எனப்பரதர்இதற்கு வரைவிலக்கணம் கூறியுள்ளார் ஆனல், நாட்டிய சாஸ்திரத்திற்குச் சிறப்புரைஎழுதிய **அபிநவகுப்தர்** இங்கு ஹஸ்தமென்பது உடலின்மேற்பகுதியெனவும், பாதம் கீழ்ப்பகுதியென்றும் விளக்கம் எழுதியுள்ளார். எனவே, கரணம் என்பது அங்கம், உபாங்கம் பிரத்யங்கம் (பெரிய, சிறிய) ஆகிய எல்லாஉறுப்புகளும் ஒருங்கிணைந்து செயற்படுதலிலே தங்கியுள்ளது. **எனவே, கரணமென்பது** குறிப்பிட்ட **நிலையன்று; அஃது ஓர் அசைவாகும்.** ஸ்தானம், நிருத்தஹஸ்தம், சாரி என்பன **கரணத்தின்** முக்கியமான அமிசங்கள். ஸ்தானம் அதன் நிலையினைக்குறிக்கும்; நிருத்தஹஸ்தம் அதன் அழகியல் அமிசங்களைக்காட்டும்; சாரி கால் முழுவதினதும் செயல்களைக்காட்டும் **இக்கரணங்கள் சமகால நடனத்தின் அடவுகளை ஒத்தபுராதன நடனத்தின் பகுதிகளாகும்.** அசைகின்றனவும், அசையாதனவுமாகிய முரண்பட்ட கருத்துக்களின் சேர்க்கையினை இவற்றிலே காணலாம். ஸ்தானம் அசைவற்ற நிலையினையும், சாரிகள் அசைவுவடிவங்களையும் குறிப்பன. இதற்கு உள்ளம், உடல்ரீதியிலான பாரியசமநிலை அவசியமாகும். செயலற்றநிலையில் செயலாற்றுதல் பகவத்கீதையிலே கூறப்படுகின்றது. சிவன், சக்திபற்றிய கருத்துக்களும் இதைப்புலப்படுத்தும். எனவே, பௌதீகத்திற்கு அப்பாற்பட்டதும், ஆத்மீகத்தன்மையுடையதுமான கருத்துக்களுக்கு உடலசைவு மூலமானவடிவங்கள் காட்டப்படும். ஒரு கரணத்தினைச் செய்துகாட்டுவதற்கு அதிகநேரம் தேவையில்லை. எனவே குறிப்பிட்ட தொகை கரணங்களைக் கொண்டு நிருத்தமாதிருகா, கலாபகம், சங்காதகம், அங்கஹாரம், பிண்டிபந்தம் முதலியவற்றைச் செய்து காட்டலாம்.

நாட்டிய சாஸ்திரம் கூறும் நிருத்தம் ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் உரியதாகும். 108 கரணங்களும் இருபாலாருக்கும் உரியவை. தாண்டவம், லாஸ்யம் என்பனவற்றிற்குத் தனித்தனியான அசைவுகளில்லை. ஆண்களுக்குரிய உத்வேகமான நடனம் தாண்டவம் எனவும், பெண்களுக்குரிய மென்மையான நடனம் லாஸ்யமெனவும் கூறப்படினும், தாண்டவத்திலும் மெல்லியல்பு காணப்படும்; லாஸ்யத்திலும் உத்வேகம் உண்டு. எனவே இருபாலாருக்குமே இவைஉரியன எனக் கலாநிதி பத்மா தமது ஆய்வுக் கட்டுரையில் எடுத்துக்காட்டியுள்ளார்.

நாட்டியத்திலே பயன்படுத்தப்படும் கரணங்களிலே அழகியற் பெறுமானத்தை விட, அவை புலப்படப்படுத்தும் கருத்தும் குறிப்பிடற்பாலது. நாடகங்களிலே கரணங்கள் கருத்தூன்றிப் பயன்படுத்தப்பட்டு வந்தன. கரணங்களின் எண்ணிக்கையினையும், அவற்றின் உளரீதியிலான விழுமியத்தினையும் பற்றி அபிநவகுப்தர் குறிப்பிட்டுள்ளார். **தலபுஷ்பபுடம்** தொடக்கம் **கங்காவதரணம்** ஈறாகவுள்ள 108 கரணங்களிலே, முதலாவதாகிய தலபுஷ்பபுடம் புஷ்பாஞ்சலியிலே பயன்படுத்தப்படும். கரணங்களை நவரசங்களைப் புலப்படுத்தற்கும் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, வர்ஜிதம், அபவித்தம் போன்றவை ரௌத்திர ரசத்தையும், உன்மத்தம் போன்றவை வீர ரசத்தையும் புலப்படுத்துவன. கரணங்கள் மூலம் வியபிசாரி பாவங்களையும் வெளிப்படுத்தலாம். உதாரணமாக, விக்ஷிப்தமூலம் தற்பெருமையினையும், மத்தல்லி மூலம் வெறியினையும், சந்நதம் மூலம் புகழ்ந்துரைத்தல் முதலியனவற்றையும் வெளிப்படுத்தலாம்.

கரணங்கள் பொதுக்கருத்துக்களையும் புலப்படுத்துவன. சிலவற்றின் பெயர்கள் அவை குறிக்கும் பொருளை உணர்த்துவன. இவற்றின் பெயர்கள் இயற்கை அம்சங்கள், மிருகங்கள், பறவைகள், அவை செய்யப்படும்போது காணப்படும் வடிவம், குறிப்பிட்ட உறுப்புகளின் நிலை முதலிய பலவற்றின் அடிப்படையில் இடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, வித்யுத்பிராந்தம் மின்னலையும், கஜகிரீடிதம், கரிஹஸ்தம் ஆகியன ஆனையினையும், அதன் விளையாட்டினையும், புஜங்த்ராசிதம் பாம்புக்குப்பயப்படுதலையும், விர்ச்சிகம் தேளினையும், ஸ்வஸ்திகம் கைகால் குறுக்கே இடப்படுதலையும் லலாடதிலகம் நெற்றியிலே திலகமிடுவதனையும் குறிப்பன. இவற்றினையும், பிறகரணங்களின் பெயர்களையும் தொகுத்து உற்று நோக்கும்போது, இவற்றிற்குரிய பெயர்களையிட்டோர் இயற்கையினையும், மக்களின் உளநிலைகள், உறுப்புநிலைகள் முதலியனவற்றையும் நன்கு அவதானித்தே பெயரிட்டுள்ளனர் என்பது தெளிவு.

பிற்பட்டகாலத்திய நந்திகேசுவரர் அபிநயதர்ப்பணத்திற் கூறியதுபோலன்றிப் பரதர் கூறும் நிருத்தம் சுத்த நிருத்தம் அன்று; இது ரசங்களைப் புலப்படுத்தவல்லது. இங்கு ரசம் சாதாரண இன்பத்தைக் குறிப்பதன்று; பேரின்பத்தையே குறிக்கும். நடனக்கலைஞர் ஆடலிலேலயித்து இறைவனுடன் ஒன்றுபடுவர். இதனைப் பார்த்து ரசிக்கின்ற சஹிர்தயனும், ரசிகனும், அப்படியான நிலையினை அடைகிறான். நிருத்தம் ஒரு **யஜ்ஞம்** (வேள்வி) எனவும், **யோகம்** எனவும் கூறப்படும். காளிதாசனும் தனது நாடகமொன்றிலே நாட்டியத்தினைத் தெய்வங்களுக்குரிய சிறந்த வேள்வியெனக் குறிப்பிடுகிறான் இது ஒரு யோகம் என்பதைப் பரதரே வலியுறுத்தியுள்ளார். கரணங்களின் உட்கிடக்கையினையும், நோக்கத்தினையும் உணராதவர்கள் இவற்றை உடற்பயிற்சிக்கான வித்தைகள், அதீதசாஹஸங்கள் எனத் தவறாகப் புரிந்து கொள்ளுகின்றனர் இக் கரணங்களுட் சில யோகாசனப் பயிற்சிகளை நினைவூட்டுவதில் வியப்பில்லை. நாட்டியம் ஒரு யோகக்கலை என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. ஆடலிலே உடலும் உள்ளமும் இறைவனிலே லயித்துவிடுகின்றன. எனவே, கலாநிதிபத்மா **''ஓர் இலட்சியக் கலைஞருக்கு நடனத்திலே உடலும் ஆத்மாவும் ஒன்றுபட்டு இறைவனிலே லயித்தலே நிருத்தகரணமாகும்''** எனப் பரதருக்குப்பின் நிருத்தகரணத்திற்குப் புத்தம் புதிய விளக்கம் அளித்துள்ளமை ஈண்டு மனங்கொளற்பாலது. இக் கலைஞரின் கருத்து நீண்டகாலமாகக் கரணங்கள் பற்றிய ஆழமான ஆய்வின் பலனாகும்.

இப்பெயர்ப்பட்ட சிறப்புள்ள கரணங்கள் நெடுங்காலமாக இந்தியாவின் பல பகுதிகளிலும், இந்தியப் பண்பாடு பரவிய தென்கிழக்காசிய நாடுகளிலும் நிலவிப்பின் மங்கத் தொடங்கின; சில இடங்களில் இவை மாற்றமுற்றன; வேறு சில இடங்களில் வெவ்வேறு பெயர்களாலழைக்கப்பட்டன. எனினும், அதிர்ஷ்டவசமாகச் சிற்பங்களிலும், சிறிதளவு ஓவியங்களிலுமிவை நிலைபெற்றுவிட்டன. சமகால நாட்டியக் கலைஞர்களுக்கும், கரணப்பிரியர்களுக்குமிவை பெரிய வரப்பிரசாதமாக விளங்குகின்றன. நாட்டியக்கரணங்களைக் காட்டும் சிற்பங்கள் பல இடங்களிலிருப்பினும், தமிழகத்திலுள்ளவை தனிச்சிறப்பு வாய்ந்தனவை. பல்லவ அரசனான ராஜசிம்மன் காஞ்சியில் அமைத்த கைலாசநாதர் ஆலயத்திலும், நந்திவர்மனின் பாகூர் கோவிலிலும் சில

நாட்டியகரணங்கள் உள்ளன. ஆனால், இக்கரணங்கள் அனைத்தையும் சிற்பங்களில் ஒரேஇடத்திலே முதன்முதலாகத் தொகுக்க முயற்சித்த பெருமை முதலாம் ராஜராஜ சோழப்பெருமன்னனுக்கே உரியது. 'சிவபாதசேகரன்' 'நித்தவிநோதன்' போன்ற விருதுப்பெயர்கள் பூண்ட இம்மாமன்னன் சைவத்திருமுறைகளைத் தொகுத்துப் பேணிப் போற்றியவன்; இதுபோலவே நாட்டிய கரணங்களையும் தொகுத்தற்குத் திட்டமிட்டுச் செயலாற்றியவன். சோழத்தலை நகரமாகிய தஞ்சாவூரில் அமைத்த பிருஹதீஸ்வரர் (தஞ்சைப்பெருவுடையார்) ஆலயத்தின் ஸ்தூபியின் மேல்தளத்தில் இக்கரணங்களை அமைத்ததற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன முதலாவது கரணமாகிய தலபுஷ்பபுடம் தொடக்கம் 81வது சுபிதம் வரையுள்ள, கரணங்கள் செதுக்கப்பட்டன. எஞ்சிய 27க்குமான இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் இவற்றிலே கரணசிற்பங்கள் ஏதோ ஒரு காரணத்தால் அமைக்கப்படாமை துரதிர்ஷ்டமே. எனினும், இவன் காட்டியவழியிலே கரணசிற்பங்களைத் தொகுக்கும் முயற்சிமேற்கொள்ளப்பட்டது. இவனுக்குப்பின் தொகுக்கப்பட்டவற்றுள் காலத்தால் முந்தியவை. கும்பகோணம் சாரங்கபாணிகோவிலில் உள்ளவையாகும் (கி பி 12நூ.) சிலர் கருதுவதுபோல, இச்சிற்பங்கள் வைஷ்ணவக்கோவிலில் இருப்பதால் வைஷ்ணவச் சார்பானவையல்ல சைவக்கோவில் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டுப்பின்னர் வைஷ்ணவக் கோவிலில் வைக்கப்பட்டவை. இங்குசோமேஸ்வரர் ஆலயமும், சாரங்கபாணி ஆலயமும். ஒன்றாக இரட்டைக்கோவில்களாக இருந்தமை குறிப்பிடத்பாலது. இங்குள்ள 108 கரணசிற்பங்கள் ஒவ்வொன்றின் கீழும், அவ்வக்கரணங்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளமை, ஒரு சிறப்புஅம்சமாகும். ஒருகோவிலிலிருந்து இன்னொன்றிற்குக் கொண்டுவரப்பட்டமையாற் போலும், இக்கரணங்களின் ஒழுங்குமுறை நன்கு பின்பற்றப்படவில்லை.

காலவரன் முறைப்படி நோக்கும்போது சைவஉலகின் கோவிலாகிய சிதம்பரத்திலுள்ள நடராஜர் ஆலயம் குறிப்பிடற்பாலது இக்கோவில் ஒருபாரிய நடனக் களஞ்சியமாகும். இதன் நாற்புறத்திலுமுள்ள கோபுரங்களிலே கரணசிற்பங்கள் அனைத்தும் உள்ளன. இவற்றிலே கிழக்கு. மேற்குக் கோபுரங்களிலுள்ளவை மிகமுக்கியமானவை. இவற்றிலே 108 கரணங்களுக்கான சிற்பங்களும், அவற்றின்கீழ அவ்வவற்றிக்கான நாட்டியசாஸ்திரச் செய்யுட்களும் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றை அடையாளம் காணுதல் மிகஎளிதாகும், நடனக்கோட்பாட்டிற்கும், செய்கைமுறைக்குமுள்ள ஒருமைப்பாடும் தெளிவு. இவற்றின்காலம் கி. பி. 13ம் நூற்றுண்டாகும். இவற்றின்பின் விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரன் கோயில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயம் ஆகியனவற்றின் கோபுரங்களில் உள்ள கரணசிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு, தமிழகத்திலுள்ள ஐந்து கோவில்களிலே நாட்டியக்கரண சிற்பங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களில் கரணங்களின் ஓர் அம்சத்தினையே காணலாம்; முழுமையாகக் காணமுடியாது மேலும் கரணசிற்பங்களில் உள்ள நான்கு திருக்கரங்களில் முன்உள்ள இரண்டும் தொடக்கநிலையினையும். பின் உள்ளவை முடிவையும் காட்டுவன எனவும் கருதப்படுகின்றன,

கல்லிலே அழியாதநிலை பெற்ற நிருத்த சிற்பங்கள் சமகாலநாட்டியக் கலைஞர்ருக்கும், கரணப்பிரியர்களுக்கும், நாட்டிய வரலாற்றுசிரியருக்கும் பலவழிகளில் உற்சாகமளிப்பன; குறிப்பாக இவற்றைமீண்டும் நடனககலை உலகிற்குக் கொண்டுவர விழையும் கலைஞருக்குச் சிறந்த முன்மாதிரியாக விளங்குவன. இன்றையபரதநாட்டியக்கோப்பினை உருவாக்கிய தஞ்சைச் சகோதரர் நால்வரும் கரணங்களை அறிந்திலர், எனக்கூறப்படுகின்றது. இன்றைய நடனக்கலைஞர் இவற்றிலுமீடுபாடு கொண்டுள்ளனர். இவர்களிலே கலாநிதிபத்மா சுப்பிரமணியமும், சுவர்ணமுகியும் நன்கு குறிப்பிடற்பாலர் இவர்களிலே முன்னையவர் 1963 தொடக்கம் தமது நாட்டியக்கோப்பிலே கரணங்களைப் பயன்படுத்திவருகிறார்; கரணங்கள் பற்றிய ஆய்விலே மிகவும் ஈடுபட்டு, இவைபற்றிய மிகவிரிவான ஆராய்ச்சிக்கட்டுரையொன்றினை **இந்திய நடனங்களிலும் சிற்பங்களிலும் கரணங்கள்** என்ற தலைப்பில் எழுதி, அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்துக் கலாநிதிப்பட்டமும் பெற்றுள்ளார். தொடர்ந்தும் இவைபற்றி ஆராய்ந்துவருகிறார். பலஇடங்களிலும் சிதறிக்கிடக்கும் கரணங்களைத்தேடித் தொகுத்துவருவதாகவும் கூறுகிறார். தமது நாட்டிய நிகழ்ச்சிகளில்

இவற்றைப்பயன்படுத்திவருகிறார்; கலைஞர்களுக்குக் கற்பித்தும் வருகிறார். சுவர்ணமுகி தமது மிகலாகவமான தலைசிறந்த செய்கைமுறைகள்மூலம் இவைபற்றிய அறிவினைப்பலருக்கும் புகட்டிவருகிறார். கரணங்களைச் செய்துகாட்டுவதில் இவரின் திறமை மிகவும் அபாரமானது பாராட்டிற்குரியது நாட்டியஉலகிலே கரணங்களைப் பற்றிய புதியவிழிப்பினை ஏற்படுத்திவருவதில் இக்கலைஞர்களின் பங்களிப்புமிகமகத்தானது.

கரணங்களைச் சித்தரிக்கும் ஓவியங்கள் மிகச்சிலவே இதுவரை கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டாக முதலாம் ராஜராஜசோழனுடைய தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலுள்ள ஓவியங்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம். கரணசிற்பங்களும் ஓவியங்களும் இதேகோயிலில் காணப்படுவது குறிப்பிடற்பாலது.

எமது நாட்டிலுள்ள கலைஞர்களும் கரணங்களிலே நல்லஈடுபாடு கொள்ளலாம் இங்கு அமைக்கப்பட்டுவரும் கோவில்கள் சிலவற்றிலாவது குறிப்பாக கோபுரங்களிலிவை இடம்பெறல் சாலப்பொருத்தமானதாகும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள பரமேஸ்வரன் ஆலயத்திலே, குறிப்பாக அதன் கோபுரத்திலே சில கரணங்களாவது இடம்பெறுதல் நன்று.

## சில முக்கியமான உசாத்துணை நூல்கள்


1. பரதநாட்டியசாஸ்திரம், சம்ஸ்கிருத மூலமும் அபிநவகுப்தரின் உரையும், பரோடா வெளியீடு.

2. சங்கீத ரத்னாகரம், சம்ஸ்கிருத மூலமும் உரையும், அடையாறு பதிப்பு.

3. ராகவன் வி. நாட்டியக்கலை, சென்னை.

4. Kapila Vatsyayan, Classical Indian Dance in Art and Literature, New Delhi

5. Padma Subrahmanyam, BHARATA'S ART THEN AND NOW, Madras.

# இந்தியக் கலையின் இயக்க சக்தி மதம்
## (வரலாற்றுப் பின்னணியில் ஒரு நோக்கு)

திருமதி. தி. ஜெயந்தி
நுண்கலைப்பிரிவு இறுதி வருடம்

இந்தியக் கலை வரலாற்றில், இந்தியக் கலையின் இயல்புகளெனச் சில அம்சங்களை நாம் காணக் கூடியதாகவுள்ளது. இந்தியக் கலைப் பாரம்பரியம் எவ்வாறு மக்கள் வாழ்க்கையினின்றும் பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைந்திருத்தல் போலவே சமயத்தோடும் மிக நெருங்கிய தொடர்புடையதாக அமைகிறது. புராதன இந்தியக் கலைப் பாரம்பரியத்தில், வாழ்க்கை, சமயம், கலை இவை மூன்றும் ஒன்றாகவே வளர்ந்தன, வாழ்ந்தன. சமயத்திற்காகவே கலை, கலைக்காகவே வாழ்க்கை வாழ்க்கையே சமயம், என்றிவ்வாறிருந்தது. நடனம், சங்கீதம், சிற்பம் என்பன கோயில்களை மையமாக வைத்து வளர்ந்தன. கோயில்களையே சென்றடைந்தன. சமயம், இந்தியக் கலையின் உட்பொருளும் தத்துவமுமாக அமைந்தது.

ஆதி மனிதன் இயற்கையிலிருந்தே எல்லாவற்றையும் அறிந்துகொண்டான். தன்னை எதிர்த்த இயற்கைச் சக்திகளைத் தனக்கு வாய்ப்பாக்கிக் கொண்டான். அந்தச் சக்தியையும் சூழலையும் மதித்தான். இறைவனாகப் போற்றினான். அச் சக்தியை மகிழ்விக்க எண்ணி ஆட்டத்தாலும, அபிநயத்தாலும், கூச்சலிடுவதாலும் முயன்றான். இச் செய்கைகளைக் கற்களில், சிலையாகச் செதுக்கியும், பாறைகளில் ஓவியமாக வரைந்தும் ஆரம்பக்கலையாக்கங்களைப் படைத்தான்.

இந்தியக் கலை வரலாற்றில் சிந்துவெளி நாகரிகமே ஆரம்பக் கட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்காலத்தில் நுணுக்கமான கலைவேலைப்பாடுகளைக் காணமுடியவில்லை. ஆனால் முதல் ரீதியான கலைப்படைப்புக்களிற்குப் பதிலாக இங்கு உயர்ந்த ஆத்மீக ரீதியான கலைகள் தோற்றம் பெறுகின்றன. சிந்து வெளி மக்கள் உருவ வழிபாட்டை மேற் கொண்டிருந்தனர்.

தமது கலையாக்கங்களாகச் சிலைகளை ஆக்கினார்களென அறியக் கிடக்கிறது. பெண் தெய்வ வழிபாட்டினை இவர்கள் மேற் கொண்டிருந்ததற்குச் சான்றாக ஆத்மீகத் தன்மை பேணப்படும் தியான நிலையிலேயே அரைக்கண் மூடிய பெண்சிலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஆரியர் வருகையின் பின் வேள்விகள், யாகங்கள், கிரியைகள் என்பன உருவ வழிபாட்டுடன் சேர்ந்து இந்தியப் பண்பாடு உருவாகின்றது. இதன் அடிப்படையில் கலை வளர்கின்றது. சிவனுக்குரிய அம்சங்கள், சக்திக்குரிய அம்சங்கள் ஒன்றிணைகின்றன. இவற்றுடன் அவர்களது உணவும், வேதகால அம்சங்களோடு கூடி ஒன்றிணைகின்றன. இக்கால கட்டத்தில் இந்து மதம் முக்கியமான ஓர் இடத்தை வகிக்கிறது. மேலும், பௌத்தம், சமணம் எனும் சமயங்களையும் கூட, உள்ளடக்கிய மதமாக ஒரு பொதுமையான தத்துவமாக அமைந்து அதன் அடிப்படையில் கலையாக்கங்கள் உருவாகின்றன. இந்து சமயமே எங்கும் வியாபித்துக் கலையாக்கங்களுக்கு ஆதாரமாகவும் இருந்தது. இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகப் பாஜா, எனும் இடத்திலுள்ள விகாரையில் அமைந்துள்ள புடைப்புச் சிற்பங்கள் வேத காலக் கடவுளர்க்கு உருவம் கொடுத்தமைக்குச் சான்றாக உள்ளன. இதில் ஆரிய இந்திரக் கடவுளர் தீட்டப்பட்டுள்ளார்.

இதன் பின், இந்திய வரலாற்றில் இக்காலத்தில் ஒரு பேரரசின் தோற்றத்தைக் காணலாம். இதுவே மௌரியப் பேரரசாகும். இப் பேரரசின் காலத்தில் இருந்து மதத்திற்குப் பதில் பௌத்தமும், சமணமுமே தலைதூக்கியிருந்தன. மௌரிய மன்னன் அரசவைக் கலையாகத் தம் கலைகளை வளர்த்தனர். மௌரியப் பேரரசுக்குமுன் பாரசீகப் படையெடுப்பு நிகழ்ந்தது. இதன் விளைவாகப் பாரசீகப் பண்புகளும் கலந்து இக் கால கட்டத்தில் கலையாக்கங்கள் நிகழ்ந்தன. முற்றும் சமய அடிப்படையிலே இக்காலக் கலை வளர்ந்துள்ளது. பௌத்த சமய டம்பக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் போதிப்பதற்குப், பாரசீகத் தொடர்பின் விளைவான "தூண்கள்" நிறுவப்பட்டன. இத் தூண்களின் மூலம் ஒழுக்கக்கோட்பாடுகள் பொறித்தல் என்பன கலையாக்கமாக மக்களுட் புகுத்தப்பட்டன. இத்தூண்களின் சிறப்பம்சமாக; ஒற்றைக் கல்லாலான தூண்கள், பகுதிபகுதிகளாகப் பொருத்தப்பட்ட தூண்கள் என்பவற்றைக் கூறலாம்.

இக்கால கட்டத்தில் இந்து சமயவழிபாடு நிலவவில்லை, என்று கூறுவதற்கில்லை. இக்கால அரசர்களும், மக்களும் பெண் தெய்வ வழிபாட்டை நிறுத்தமுடியாமல் தமது சமயத்தெய்வங்கள் கூட்டத்தில் யக்ஷி, ஹாரிதி முதலிய அம்மன் தெய்வங்களையும் சேர்த்துக் கொண்டனர்.

மௌரிய காலக் கல்லினால் அல்லது செங்கட்டிகளால் கட்டப்பட்ட கட்டடக் கலைமுறைகள், பௌத்த சமயத்துடன் தொடர்புள்ளன. மௌரியப்பேரரசன் அசோகன் பௌத்தமதத்தை அரசமதமாக்கிக் கடல்கடந்த நாடுகளில் பரப்பியதன் விளைவாக ஸ்தூபிகள் கிடைக்கின்றன. இத்தூபிகளில் கலையம்சங்கள் இடம்பெறுவதற்குப் பௌத்தசமயம் ஆதாரமாக இருந்தது எனலாம். இக்காலத்திலேயே மலைகளைக் குடைந்து கோயில்கள் ஆக்கியமையும் இடம் பெறுகின்றது. இக்குகைக் கோயில்களுக்கு உதாரணமாக பராபர்மலையிலுள்ள லோமாரிஷிக்குகை, சீதாராம்குகை என்பன அமைகின்றன. நாகர்க்கினி மலையிலும் குகைகள் காணப்படுகின்றன. மௌரியகாலக் குகைக் கோயில்களே, பிற்காலத்தில் இந்தியாவில் பெரிதும் வளர்ச்சியுறும் மலைகளைக்குடைந்து கோயில்கள் கட்டடம் அமைக்கும் குகைக்கோயில்கள் வரலாற்றில் மிகவும் முன்னோடியாகவுள்ளது.

மௌரியர்க்குப்பின் சுங்கர்காலம் நிலவுகிறது. முதற் சுங்கமன்னன் ஒருபிராமணனாக இருந்ததால் இந்துமதம் எழுச்சிபெற்றது. இத்துடன் மன்னர் கலைகளாகப் பரிணமித்த கலைகள், அதாவது அரசவம்சக் கலைகளாகப் பரிணமித்த இந்தியக்கலை மக்கள் கலையாகப் பரிணமித்தது. வர்த்தகர்களாக விளங்கியமக்கள் சமயநம்பிக்கைகள் வழிபாடுகள் பிரதிபலிக்கக் கூடியனவாகக் கலைகளைப் பரப்பினர். இக்காலக்கலைக் கூடங்களாக சாஞ்சி, பார்கூட், புத்தகாயா என்பன வியாபாரப் பாதைகளில் அமைந்திருப்பதனால் வியாபாரத்துடன், சமயமும் கலைரூபங்களாகப் பரவின. இம்முக்கிய கலைக்கூடங்கள் முறையே சிராவஸ்தி, கௌசாம்பி, கோசலம், பாடலிபுத்திரம் முதலியவற்றையும், சாஞ்சிமதுரா, உஜ்ஜயனி, காந்தாரம், பிரதிஷ்டானம், பாருகச்ச, சுபாராக் என்பவற்றை இணைப்பதாக அமைந்திருந்ததால், பலவழிகளிலும் இக்காலக் கலை மக்கள் சமுதாயத்தின், வர்த்தக சமுதாயத்தின் வெளிப்பாடாக அமைந்தது. இக்கலைப்பொருட்களாக இயக்க நாக உருவங்கள், பௌத்தசமய யாதகக் கலைகளைச் சித்தரிக்கும்வண்ணம் அமைந்திருந்தன. இயக்க நாக வழிபாடுமுக்கியத்துவம் பெறுகின்றன. இக்காலத்திலேயே பௌத்த கலையாக்கங்களான ஸ்தூபிகள், விகாரைகள் சயித்த மண்டபங்கள் வளர்ச்சியடைகின்றன. மேலும் புதியஅம்சங்களான வேதிகைகள், தோரணவாயில்கள் எனும் அமைப்புக்கு அடித்தளம் போடப்படுகிறது. இத்தோரணவாயில்களிலும், வேதிகைத் தூண்களிலும், யக்ஷ உருவங்களும், யாதகக் கதைகளைச் சித்தரிக்கும் உருவங்கள் அல்லது சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இது அக்காலமக்களின் சமயநம்பிக்கைகள், வழிபாடுகளைப் பிரதிபலிப்பனவாக இருக்கின்றன. ஸ்தூபிகளை வழிபடவரும் மக்களுக்கு கதைகள் மூலம் மதக்கோட்பாடுகள் போதிக்கப்படுகின்றன இச்சிற்பங்களிலேயே. மாயாதேவியின் கனவுக்காட்சியும், யானை, விளக்கு போன்றவற்றுடன் பிறகதைகளும் வடிக்கப்பட்டிருந்தன. மேலும்,

புத்தர் மனிதஉருவில் சித்தரிக்கப்படாமல், குறியீடுகள்மூலம் சித்தரிக்கப்படுவதும், இக்காலகட்டத்திலேயே, புத்தரின் பிறப்பு, இறப்பு, ஞானம்பெற்றது. போன்ற வாழ்க்கைச்சித்திரங்கள் சித்தரிக்கப்படுகின்றன. புத்தரின் இறப்பு - ஓர் ஸ்தூபியை மனிதஉரும் வணங்குவது போன்ற சிற்பம் கலையம்சமாக விளக்கப்படுகிறது. சுங்கர் காலமக்கள் இந்துக்களாக இருந்தபோதும் பௌத்த சமயத்திற்குத் தந்த ஆதரவு காரணமாகப் பௌத்தகலை வளர்ந்தது.

இந்தியக் கலைவரலாற்றில் அடுத்ததாக சாதவாகனர் காலம்ஆகும். இக்காலத்திலும் பௌத்தசமய எழுச்சியிலேயே கலை வளர்ந்ததைக் காணலாம். இக்காலத்தில் பெருவளர்ச்சியடைந்த குடைவரைக்கோயில்களிலும், ஸ்தூபிகள் சயித்திய மண்டபங்கள் என்பற்றிலும் பௌத்தசமய சார்பான யாதகக்கதைகளே சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. தக்கணத்தை மையமாகக்கொண்ட பேரரசு ஆகையால் தக்கணக் கலைவரலாற்றின் தோற்றம் பௌத்தமத ஆதரவாளர்களால் எழுச்சியடைந்தது.

சுங்கக் காலத்தின் பின்னர் இந்தியவரலாற்றில் மீண்டும் அந்நியர் தாக்கம் ஏற்படுகின்றது. சகர், பார்த்தியர், யூச்சியின மக்கள் ஒருவர்பின் ஒருவராகவடமேற்கு இந்தியா மீது படையெடுப்பை மேற்கொண்டனர். ஆட்சியும் இவ்வாறே ஒருவர் பின் ஒருவராகவே நடைபெற்றது. இறுதியாகவந்த யூச்சியினமக்களே குசானர் எனப்படுகின்றனர். இவர்களும் பௌத்தர்களாக இருந்தபோதும் பௌத்தக்கலை, பௌத்தமதத்துடன், சைவவைஷ்ணவ மதங்களையும் ஓரளவு ஆதரித்தனர். வடக்கே காந்தாரம், தெற்கே மதுராவை மையமாகக் கொண்டு இக்கலை வரலாறு அமைகிறது. காந்தாரத்தில் புத்தர் குறியீடுகளால் சித்தரிக்கப்படாமல் மனிதஉருவில் சித்தரிக்கப்படுகிறார். இதற்குக் காரணம், இக்காலகட்டத்தில் ''மகாஞான பௌத்தம்'' பெரிதும் வளர்ச்சியுற்றிருந்ததாகும். அதாவது புத்தரை மனித உருவில் வழிபடுவது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையே. கிரேக்கசிற்பியர் தம் உதவி பெற்றுப் புத்தரின் சிலையின் ஆடைமடிப்புக்குள் அமைக்கப்படுகின்றன, இக் காலத்திலிருந்தும் கலைசமய இயக்கமாகவே வளர்ந்ததைக் காணலாம்.

மதுராவில் புத்தர் உருவங்கள் காந்தாரத்திலின்றும் வேறுபட்டதாக, உணர்ச்சி ததும்புவனவாக அமைகின்றன. இவ்வமைப்பு மௌரியர்க்கு முற்பட்டசிற்ப முறைகளோடு நாக, யக்ஷ சிற்ப முறைகளோடு ஒத்தனவாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இந்தியாவில் சுதேசவழிபாடு முறைகளிலும், நம்பிக்கைகளிலும் பழக்கவழக்கங்களிலும் பெரிதும் அடிப்படையாக இடம்பெற்ற யக்ஷநாக வழிபாடு ஆகும். நாகரது சமய முறைகளும் சிற்பமுறைகளும் மதுராவில் பெரிதும் பரவியிருந்தன. இவ்வாறு புத்தரை மனிதஉருவில் வடித்து வணங்கும் வழக்கம் மதுராக்கலை, காந்தாரக்கலைகளின் அடிப்படையில் தோற்றம் பெறுகின்றது.

இந்தியக்கலை வரலாற்றில் அடுத்ததாகக் குப்தர் காலம் இடம்பெறுகிறது. குப்தர் பேரரசில் அரசியல் ஒருமைப்பாடு காரணமாக மிகவும் சிறப்பான முறையில் சங்கீதம், இலக்கியம், கட்டடம், சிற்பம், ஓவியம் போன்ற ஏனையகலைகளும் வளர்ச்சியடைசின்றன எனலாம். இக்காலத்தில் பௌத்தசமயம் இதுவரையில் மேலாதிக்கம் செலுத்திய நிலைமாறி இந்துமதம் அபிவிருத்தியடைகிறது. ஆனாலும் அஜந்தா போன்ற இடங்களில் பௌத்தக்கலைகள் வளர்ச்சியடைந்தன. இருந்தபோதும் இந்துக் கலை வளர்ச்சியே பெரிதும் முக்கிய இடம் வகிக்கின்றன. மேலும், இலக்கியம், நாடகம், முதலிய கலைகளும் பெருவளர்ச்சியடைசிறது. காளிதாசர் இக்காலத்திலேயே தமது சாகுந்தலம், மேகதூதம் போன்ற இலக்கியப்படைப்புகளை ஆக்கினர். இந்து புராணங்களும் தமது இறுதிநிலையை அடைகின்றது.

இவ்விலக்கியங்களிலெல்லாம் மதபோதனைகள், சமயஒழுக்ககோட்பாடுகள் பரப்பப்படுகின்றன இதில்வரும் ஓவியங்கள், சிற்பங்கள் யாவும் உவமானங்கள் வர்ணனைகள் கொண்டனவாக இலக்கியங்களி சித்தரிக்கப்படும் உருவங்களாக விளங்குகின்றன. இதுவரை தோற்றப்படாத ஆத்மீகத்தன்மை அதாவது தெய்வீக உணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடியதன்மை சகலகலைகளிலும் வெளிப்படுத்தப்படுதலும் அமைகிறது.

இக்காலகட்டத்திலேயே இந்துமதக் கடவுளர்க்குக் கோயில்கள் அமைக்கப்படுகின்றன. இந்துமதவளர்ச்சியின் எழுச்சியைக் குறிக்கிறது. இவ்விதமான இந்துக்கோயில்களை உதயகிரி, பாதமி, தியோகார், ஐக்கோல், மேகுடி, குச்சிமல்லிக்குடி முதலிய இடங்களிலுள்ள இந்துக்கோயில்களைக் கூறலாம். முன்னர் கூறிய இரண்டு குகைக்கோயில்களும் பின்னையவை கட்டப்பட்டகோயில்களாகும். இக்கோயில் கட்டடக்கலை, பிற்காலக்கலை வளர்ச்சியில் இடம்பெறும் கோயில் கட்டடக்கலை, வளர்ச்சிக்குஒரு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

இதுவரை அழியும் பொருளான தன்மை மாற்றப்பட்டு அழியாப் பொருட்களாலான கட்டடங்கள் அதாவது கருங்கல் கட்டடங்கள் தமிழ் நாட்டுக்கலை வரலாற்றில் இடம் பெறுகின்றன பல்லவ, பாண்டிய மன்னர்களின் பேராதரவுடன் கருங்கல்லாலான கோயில்கள் எழுகின்றன. மகேந்திரவர்ம பல்லவன், பிரமன், விஷ்ணு, ஈசுவரன் ஆகிய மூன்று தெய்வங்களிற்கும் தான் எடுப்பித்த கோயிலைப் பற்றி 'மண்டகப்பட்டு' கல்வெட்டு சான்று பகர்கிறது,

தென்னிந்தியக் கலைவரலாற்றில் பல்லவர்காலம் புதியசகாப்தத்தைத் தொடங்கிவைத்த காலப்பகுதியாக அமைகிறது. திராவிடநாகரீகத்தின் ஒரு பங்களிப்பாக சாதனையாகத் திராவிடக்கட்டடச் சிற்பக்கலைகள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைகின்றன. இதற்குச் சமூகப் பொருளாதாரத்தைக் காரணம் காட்டிலும்; சமூகத்திலிருந்த பௌத்த, சமண, சமயங்கள் விழ்ச்சியுறுவதையும், இந்துமதம் மறுமலர்ச்சியடைந்து. தமிழ்நாடுமுழுவதிலும் வெகுவேகமாகப் பரவிய இந்துமத மறுமலர்ச்சி இயக்கம் இக்காலத்தில் பெரும்தொகையான கோயில்கள் கட்டப்படுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

இவ்வாறே பல்லவரின் காலத்தில் திராவிடக்கலையின் அம்சங்கள் யாவும் தோற்றம்பெற்றுப்பின், சோழர், பாண்டியர், விஜயநகர் வரையில் தனித்தனிமுழுவளர்ச்சியடைந்து ஏறக்குறைய இக் காலத்துடன், அதாவது விஜயநகர் காலத்தில் கட்டடக்கலை இன்றைய அமைப்பைப் பெற்றுவிட்டதெனக் கூறலாம்.

இவ்வாறு கலைவளர. மதம் மாபெரும் இயக்கசக்தியாக இருந்து வந்திருந்தமையும், ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்திய பாரம்பரியத்திற்கேயுரிய இந்தியத்தன்மையும் பேணப்பட்டு வளர்ந்து வந்துள்ளமையும் தெளிவாகத்தெரிகிறது.


**உசாத்துணை நூல்கள்:-** (1) கோயில்கள்

P. R. ஸ்ரீனிவாசன்

(2) Indian architecture Buddhist & Hindu Periods

by:- Percy Brown

(3) வியத் தகு இந்தியா

# எங்கள் பரம ஈஸ்வரனே!

த. புவனேஸ்வரன்,
பொருளியல் சிறப்பு, இறுதி வருடம்

எங்கள் பரம ஈஸ்வரனே வா வா வா
எங்களை நீ காத்திடுவாய் வா வா வா
கங்கைப் பதி நாயகனே வா வா வா
காண வந்தோம் உன் கமலம் வா வா வா

பல்கலையை வளர்த்திடவே வா வா வா
பல வினைகள் அறுத்திடுவாய் வா வா வா
தொல்லை தனைப் போக்கிடுவாய் வா வா வா
தோத்தரித்தோம் நின் அடியை வா வா வா

பக்தி தனைப் பரப்பிடவே வா வா வா
பக்தர்களைக் காத்திடுவாய் வா வா வா
முத்தி தரும் வித்தகனே வா வா வா
முக்கணனே அற்புதனே வா வா வா

ஆடுகின்றோம் பாடுகின்றோம் வா வா வா
அண்ணல் பாதம் தேடுகின்றோம். வா வா வா
கூடிடுவாய் குறைகள் தீர்க்க வா வா வா
ஓடிடுமே துன்ப மெல்லாம் வா வா வா

சுந்தரரின் அந்தணரே வா வா வா
சோதிப் பிழம் பானவனே வா வா வா
இந்து நெறி தழைத்திடவே வா வா வா
இல்ல மெல்லாம் உறைந்திடுவாய் வா வா வா

**With best Compliments from :**

WHOLESALE & RETAIL
DEALERS N : ALL CERAMIC WARES, S-LON PIPES
AND FITTINGS.

# GOLDEN CERAMIC

**No. 2-D, Stanley Road, : : : JAFFNA.**

* ரெலிவிஷன்
* றேடியோ
* மணிக்கூடு
* பரிசுப் பொருட்கள்
* எவர்சில்வர் மற்றும்
* அழகு சாதனங்கள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற

**ஸ்ரீ வாலாம்பிகா**
**ரேட் சென்ரர்**

21/5, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.

**SRI VALAMBIGA**
**TRADE CENTRE**

21/5, Stanley Road,
JAFFNA.

☎ 2 2 7 0 8

*With best Compliments from :*

★

★

★

**BAMINI ENGINEERS & CONTRACTORS**



# BAMINI CRUSHER

**Supplier of Building Materials.**

**Prop: T. E. BALASUNDRAM**

**Kondavil East, KONDAVIL.**

# திருக்கோயில்கள்

சி. க. சிற்றம்பலம்,
தலைவர், வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

இந்து கலாச்சாரத்தின் உயிர்நாடியாக விளங்குபவை திருக்கோயில்களே. இதனை அப்பர்சுவாமிகள் பின்வரும் பாடல்மூலம் உணர்த்தியுள்ளார்.

திருக்கோயிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பல தளிகளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணாவூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே.

'கோயில்' என்ற சொல் மன்னனது அரண்மனையையும் ஆண்டவன் உறையும் இருக்கையையும் குறித்து நிற்கும். அரண்மனையில் அரசனுக்கு நடைபெறுகின்ற உபசாரங்கள் போன்றே திருக்கோயில்களிலும் ஆண்டவனுக்கும் இவை நடைபெற்றதால் இவ்விரண்டும் ஒரே நாமத்தால் அழைக்கப்பட்டன எனலாம். அதுமட்டுமன்றி ''ஆலயம்'' என்ற பதம்கூட அலைகின்ற மனதைப் பக்குவப்படுத்தி லயப்படுத்தும் இடம் எனப்பொருள் தருகிறது. மனதை ஒருவழிப்படுத்தி மெய்மறந்து தியானத்தில் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை ஈடுபடுத்தி வழிபாடு இயற்றப்படும் இடமேஆலயமாகும். ஆலயத்தின் தோற்ற அமைப்பு, அது அமைந்திருக்கும் சூழல், அங்குநடைபெறும் நித்திய நைமித்திய விழாக்கள் யாவும் மனதை லயப்படுத்தும் கருவிகளாக அமைகின்றன. விழாக்கள் கூடவடமொழியில் 'உற்சவங்கள்' என அழைக்கப்படுகின்றன, 'உற்சவம்' என்றால் சுகம்தருவது எனபது பொருளாகும். மனத்திற்குஆறுதல், அமைதிகிட்டவே இவை நடாத்தப்படுகின்றன. பொதுவாக நடைபெறுபவை விழாகளாகும். ஆனால் ஆலயங்களில் நடைபெறுபவை திருவிழாக்களாகும். இத்திருவிழா என்பதும் உற்சவத்தைப் போன்று சுகம் பெறவே நடாத்தப்படும் விழா எனப் பொருள் தந்து நிற்கின்றது.

இத்தகைய பின்னணியிற்றான் நம்முன்னோர் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டனர் எங்கும் நிறைந்த பரம்பொருளை ஒரு சிறு ஆலயத்தில் வழிபடமுடியுமா அன்றிக் காணமுடியுமா எனச் சிலர் கேட்கலாம். வீட்டிலும் ஆண்டவனை வழிபடலாம் ஆனால் அங்கு ஆலயத்திற் கிடைப்பது போன்று மனதை ஒருவழிப்படுத்துவதற்கான சூழல் அமைவதில்லை. இதனாற்றான் மனிதனது வாழ்வில் ஆலய வழிபாடு முக்கிய இடத்தை வகிக்கிறது. ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பது முதுமொழியாகும். எவ்வாறு பசுவின் பால் அதன் மடியிலிருந்து சுரக்கின்றதோ அவ்வாறேதான் ஈசனது அருள் சுரக்கும் இடமாக ஆலயம் அமைந்து விடுகிறது. ஆலயத்தில் வழிபாட்டிற்குரிய மூர்த்திகள் மின்சார சக்தியை வெளிப்படுத்தும் பல்புக்களை போன்றவையே. இத்தகைய திரு உருவங்களை வட மொழியாளர் 'பிரதிமா' என்பர். இதன் பொருள் ஆண்டவனின் பிரதிபிம்பம் என்பதாகும். திரு உருவங்களும் இப்பொருளையே தருகின்றன மனதை லயப்படுத்துவதில் இவை பிரதான இடத்தை வகிப்பதால் இந்து மதத்தின் அச்சாணியாக உருவவழிபாடு விளங்குகின்றது எனலாம்.

இத்தகைய அருட்சக்தி படைத்த ஆலயங்கள் தோன்றி வளர்ச்சி பெற்ற வரலாறு மிக அற்புதமானதாகும். மனிதன் இற்றைக்குப் பல இலட்சம் வருடங்களுக்கு முன்னர் வேட்டையாடுதலைப் பிரதான தொழிலாகக் கொண்டு அலைந்து திரிந்த காலத்தில், இயற்கை நிகழ்ச்சிகளான இடிமுழக்கம், வெயில், மழை, போன்ற வற்றுக்குப் பயந்து அவற்றை வழிபடமுற்பட்டான். இவ்வாறு ஏற்பட்ட பய உணர்ச்சிதான் நாளடைவில் இவற்றை இயக்குவதற்கு ஒரு சக்தி உண்டு என்ற உணர்வை ஊட்டியது. விவசாயியாக மனிதன் வாழத் தொடங்கிய பின்னர் இச்சக்திக்கு 'பெண்' 'ஆண்' உருவங்களைக் கொடுத்தான். காலப் போக்கில் இவற்றுக்கு திரு உருவங்களே அமைக்கப் பட்டுவிட்டன. ஆரம்பத்தில் தோன்றிய கோயில்கள் கூட மரங்களின் கீழேதான் காணப்பட்டன. புனிதத் தன்மை பெற்ற முக்கிய மரங்களான ஆல், அரசு, கடம்பு, வேம்பு போன்றனவற்றின் கீழ் ஆண்டவனின் உருவங்களை வைத்து வழிபாடு இயற்றினர்.

இற்றைக்குச் சுமார் 7000 வருடங்களுக்கு முன்னரே மனிதன் நாகரிகங்களைத் தோன்றுவித்தான் இவற்றுள் சுமேரிய எகிப்திய, கிரீஸ், இந்திய சிந்துவெளி நாகரிகம் ஆகியவைகுறிப்பிடத்தக்கவை. சுமேரிய நாகரிகம் செழித்திருந்த பிரதேசத்தில் இயற்கையான மலைகள் காணப்படாததால் மலைபோன்று செயற்கையாக அமைக்கப் பட்ட குன்றுகளில் ஆண்டவனுக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு இயற்றப் பட்டது. இவ்வழிபாட்டின் அச்சாணியாக விக்கிரக வழிபாடும் பூசை வழிபாடும் அமைந்தன. உலகிலே முதல் முதல் தோன்றிய இந்நாகரிகத்தின் வழிபாட்டு முறைகள் பல இன்றைய இந்து நாகரிகத்தின் வழிபாட்டு முறைகளோடு ஒத்துக் காணப் படுவது ஈண்டு நினைவு கூரற்பாலது. சாதாரணமாக மிக எளிமையான இல்லங்களில் வசித்த எகிப்திய நாகரிக மக்கள் ஆண்டவனுக்கு அழியாத கருங்கற்களில் கோயில் அமைத்து வழிபாடு இயற்றினர். கிரீற் நாகரிகத்தில் உருவவழிபாட்டோடு எருதும் பூசிக்கப்பட்டது.

தென்னாசிய நாகரிகத்திற்கு வித்திட்ட இந்திய சிந்து வெளி நாகரிகத்தில் உருவ வழிபாடும் எருது வழிபாடும் சிறப்புற்றிருந்தாலும் கூட இங்கே அமைக்கப்பட்டிருந்த கோயில்கள் பற்றிய விபரம் எமக்குச் சரிவரக் கிட்டவில்லை. சிந்து வெளி நாகரிகத்தின் நிலவிய உருவ வழிபாடும் பூசை வழிபாடுமே இன்றைய இந்து மதத்தின் மூலவேராகத் திகழ்கின்றன. இத்தகைய வழிபாட்டு முறைகள் பற்றி பின்னர் எழுதப்பட்ட புராண, இதிகாசங்களில் விபரங்கள் உண்டு. என்றாலும் தொல்லியற் சான்றுகளை உற்று நோக்கும்போது கிறீஸ்தவ சகாப்தத்தை அண்டி வெளியிடப்பட்ட நாணயங்களிலும் முத்திரைகளிலும் மரங்களின் கீழே உருவங்கள் வைத்து வழிபடப்பட்டதற்கும் இவற்றைச் சுற்றிப் பாதுகாப்பிற்காகச் சதுரமான ஒரு அலங்கார அமைப்பு இருந்ததற்கும் சான்றுகள் உள. சங்க இலக்கியங்கள் பேசும் ''பொதியில்'' ''மன்றம்'' போன்றவையும் இத்தன்மை வாய்ந்தனவேயாகும் திருக்கோயில்களைக் கட்டுவதற்குக் கூட பல நெறி முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. இவை பற்றிய விவரம் வாஸ்து சாஸ்திரங்களில் உண்டு. ஒரு ஊரில் மக்கள் குடியிருக்க முன்னர் முதல் முதலிலே ஆண்டவனுக்குரிய கோயிலே அக்காலத்தில் அமைக்கப்பட்டது. இவ்வாறு கோயிலை அமைக்கும் போதும் அவ்விடத்தின் நில அமைப்பை, மண் சேர்க்கையைப் பலவாறு சோதித்த பின்னர்தான் கட்டிட வேலைகளை ஆரம்பிக்கும் வழக்கம் இருந்தது பொதுவாகக் கோயில்கள் இயற்கை வனப்பு நிறைந்த இடங்களிலே அமைக்கப்பட்டன. பொழில்கள், கடற்கரை யோரங்கள், ஆற்றோரங்கள், மலைகள் இவற்றுட் சிலவாகும். முருகனது அறுபடை வீடுகள் இத்தகையதோர் பின்னணியை நம் மனக்கண் முன்னே படம் பிடித்துக் காட்டுகின்றன எனலாம்.

தொடக்கத்தில் அழியும் தன்மை வாய்ந்த பொருட்களைக் கொண்டே கோயில்கள் அமைக்கப்பட்டதால் இவை யாவும் அழிந்துவிட்டன. அழிவற்ற கருங்கல்லை உபயோகித்த கோயில்களை அமைக்கும் வழக்கம் வட இந்தியாவில் கி. பி 4-5 ஆம் நூற்றுண்டுகளில் குப்த வம்சகாலத்திலும் தென்னிந்தியாவில் கி பி. 6 ஆம் நூற்றுண்டுகளில் பல்லவ வம்ச காலத்திலும் தோன்றி வளர்ச்சி பெற்றது. ஆரம்பத்தில் ஒரு சிறிய சதுர அறையாகவே இவை காணப்பட்டன. இவ்வறையின் கூரைப்பகுதியிலோ

அன்றி ஏனைய பகுதிகளிலோ அலங்கார வேலைப்பாடுகள் காணப்படவில்லை. நாளடைவில் இவற்றுக்கு முன் புறத்தில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது. இம்மண்டபத்தையும் கர்பகிருகத்தையும் இணைக்க அர்த்த மண்டபம் அமைக்கப்பட்டது. பின்னர் மண்டபத்திற்கு முன்பக்கத்தில் மகா மண்டபம் அமைக்கப்பட்டது. மேலும் கர்பகிருகத்தின் கூரைப் பகுதியில் அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட ''சிகர'' என அழைக்கப்படும் அம்சம் இடம்பெற்றது இத்தகைய அமைப்புக்கள் தனித்தனிப் பிராந்தியச் சிறப்பியல்புகள் பெற்று வளர்ச்சி பெற்றன. என்றாலும் பொதுவாக வட இந்தியாவில் வளர்ச்சி பெற்ற கோயிற் கட்டிடக்கலையை இந்தோ ஆரிய அல்லது நகர கட்டிடப் பாணி என்றும், தென்னிந்தியாவில் வளர்ச்சி பெற்ற கோயில் கட்டிடக் கலையைத் திராவிட பாணி எனவும் அழைப்பர். வட இந்தியாவிற் அடிக்கடி ஏற்பட்ட அந்நியப்படை எடுப்புக்களும் ஆட்சியும் இந்துக்கோயில்கள் பலவற்றைச் சிதைத்துவிட்டன. இதனால் முழு இந்தியாவிலும் கோயில்கள் மலிந்து சிறப்புற்றுப் பாதுகாக்கப்படும் இடமாகத் தென்னிந்தியாவே விளங்குகிறது. தென்னகக் கோயில் அமைப்பில் கோபுரங்கள் ஒரு சிறப்பான அம்சம் கோயில் நகரங்களும் இன்னொரு சிறப்பம்சமாகும் மதுரை, ஸ்ரீரங்கம், ராமேஸ்வரம் போன்றவை இத்தகைய கோயில் நகரங்களே. முழு இந்தியாவிலும் மக்கள் வாழ்வில் ஒரு பிரதான நிறுவனமாகக் கோயில் வளர்ச்சி பெற்ற இடம் தென்னாடுதான் என்றால் மிகையாகாது. இத்தகைய தொரு நிலையை இவை மத்திய காலப் பகுதியில் பெற்றிருந்தன எனலாம் இவ்வாறு திருக்கோயில்களைக் கலைச் செல்வங்களாக வளர்த்தெடுத்த மனிதன் திருக்கோயில்களுக்குத் தத்துவார்த்த விளக்கமும் கொடுக்க முற்பட்டான். உதாரணமாகக் கர்ப்ப கிருகத்தின் அடித்தளத்திலிருந்து உச்சி வரை உள்ள பகுதிகளை நிற்கும் பாவனையில் உள்ள மனித உருவின் பல்வகையாக உறுப்புக்களோடு ஒப்பிடத் தவறவில்லை. இவ்வாறேதான் தரையில் நீளக் கிடத்திய நிலையிலுள்ள மனித உருவின் பாகங்களோடு கர்ப்பகிருகம் தொட்டுக் கோபுரம் வரை உள்ள கோயில் அமைப்புகளுக்கும் ஒப்புமை காண முற்பட்டான் அத்துடன் நம்முன்னோர் புறத்தே ஆண்டவனுக்கு அலங்காரமான கோயிலைக் கட்டிமகிழ்ந்தாலும் கூட உண்மையிலே ஆண்டவனது கோயில் மனிதனது உள்ளத்திலே உண்டு என்ற உணர்வோடும் வாழ்ந்தனர். பெரிய புராணத்தில் வரும் பூசலநாயனார் வரலாறு இதனையே எடுத்தியம்புகின்றது. திருமூலரும் அகக்கோயில் பற்றித் திருமந்திரத்தில் பலவாறு எடுத்துரைத்துள்ளார்.

வழிபாட்டிடங்களாக அமைந்திருந்த திருக்கோயில்கள் அக்காலக் கலைக்கூடங்களாகவும் விளங்கத்தவறவில்லை. அக்காலக்கலைஞர்களின் தமது கலைத்திறனை மக்கள் வாழ்ந்த இருப்பிடங்களில் வெளிக்காட்டப்படவில்லை. பதிலாக பேரின்பநிலையைத் தரும் ஆண்டவனின் இருக்கைகளிலே இக்கலைஞர்களின் திறன் வெளிக்காட்டப்பட்டது. இத்தகையதொரு பண்பு தென்னாசியக்கலையின் ஓர்சிறப்பம்சமாகும் இத்தகைய திருக்கோயில்கள் விழாக்காலங்களில் மக்கள் யாவரும் ஒன்றுசேரும் இடங்களாக அமைந்ததால் மக்கள் கலைச்செல்வங்களைக் கண்டுகளிக்கும் பொதுஇடங்களாகவும் இவைவிளங்கின. இதனால் பண்டைய கட்டிடம், சிற்பம், ஓவியம் போன்றனவற்றின் சிறப்பை இவற்றில் காணமுடிகிறது. அத்துடன் இக்கோயில்களே இசை நடனம் போன்றகலைகளைப் போதிக்குமிடங்களாகவும், தலைசிறந்த கல்விச்சாலைகளாகவும் விளங்கின. இக்கோயில்களின் போதிப்பில் கல்விமட்டுமின்றி மருத்துவம் போன்ற துறைகளும் வளர்ச்சிகண்டன. திக்கற்றவர்களுக்குப் புகலிடமளிக்குமிடங்களாக விளங்கிய இவை மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிறுவனங்களாக அக்கால சமூகத்தில் நிலைபெற்றிருந்தன. இதனாற்றான மத்தியகால இந்திய வரலாற்றில் இவற்றிக்கு தனிஇடமுண்டு.

அருள் சுரக்கும் நிலையங்களாகவும் அலையும் மனதை லயப்படுத்தும் கூடங்களாகவும், ஆண்டவனின் பெரியமாளிகைகளாகவும் விளங்கிய இத்திருக்கோயில்களின் இன்றையநிலை பெருமளவு வேதனையையே தருகிறது என்ருல் மிகையாகாது. பெரும்பாலான திருக்கோயில்களில் புனிதத்தன்மை அருகியே காணப்படுகிறது. பாழடைந்த மண்டபங்களாகவே இருக்கின்றன. மனிதனுக்குச் சுகத்தைத் தருவதற்காக ஏற்படுத்தப்பட்ட நித்தியநைமித்திய கிரியைகள், விழாக்கள் அத்தகைய நோக்குடன் இன்று மேற்கொள்ளப்படுவதில்லை. ஆண்டவனின் ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் மனிதனுல் மேற்கொள்ளப்படும் ஏனைய விழாக்களிலிருந்து மாறுபட்டன. இதனுற்தான் ஆண்டவனின் ஆலயவிழாக்களைத் திருவிழாக்கள் என நம்முன்னேர் அழைத்தனர். நித்திய பூசைகளின் குறைபாட்டை நிவர்த்திசெய்யவே இவ்வாறு நைமித்திய விழாக்கள் எடுக்கப்பட்டன. துர்திஷ்டவசமாக இவை குறைகளையும் விழாக்களாக அமையாது ஆண்டவனது சிந்தனையே மக்கள் மறந்துவெறும் கேளிக்கைகளில் ஈடுபடும் தெருவிழாக்களாகவே பெரும்பாலான கோயில்களின் திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன இதனுல் இன்று பெரும்பாலான திருக்கோயில்கள் ஆண்டவனின் ஒளி, காட்சி அடியார்களுக்குக் கிடைக்காத வெறும் கட்டிடங்களாகவே காணப்படுகின்றன. இத்தகைய நிலைமாறினுல்தான் நமது கலாச்சாரம் வாழமுடியும். இல்லாவிட்டால் அது அழிந்தேவிடும். எனவே இந்துக்கலாச்சாரத்தின் உயிர்நாடியான ஆணிவேரான இருதயமான இத்திருக்கோயில்களை தலைசிறந்த வழிபாட்டிடங்களாக ஆக்கும்பொறுப்பு ஒவ்வொரு இந்துவிடமும் உண்டு. இவ்வாறு ஆக்குவதற்கு திருக்கோயில்களில் நேரகாலந் தவருது நித்திய நைமித்திய கருமங்கள் நடந்தேறுதல் அவசியம். இவை இவ்வாறு நடப்பதற்குத் திருக்கோயில்களுக்கென ஒழுங்குகளும் கட்டுப்பாடுகளும் அவசியமாகின்றன. இத்தகைய ஒழுங்குகளை அடியார்கள் மதித்துப் போற்றி நடக்கும் போது திருக்கோயில்களில் ஆண்டவனின் அருட்காட்சியை அடியார்கள் கண்டுகளிப்பது இலகுவாகின்றது.

---

வாழ்க்கை போரில் வெகுதூரம் புத்தி நம்முடன் வராது. ஆபத்தான்வைரத்தில் நழுவிவிடும். சிரத்தையே நம்பிக்கையோ புத்தியை விடச் சிறந்ததுனை ஒருவன் தான் அறிவாளி என்ற அருங்கரத்தை அறவை ஒழித்து ஆண்டவரிடம் தன்னை அர்ப்பணம் செய்தபிறகுதான் அந்த நம்பிக்கை நிலை பெறுகிறது.

— காந்திஜீ —

# வாழ்வின் துன்பநிலைச் சித்திரிப்புக்கள்

கனகசபாபதி - நாகேஸ்வரன், பீ.ஏ. (சிறப்பு)
துணைவிரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

"ஓவுநாள் உணர் வழியும் நாள் உயிர்
போகும் நாள் உயர் பாடைமேல்
காவும் நாள் இவை என்றலாற்கரு
தேன்கிளர் புனற் காவிரிப்
பாவுதண் புனல் வந்திழி பரஞ்
சோதிப் பாண்டிக் கொடுமுடி
நாவலா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சி வாயவே."

— சுந்தரர் தேவாரம்

பக்திக் கவிஞர்களது மனப்போராட்டம் வாழ்க்கைப் பின்னணி என்பவற்றை அவர்களது ஆக்கங்கள் மூலம் அறிந்து கொள்ளும் முறைமை தமிழ் இலக்கியமரபில் பெருமளவு போற்றப்படுவதில்லை. புலவர், கவிஞர், பாவலர் என்போர் அறிவால் உயர்ந்தவர்கள், அவர்கள் மனிதப் பலவீனங்களுக்கு உட்படாதவர்கள் என்ற கருத்தே, சைவத் தமிழுலகில் பெரிதும் அழுத்தம் பெற்றுள்ளது. கவிதை உரைநடை இலக்கியப் புனைவுகளில் தீஞ்சுவை பயப்பன துன்பநிலை சுட்டியசெய்திகளே. வாழ்வின் துன்பநிலைச் சித்திரிப்புகள் பற்றிய பக்திக்கவிதை இலக்கியநெறி நின்ற ஓர் ஆய்வாக அமைகிறது இக்கட்டுரை.

> "பக்திப் பாடல்களைச் சிறிது ஊன்றிக் கவனித்தால்
> அவற்றைப் பாடியவர்கள் துன்பமில்லாதவர்கள் என்று
> எவ்வகையிலும் கூறிவிடமுடியாது" 1

அடியார் படுந்துயராயினவெல்லாம் கண்டு அந்த ஒளியிலே நாமும் வைராக்கியத்தோடு உள்பொருளொன்றிலே திடமான பற்றுதல் ஏற்படுத்த வேண்டியஅவசியம் ஏற்படுகின்றது. 'மதமும் இலக்கியமும்' இணைந்தவொரு மரபினை அழுத்தியுரைக்க வேண்டிய தேவை இன்று உணரப்படுகின்றது.

> " - - - பொதுவான பண்பாட்டு வளர்வாக்கத்தில் மதமும்
> இலக்கியமும் ஒன்றுடன் ஒன்று இணையும் முறைமையை
> அறிய விரும்புவது வெறும் இலக்கியவரலாற்றுத்
> தேவையாக மாத்திரமல்லாது அத்தியாவசியமான சமூகத்
> தேவையாகவும் அமைகின்றது புலனாகின்றது" 2

உலகிலே பிறந்துழலும் நிலையினை 'ஊழ்வினைப்பயன்' என்பர். பற்று நிலையில் கிடைக்கும் பயனே பிறவி.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது அறிக'' 3

'ஊழ்வினை உருத்துவந்தூட்டும்' என்ற கோட்பாட்டை அரண்செய்வது இரட்டைக் காப்பியமென்பதில் ஒன்றான சிலப்பதிகாரம்.

''ஊழ் இருவகை ஒன்று ஆகூழ். மற்றது போகூழ்'' 4

விதியின் வலியை வென்றவர்கள் தமிழிலக்கிய, பக்தியிலக்கிய மரபில் அழியாஇடம் கொண்டவர்கள்; எப்போதும் நினைக்கப்படுபவர்கள்.

''மார்க்கண்டேயர், நளாயினி, சாவித்திரி, புறனானூற்றையாளர்கள்
தவவலியாலும் கற்பின் திண்மையாலும் ஊழையும்
உப்பக்கம் கண்டவர்கள் அவர்கள். அஃதாவது விதியை
வென்றவர்கள் அவர்கள்'' 5

'விதியின் வழியே ஓடிச்செல்லும் வாழ்வு' என்ற கொள்கை இன்றும் ஏற்புடைய தொன்றாகிறது. புறநானூறு,

''கல்பொரு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம்'' எனச்சுட்டும்.
பெரிய ஆற்றினது நீர் ஓட்டத்தின் வழியே
தெப்பக் கட்டை ஓடிச் செல்வதுபோல உயிரானது
விதியின் வழியே ஓடிச் செல்லும். நம்முடைய
வாழ்வு பொய்யான வாழ்வு. ''நிதிதனை அன்ன பொய்வாழ்வு''
என்று அருணகிரிநாதர் பாடுகிறார்'' 6

''வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்'' 7

மனம் இறைவனின் தேவையை, நினைப்பை நாடும் நிலை எப்போது வரும்? என்பது சுவைபயக்கும் வினாவாகும்.

''நிலையாமை பற்றிய கொள்கைகள் மனத்தில் ஏற்படுத்திய
சஞ்சலமும், கடுந்துறவறத்தை அனுஷ்டிக்க இயலாமையும்,
எல்லாம்வல்ல இறைவனொருவனின் தேவையை மக்களுக்கு
உணர்த்தின. வாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாகக்
கண்டு துன்பங்களை நீக்குவதற்காகக் கணக்கில்லாத
கட்டுப்பாடுகளை அமைத்து அந்தக்கட்டுப்பாடுகள் தரும்
துன்பத்தைச் சகிக்கமுடியாமல் வருந்தும்பொழுது
கருணை வள்ளலான இறைவன் மீது நம்பிக்கைவைத்து
அந்தநம்பிக்கையில்வாழ மனம் விழைகிறது'' 8

வாழ்க்கையில் இன்னற் பட்டவர்களின் வரலாறுகள் நிலையான தத்துவங்களையும், நம்பிக்கையினையும் ஊட்டி நிற்கின்றன. குசேலோபாக்கியானம், நளவெண்பா, பெரிய புராணம், கந்தபுராணம், திருமுறைகள் திருவாதவூரடிகள்புராண இலக்கியங்களினாலும் பட்டினத்தடிகள், தாயுமானவர், நால்வர், அருணகிரிநாதர் வரலாறுகளினாலும் வாழ்க்கைத்துன்ப நிலைகளினை - அதன் கோரத்தை நிலைநிறுத்தலாம்.

> ''கண்ணனின் சகபாடி குசேலர். குசேலர் குடும்பத்தில் 29 ஆத்மாக்கள். சிறிது பெரிது காணமுடியாத 27 பிள்ளைகள். குடிசையில் எறும்புக்கும் ஒரு தானியம் அகப்படாது; வறுமையின் எல்லை. ஆயினும் சுசீலை தர்மத்தின் எல்லை; கணவர் அர்த்தத்தின் எல்லை'' 9

நால்வருணமும் சோதனைகளை எதிர்கொள்வதுமுண்டு.

> ''நளன் கானகத்திற் காரிருளில் காரிகையைக் கைவிட்டான். அலறி அலறிக் கைவிட்டான். அது துறவறம் அன்று அது சனிக்கோளாறு'' 10

> ''நூற்றெட்டு யுகம் சூரபத்மாவின் ஆட்சியின் கீழ் இருந்தமையால் மானம் போய் மதிகெட்டுவிட்டோம் என்கிறார்கள் தேவர்கள். இது கந்தபுராணம்'' 11

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் பட்ட வேதனைகளால் இறைவன் புகழ் பேசப்படுவதைத் தமிழிலக்கியத்தின் வரலாறு சுட்டிநிற்கிறது. இறைவியான உமையம்மையாரே வருந்தும் நிலை குறிக்கப்படுகின்றது.

> ''- - - - - அன்றொருநாள் பத்துத்தலை இராவணன் பத்துத்தலைகளையும் நிமிர்த்திக்கொண்டு (காரைக்கால்) அம்மையார் தலையாலே நடந்த கைலாசத்தைக் காலாலே நடந்தான். அந்த அக்கிரமச் செயலைப் பொறாத உலகமாதாவாகிய உமையம்மையார் அஞ்சிப் பதை பதைத்தார். இவன் செயல் எப்படி முடிகிறதோ என்று வருந்தினார். ஈன்றாள் வருந்தாமல் நமக்கு வருந்த வேறு யார் இருக்கிறார்கள்'' 12

சிவனடியார்களுக்கும் மாலடியார்களுக்கும் சிற்சிலவேறுபாடுகள் கவிதையனுவத்திலே மட்டுமன்றிக் காதலனுபவத்திலும் நுணுக்கமான பேதங்களுண்டென்பர். **சிவபோகம், பகவத்காமம்** என்பன சைவ வைணவக் கோட்பாட்டினைப் பேதப்படுத்தி நிலைநிறுத்தும்.

> ''திருமாலின்மேல் அடியார்க்குள்ள ஈடுபாடு **பகவத்காமம்** என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது அதற்கு நேராகச் **சிவகாமம்** என்பது வழக்கில் இல்லை. உமையம்மையார் மட்டுமே **சிவகாமி** என்று சிறப்பிக்கப்பட்டுள்ளாள். யோகம்போலப் போகமும் இறைவனை அடைய வழியென்று வைணவம் கொண்டுள்ளது. சைவம் **சிவபோகம்** என்று ஒன்றைக் கொள்வதில்லை'' 13

சிவனின் வீரச்செயல்களென பிரமன் சிரம்கொய்தமை, அந்தகாசுரன் வதம், முப்புரமெரித்தமை, தக்கன் சிரங்கொய்தமை சலந்தராசுர சங்காரம் யானையை உரித்தமை, காமனை எரித்தமை எமனை உதைத்தமை என்பன கூறப்படும்.

''போராடும் வேளை விழியழலெவிப் பொடிப்படுத்தி
நேரார் புரத்தை நகையா லெரித்து நிலாவணிந்து
காராழி நஞ்சுண்டு தக்கன்தலை வேள்விகடிந்துஅரக்கர்
னேராத்தலை நெரித்தே சண்டன் வீழவுதைத்தனனே'' 14

திருமாலின் வீரச்செயல்களென பூதகிவதம், சகடாசுரன்வதம், ஹம்சன்வதம் என்பனவும் அவதாரங்களென, மச்சாவதாரம், கூர்மஅவதாரம், வராகஅவதாரம் நரசிம்மஅவதாரம்; வாமணஅவதாரம்; பரசுராமஅவதாரம்; இராமஅவதாரம்; பலராமஅவதாரம்; கிருஷ்ணவதாரம்; கல்கிஅவதாரம் என்பன குறிக்கப்படும்

பல்லவர் காலத்துப் பக்தி இயக்கத்தினால் விளைந்த திருமுறைகளினூடேயும், நாயன்மார், அடியார்களது வாழ்வினடியாகவும் அதற்குப்பிற்பட்டகால, தாயுமானவர், அருணகிரியார், பட்டினத்தார் நிலைநின்றும் வாழ்வின் குறிக்கோள் எனும் படியான தன்மைகள் சிலவற்றைக் கவனிக்கலாம்

இத்தொடர்பில்,

''தெய்வங்களுக்கு பனித நிலையும் மனிதஉறவும் கற்பித்து
மனிதனுடன் மனிதன் உறவு கொண்டாடுவது போன்று
தெய்வத்துடன் உறவு ஏற்படுத்திக்கொள்ளும் ஓர்உணர்வு
நிலை பக்தி இலக்கியங்களிலே மாத்திரமல்லாது சாதாரண
வாழ்க்கையனுபவத்திலும் நிலவுவதை நாம் அவதானிக்கத்
தவறக்கூடாது'' 15

'' - - - துரியோதனதியர் பாஞ்சாலியை வஸ்திராபகரணம் செய்தபோது
ஒருகையால் சேலையைப் பிடித்தபடி மற்றக்கை உயர்த்திக்
கண்ணா! கண்ணா! என்று அரற்றி அழுதாள்.
கண்ணன் வரவேயில்லை இறுதியில் இருகரங்களையும் உயர்த்தி
நெஞ்சுருகி அழுதபொழுதுதான் கண்ணன் தரிசனம் கொடுத்தார்.

பாஞ்சாலியைப்போன்று தன்னைமறந்து தன்னை இழந்தநிலையில் கடவுளிடம் சரணாகதி அடையும் மனப்பக்குவம் நமக்கு வரும்பொழுது மாத்திரம் தான் இறைவனுடைய அருளாசிகள் கிடைக்கும்.

மனப்பயம் மனக்கலக்கம் வரும்பொழுதும் வராதபொழுதும் அவனையேதஞ்சம் என்றெண்ணி நின்றால் பொல்லாப்பு அகன்று வாழலாம் மனம் நொந்து போய்த் தளர்ந்த நிலையில் இறைவன்பாற்கொள்ளும் சரணாகதியைத் தவிர மனத்துயரம் தீர்ப்பதற்கு வேறென்னவழி? வேறென்னகதி!'' 16

செய்யுள் இலக்கிய நோக்கிலே,

''தமிழில் வழங்கும் பாவடிவங்களும் பிரபந்தவகைகளும் பல்லவர் காலத்திலேயே பெருவளர்ச்சி அடையத் தொடங்கின. இதனால் அக்கால இலக்கிய வடிவங்கள் நுணுகி ஆராயப்படத் தக்கன'' 17 எனக்கூறுகின்றார்.

பேராசிரியர் க. கைலாசபதி.

பல்லவர் கால இலக்கியத் திறனை மதிப்பீடுசெய்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் ''இக்காலப் பகுதியிலே தமிழ் இலக்கியப்போக்கிலே ஒரு மாற்றம் ஏற்பட்டது. தமிழகத்திலே செல்வாக்குப்பெற்ற சமண பௌத்த மதங்கள் ஆதிக்கத்தை வீழ்த்தச் சிறந்த கருவியாகப் பக்தி இயக்கம் தோன்றிற்று'' 18 என்பார்.

பக்தி இலக்கிய நோக்கு நிலைநின்று.

''சமண சமயத்திலே பல காலமிருந்த திருநாவுக்கரசர் அச் சமயத்தின் நல்ல பண்புகளையும் இழித்துரைக்க வேண்டியவற்றையும் தன்பாடல்கள் மூலமாகப் புலப்படுத்துகின்றார். ''வாழ்வது மாயம்மிது மண்ணாவது திண்ணம்'' என்று சமணபௌத்தம் போதித்த வாழ்க்கை நிலையாமையைப் பக்தியடியார்களும் எண்ணிப்பார்த்துள்ளனர். ஆனால் அவர்கள் அத்துடன் இறைபக்தி அத்தகைய தன்மை எல்லாவற்றையும் மாற்றியமைக்கும் என்றும் 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்றும் மக்களுக்கு நம்பிக்கையூட்டினர்'' 19

திருமுறைகள் இறைவன் புகழ் கூறிஏத்தும் மாலைகள் மட்டுமன்றி அருளார்களது வாழ்க்கையனுபவத்திரட்டு என்றும் கூறலாம்.

''திருமுறை அருள்வாக்கு அருள் அன்பின் முதிர்ச்சி அன்பு அறிவின் விளைவு. அறிவு அறத்தின் பயன். அறத்திற்கு மூலம் தர்மம்'' 20

அப்பர் திருப்பாடல்கள் அவர்தம் சமணசமய வாழ்வையும் கூறுவன.

''அப்பருடைய மதமாற்றம் - - - வாழவேண்டிய நெறி சமணத்துறவியாயிருப்பதல்ல, சிவபக்தனாயிருப்பது என்பது, அவர் மதம் மாறியபொழுது கண்ட உண்மை'' 21

சைவம் சார்ந்த அப்பரைச் சமணர் துன்புறுத்தினர் இடுக்கண் பலவிளைவித்தனர்

'' - - - மந்திரிமாரைப்பார்த்து ''இச்சமயத் துரோகிகளுக்குச்
செய்யவேண்டிய தண்டனையாது?'' என வினவ, அவர்கள்
இவரை நீற்றறையுள் விடல் வேண்டுமென்றார்கள்.
உடனே அரசன் நீற்றறையுள் இடும்படி தன் தண்டாளர்க்குப்
பணிக்க, அக் கொடியவர்கள் நாயனாரைப் பற்றிச் சென்று
வெவ்விய நீற்றறையுட் புகுத்திக் கதவைப்பூட்டி விட்டார்கள்.
நாயனார் அதனுள்ளிருந்து கொண்டு பரமசிவனுடைய திருவடி
நீழலைத் தியானித்து ''மாசில்வீணையும் மாலைமதியமும்'' என்னும்
தேவாரப்பதிகத்தைப் பாடியருளினார். அந் நீற்றறை
வீணைகானமும், சந்திரனும், தென்றலும் இளவேனிலும்
பொய்கையும் போலக் குளிர்ந்தது. ஏழுநாட்சென்றபின்
சமண அரசன் நீற்றறையின் கதவைத்திறப்பித்துப்
பார்த்தபொழுது எவ்வகையான ஊறுபாடுமில்லாமல்
அவருடைய மேனி அழகுடன் திகழ்வதைக் கண்டு எல்லோரும்
அற்புதமடைந்தார்கள்'' 22

சமணர் தீங்கு பல்வேறு உருவங்களிலேயும் அப்பரைச் சீண்டிற்று. நஞ்சூட்டிய பாற்சோறு கொடுத்தனர். யானையை ஏவினர்; கல்லுடன் சேர்த்துக்கட்டிக் கடலில் இட்டனர். இவற்றுக்கெல்லாம், ''படைக்கலமாக உன் நாமத்தெழுத்தஞ் சென்நாவிற் கொண்டு'' என அவரே கூறுவதுபோன்று ''சிவாயநம'' வென்று சிந்தித்து வென்றார். தில்லைமாநகர்ச்சிற்றம்பலவனுக்கு அடிமை பூண்டவராய அப்பரை அல்லல் என் செயும். அருவினையென்செயும்? தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செயும்?

''பரம்பொருளாகிய சிவபிரானது அருளாட்சிக்கு உட்பட்ட நாம்வேறு
எவருடைய அதிகாரத்திற்கும் அடிபணிய மாட்டோம்.
மரணம் கூட எம்மை அச்சுறுத்தமுடியாது'' என்ற கொள்கைப்பற்றுடன்
கூடிய வீரவுணர்வை (நாமார்க்கும் குடியல்லோம்)
அத் திருத்தாண்டகம் புலப்படுத்தியது'' 23

''அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்'' என்ற திருமந்திரக் கோட்பாட்டினடியாக வாழ்ந்த அப்பர் எதற்கும் அஞ்சவில்லை. அஞ்சுவதுமில்லை, அஞ்சவருவதும் இல்லையென்று வாழ்ந்த பெருந்தகை அவர்.

''அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்
தாடவனுக்கொரு மரணம் அவனிமிசைப்பிறந்தோர்
துஞ்சினரென்றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குந்
துன்மதி மூடரைக் கண்டாற் புன்னகை செய்பவன்யான்''

வீரன் ஒருதரம் இறக்கிறான். பயங்காளி நூறுமுறை சாகிறான் இது ஆங்கில இலக்கிய வரலாறு பற்றியதுமாம்.

பக்தியியக்கம் சாத்வீகப்போராட்டம் நிகழ்த்திய வரலாறு. அதனை.

> ''- - - - மலைபோலநின்றார் அப்பர். இடுக்கண்கள் இடுக்கணுற்றன. அப்பர் வெற்றி பெற்றார். தமிழ் மண்ணில் நடந்தமுதல் சாத்துவீக எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெற்றது'' 24

எனக்குறிப்பிடுகின்றார் பேராசிரியர், ஆ. வேலுப்பிள்ளை.

கொடுமைகளுக்குப் பணியாது கொள்கை வழிநின்று வரலாறு படைத்தவர் அப்பர் பெருமான்.

> ''குறித்தஒரு சூழ்நிலையில் நாவுக்கரசர் புலப்படுத்திய உணர்வும், அதன் பயனாக அனுபவித்த சித்திரவதைக்கொடுமைகளும் அடக்குமுறையாலும் அதிகார வெறியாலும் அல்லற்படும் எல்லாச் சமூகச்சூழ்நிலைகளுக்கும் பொதுவானவைதான். கொடுமைகளுக்குப் பணியாது கொள்கை வழி நிற்போரே வரலாறு படைக்கின்றார்கள்'' 25

பக்திவைராக்கியம் இருந்தவாறு.

மாணிக்கவாசகசுவாமிகள் வாழாப்பத்து அடைக்கலப்பத்துப் பாடித் தன் நிலையைப் புலப்படுத்தியவர்.

> ஆறொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
> ஆண்ட நீ அருளிலையானால்
> வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
> வருக என்றருள் புரியாயே'' 26 என்று

தன்னைநொந்து இறைவனைக் குழைவிக்கின்றார். அடியார்படுந்துன்பங்களை ஒல்லைவந்து போக்குபவன் இறைவன். அவரைச் சிக்கெனப்பிடித்துத் தம்பக்தி வலையில் படுத்தியவர் மணிவாசகர்.

வாதவூரரின் கவிதையில் பக்தி மனிதமனத்தின் உணர்வாழத்தைத் தொடும் அற்புத சக்தியாகப் பரிமளிக்கத் தொடங்குகின்றது. வாதவூரடிகள் என்ற ஞானியின் மனப்போராட்டங்களையும், இறையனுபவத்தையும், ஞானநிலையையும் ஆத்மத்துடிப்பையும் காட்டுவது திருவாசகம்.

இறைவனின் பெருங்கருணையினை நினைந்துருகித் தன் தனிமையைக் கண்ணீர் வரக் கூறுகின்றார் மணிநாவார்.

> ''தொல்லையோரிருவர் தேடும் சோதியே யாதுசெய்வேன்
> தில்லையோர் பரவ நின்றதெய்வமே யாதுசெய்வேன்
> இல்லையோ கருணை நின்பாலின்றெனை யடிமைகொண்டா
> யல்லையோ தமியேனின்ன லறிதியோ வறிந்திலாயோ'' 27

> ''யாருடனினிப்புகல்வே னென்னுடையாய் வைகையினன்
> னீருடையா தடைக்கும் வகை நீசிறிதின் றருளாயேல்'' 28

''தாயுமிலை தந்தையிலை தமருமிலை தமியேனைப்
பேயினு டனின்றாலும் பிரித்தறிய வொண்ணாது
தீயதென திலம்பாடென் சிந்தையில் வெந்துயர்தீர
நீயருளாதொழியினுயிர் நீப்பேன் மற்றென்செய்கேன்'' [29]

பரிபூரணானந்தம் பாடியவர் தாயுமானஅடிகள். மனதற்றநிலை - - பற்றற்றநிலை வேண்டிப்பாடுகின்றார்

''தம்முடைய சொந்த உடலில் வெறுப்பு, சூழவுள்ள உலகில்வெறுப்பு,
இளமைத்துடிப்பில் வெறுப்பு தம்முடைய உள்ளத்தைப் பற்றியே
அவநம்பிக்கை, இத்தியாதி காரணங்களால் உலகவாழ்க்கையை
நரகமெனக்கொண்டு அங்கிருந்து வெளியேறத்துடிக்கும் ஞானிகளில்
ஒருவர்தாம் தாயுமானவர் வேண்டாத வாழ்வை முடித்துக்கொள்ளவும்
யமபயம் தடையாக அமைகிறது. இந்தநிலையில் இவருக்கு இவ்வுலகில்
இன்பம் எதுவும் கிடைக்கமுடியாது. கிடைத்தாலும் இன்பமும்
துன்பமாகத் தெரியும்படி இவர்தம் மனதைப்பக்குவப்படுத்தி
வைத்திருப்பார். இந்த இயல்பை உணர்ந்ததனாலேதான்
பாரதி துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள்தருவாள் என்றுபாடினார்'' [30]

மரணபயம் அரசனுக்கு உண்டு. ஆண்டிக்கும் உண்டு மரணம் நிச்சயமாகவரும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் மரணத்தை வெல்ல எல்லோரும் தகுந்த பாதுகாப்பைத் தேடிக்கொள்வதில்லை. மரணாவஸ்தை வரும் என்றும் அறிந்தும் பாதுகாப்பைத்தேடாதிருப்பது அறிவுடைமை ஆகாது. பாதுகாப்பு இறைவன் திருவருளே. இதை அறிந்தவர்கள் மரணத்துன்பத்துக்கு அஞ்சவேண்டியதில்லை.

''சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான் வந்து முற்றும் எனலால்
சகமீ திருந்தாலும் மரணம் உண்டென்பது
சதா நிஷ்டர் நினைவதில்லை'' என்று தாயுமானவர் பாடுவார்.

மரணம் இன்னகாலத்தில்தான் வரும் என்று சொல்லமுடியாது. எந்தச்சமயத்திலும் அது வரும்என்பதை உணர்ந்து தகுந்த பாதுகாப்பைத் தேடிக்கொள்ள வேண்டும் மரணம் வரும்போது எவருடைய துணையும் நமக்குப்பயன்படாது. நாம் செல்லும்வழி பயந்த தனிவழி.

''மைவரும் கண்டத்தர் மைந்த கந்தா என்றுவாழ்த்தும்இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறியேன் கற்றகல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே''

(கந்தலரங்காரம் 84)

''தருக்கி நமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்த விறல் படைத்தஇறை
கழற்கு நிகராகும்'' இது வேல்வகுப்பு'' [31]

சூரன் பலதலைகளையும் அளவில்லாத கைகளையும் உடைய பெரியவடிவத்தை விரைந்து எடுக்கிறான். இவன் நம்மைக் கொல்லும்படி வருகின்றான் என்று எண்ணித் தேவர்கள் ஓலமிட்டு ஓடுகிறார்கள்.

''தேவர்கள் தேவேஓலம் சிறந்த சிற்பனே ஓலம்
மேவலர்க்கு இடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க்கு எளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரும் ஆகிநின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்

தேவரீர் காலதாமதம் செய்தால் இவன் மாய இருளில்
மறைந்து நின்று எல்லாவற்றையும் உண்பான்.
தேவரீர் இதனைத் திருவுளம் கொள்ளவில்லைப்போலும்!
இவன்உயிரை இன்னே விரைந்து கவர்ந்து எம்மைக்
காத்தருள்க,, என்று மயில்வாகனமாக நின்ற இந்திரனும்
வேண்டுகின்றான்'' 32

மானுட சோகத்தின் அழுகுரலைப் பட்டினத்துப்பிள்ளையாரது பாடல்களிலே தெளிவாகக் காணலாம். **வாழ்க்கை அவலம்** என்ற அனைத்துமனிதர்க்கும் பொதுவான அனுபவத்தைக் கூறுவதனால், இறைவன் தாள் சரணடையும் தன்மையினை அழுத்தியுரைக்கின்றார்.

கட்டியணைத்திடும் பெண்டிரும் மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடிவைப்பாரோ விறைவாகச்சியே கம்பனே. 33

புலம்பலாக அமையும் மற்றொருபாடல் நிலையாமை குறித்தவாழ்வு சுட்டுவதாயுள்ளது.

''காம்பிணங்கும் பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங் காசினிக்கும்
தாம்பிணங்கும் பல ஆசையும் விட்டுத் தனித்துச் செத்துப்
போம் பிணந்தன்னைத் திரளாகக் கூடிப் புரண்டினிமேல்
சாம்பிணங் கத்துதையோ என்செய்வேன் தில்லைச்சங்கரனே. 34

உடற்கூற்று வண்ணம் மானுட ஒழுக்கத்தையும், மதம்சார்ந்த பற்றுக்கோட்டினையும் குறித்தநல்ல எடுத்துக்காட்டு.

''கடுகி நடந்து சுடலையடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடியழல் கொடுபோட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகிஎலும்பு கருகியடங்கி
யோர்பிடி நீறுமிலாத உடம்பை
நம்புமடியேனை இனியாளுமே'' 35

விஞ்ஞானம் கதித்த இந்த எந்திரவுலகத்திலே மனிதன் வெறும் எந்திரமாய் விட்டான்; நாயாய் அலைகிறான்; பேயாய்த் திரிகிறான். எண்சாணுடம்புக்கு வயிறே பிரதானமாய்விட்டது. உணவுப்பிரச்சினை மொழிப்பிரச்சினை முதலியன இன்றைய பேச்சாய்விட்டன. இனிவருங்கால மனிதனுக்குச் சிரிப்பு வராது, அது கொட்டாவியாய் மாறிவிடும் போலத்தெரிகிறது. 36

இவை தமிழுலகு ஊன்றிச் சிந்திக்கவேண்டிய கருத்துக்களாகும்.

# அடிக்குறிப்புகள்.

1. வேலுப்பிள்ளை, பேராசிரியர், டாக்டர், ஆ. தமிழர் சமய வரலாறு
பாரிபுத்தகப்பண்ணை, சென்னை, 1980 ப. 182

2. சிவத்தம்பி, பேராசிரியர், டாக்டர், கா. தமிழிலக்கியத்தில் மதமும் மானிடமும்,
தமிழ்ப்புத்தகாலயம், சென்னை 1983, முன்னுரை, ப. 9

3. மணிமேகலை 64—67 அடிகள்

4. கணபதிப்பிள்ளை, இலக்கிய கலாநிதி, பண்டிதமணி, சி. சிந்தனைக்களஞ்சியம்
(இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
பாராட்டுவிழாச் சபை வெளியீடு-3, சுன்னாகம். 14 8-1978) ப. 3

5. மே. கு. நூல் ப. 8

6. தனபாலசிங்கன், செ. வேல் உண்டு வினை இல்லை சுன்னாகம், 1972 ப. 49

7. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், ஏழாம் திருமுறை: தலமுறை,
ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீ வைகுண்டம், 4-6-65 திருக்கேதாரம் பதிகம் 1

8. வேலுப்பிள்ளை, பேராசிரியர், டாக்டர், ஆ. மு. கு நூல், பக் 103—104

9. கணபதிப்பிள்ளை, இலக்கியகலாநிதி, பண்டிதமணி, சி. மு. கு. நூல், ப. XIII

10. மே. கு. நூல், ப. 5

11. மே. கு. நூல், ப. 26

12. மே. கு. நூல், ப. 151

13. வேலுப்பிள்ளை, பேராசிரியர், டாக்டர், ஆ. மு. கு. நூல், ப. 123

14. பாரிக்க உபமான சங்கிரகமும் புகழேந்திப் புலவர் செய்த இரத்தினச் சுருக்கமும்

15. சிவத்தம்பி, பேராசிரியர், டாக்டர், கா. மு. கு. நூல், ப. 137

16. கெங்காதரானந்தா, ஸ்ரீமத் சுவாமி, ஞானமண்டலம், சிவயோகசமாஜ வெளியீடு,
திருகோணமலை, 1984 பக். 6-8

17. பேராசிரியர், டாக்டர், அ. சண்முகதாஸ் எழுதிய தமிழ்ப்பாவடிவங்கள் என்ற ஆய்வு
நூலுக்கு பேராசிரியர் டாக்டர், க. கைலாசபதி வழங்கியுள்ள முகவுரை, ப. 4
(யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு–1982)

18. மேற்படி நூலுக்கு பேராசிரியர், டாக்டர், சு. வித்தியானந்தன்
வழங்கியுள்ள அணிந்துரை, ப. 1

19. சண்முகதாஸ், பேராசிரியர், டாக்டர், அ. ''தமிழகத்திற் பக்தி இயக்கம்–
தோற்றமும் வளர்ச்சியும்'', சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்,
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
மணிவிழாச் சபைவெளியீடு, துர்க்காபுரம், தெல்லிப்பழை, 6-3-1985 ப. 46

20. கணபதிப்பிள்ளை, இலக்கிய கலாநிதி, பண்டிதமணி, சி. மு. கு. நூ, ப. 192

21. வேலுப்பிள்ளை, பேராசிரியர், டாக்டர், ஆ. மு. கு. நூல், ப. 104

22. சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம்,
பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை தொகுத்தது யாழ்ப்பாணம் 1953 ப. 42

23. சுப்பிரமணியம், நா. ''நாமார்க்கும் குடியல்லோம்'', சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபைவெளியீடு, துர்க்காபுரம், தெல்லிப்பழை, 6-3-1985 ப. 197

24. வேலுப்பிள்ளை, பேராசிரியர் டாக்டர், ஆ. மு. கு. நூல், பக். 82—83

25. சுப்பிரமணியம். நா, மு. கு. நூல். ப. 202

26. திருவாசகம், எட்டாந்திருமுறை. ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீ வை குண்டம், 23-11-1969 வாழாப்பத்து

27. திருவாதவூரடிகள் புராணம், குதிரையிட்ட சருக்கம், வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், சுன்னாகம் 1948 செய் 64

28. மே. கு. நூல், மண் சுமந்த சருக்கம், செய். 26

29. மே. கு. நூல், அதே சருக்கம் செய். 27

30. வேலுப்பிள்ளை, பேராசிரியர், டாக்டர். ஆ, மு. கு. நூல், ப. 182

31. தனபாலசிங்கன், செ. மு. கு. நூல், பக். 22—23

32. தனபாலசிங்கன், செ. கந்தபுராணச் சிந்தனைகள் சுன்னாகம் 1976 ப. 135

33. பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடல்கள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, சென்னை. திருவேகம்பமாலை, செய்.2

34. மே. கு. நூல். திருத்தில்லை, செய். 1

35. மே. கு. நூல், உடற்கூற்று வண்ணம், கடைசி 7 அடிகள்

36. கணபதிப்பிள்ளை, இலக்கியகலாநிதி, பண்டிதமணி, சி. மு. கு நூல், ப. 220

## நட்பைப் பயிரிடுங்கள்

நண்பனுல் வாழ்க்கை, இலகுவாகும். செம்மையுறும். நண்பன், உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளும் ஒரு பரிசு.

ஆனல் நண்பனை மரத்திலிருந்து பறிக்க முடியாது, விலை கொடுத்து வாங்க முடியாது. நண்பனுக இருக்கச் சொல்லி யாரையும் கட்டாயப் படுத்த முடியாது. நண்பனைக் கண்டு பிடிக்கவேண்டும்.

பலவற்றைச் செய்து நண்பர்களை உருவாக்குகிருேம். ஒரே ஓர் அற்பச் செயலால் அவர்களை இழந்துவிடக் கூடும். நட்பைப் பெறுவதற்கான தகுதியை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்குள் நட்பு என்ற பண்பு இருந்தால்தான் உங்களுக்கு நண்பர்கள் கிடைப்பார்கள். தன்னலமற்றவனுய், நேசமுள்ளவனுய், பிறரது நலத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்பவனுக்கே நண்பர்கள் அமைவார்கள்.

நாய்கள் நேசிக்கப்படுகின்றன அவற்றுக்கு நண்பர்கள் சுலபமாகக் கிடைத்து விடுகிருர்கள். காரணம் அவை வாலை ஆட்டுகின்றனவே தவிர, நாக்கை அல்ல. மென்மையுடன் பேசக் கற்றுக் கொள்ளுங்கள் எப்போதும் அன்பான சொற்களைப் பயன்படுத்துங்கள் நண்பர்கள் பெருகுவார்கள்.

சுருங்கச் சொன்னல், நேசிக்கும் பண்பும் அதைச் செயலில் காட்டும் திறனுமே மேலும் மேலும் நண்பர்களைச் சம்பாதிப்பதற்கான தகுதிகள்.

உண்மையில், செயலாக்கப்படும் அன்பே எல்லாச் சமயங்களுக்கும் இதயம்.

நண்பன் யார்?


எவனொருவன் மற்ற எல்லோரும் உங்களை விட்டுப்போன நிலையில் அன்பும் உற்சாகமுமாக வருகிருனே அவனே உண்மையான நண்பன்.

உண்மையான நண்பனைக் கண்டுபிடிக்க வெளியில் தேட வேண்டியதில்லை. நண்பனைப் பெறுவதற்கான தகுதியை உங்களுக்குள் வளர்த்துக் கொள்வதே சரியான வழி.

— சுவாமி சின்மயானந்தா.

வாழ்க இந்துநெறி !

வளர்க இந்து மன்றம் !

* தரமான தமிழ், இந்தி, ஆங்கில சினிமா பட வீடியோ கசெட்டுகளுக்கும்
* பாடல்களை சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்வதற்கும்
* வானொலி, தொலைக்காட்சி பெட்டி, வீடியோ டெக், திருத்த வேலைகளுக்கும்

யாழ்நகரில் சிறந்த இடம்

# இணுவில் வீடியோ சென்றர்

→ இணுவில்

- சகலவிதமான அன்றாட பாவனைப் பொருட்கள்
- தினசரிப் பத்திரிகைகள்
- சஞ்சிகைகள்
- பாட்டுப் புத்தகங்கள் அனைத்தையும்

நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்!

## சாந்தினி ஸ்ரோர்ஸ்

(அன்ரூ சினிமா முன்பாக)

இல 99, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை
உரிமையாளர் : தி. தம்பிராஜா

---

தையல் உலகின் நவீன
முன்னோடிகள்

## கனி ரெக்ஸ்

கோவில் வாசல்
இணுவில் சந்தி, இணுவில்

---

- தரமான சைவ உணவு வகைகள்
- குளிர்பானங்கள்

என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்!

## கண்ணன் லொட்ஜ்

பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி

**With Best Compliments from :**

# V. K. RAJARATNAM

**95, STANLEY ROAD, JAFFNA.**

*T'phone:* **23447**

---

★ நடமாடும் தகரக்கொட்டகை

★ கிளாஸ், பீங்கான்,
ரம்ளர் (சில்வர்) ரே வகை

★ மற்றும் ஏனைய வைபவங்
களுக்கும் தேவையான

உபகரணங்களை குறைந்த வாடகை
யில் பெறவும்

★ நுகர்ச்சிப்பொருட்கள் புடவை
விவசாய இரசாயனப் பொருட்களை
குறைந்த விலையில்பெறவும்
நாடுங்கள் !

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

☎ 23646

---

சேட்டிங் சூட்டிங், ரீசேட்
வகைகள்,

சிறுவர் முதல் பெரியவர்வரையான
றெடிமேட் ஆடைவகைகள், சாறிவகைகள்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம் !

## ராணி ரெக்ஸ்

இல: 7, நவீன சந்தை
பண்டத்தரிப்பு,

# கானத்தின் எழுபிறப்புத் தந்த ஞானத் தமிழிசை மூலக்கரு நிதியம்

நா. வி. மு. நவரத்தினம்
போதனாசிரியர், இராமநாதன் நுண்கலைப் பிரிவு
யாழ். பல்கலைக்கழகம்

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூல்தானெங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத்தெங்கே சொல்

என்பது சிவானந்த மாலையின் கூற்று

செழுமறை தெளிய வடித்த தமிழ்ப்பதிகத்தோடே
திருவருளமுது குழைத்து விடுத்த திருமுலைப் பாலாற்
கழுமல மதலை வயிற்றை நிரப்பி

என்பார் பிள்ளைத்தமிழில் குமரகுருபரர்

அத்தோடு அவரீண்டும் மதுரைக் கலம்பகத்தில்

புகலியர் குரிசில் பனுவலொடு தமிழ் அருமை
அறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தனை

என்றும் கூறுவார்

''வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே'' என்பது அருணகிரியார் திருவாக்கு

"பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்'' என்று ஆளுடைய
பிள்ளையார் மும்மணிக் கோவையாற் போற்றும் சிறப்பும்

நாளுமின்னிசையாற் றமிழ் பரப்பும் ஞான
சம்பந்தனுக் குலகவர் முன் தாளமீந்து அவன்
பாடலுக் கிரங்கும் தன்மையாளனை

என்று தமக்குப்பின் வந்த தேவார அடியார் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் ஒருங்கே போற்றும் சிறப்புப் பெற்றவர் நற்றமிழ்வல்ல திருஞான சம்பந்தப்பெருமான்.

அகத்தியர்க்குத் தமிழ் உரைத்தவர் முருகப்பெருமான். அதனால் எழுந்ததே தமிழ்மொழி.

அவ்வாறு எழுந்த தமிழுக்கு இசைவகுத்தவர் திருஞானசம்பந்த பெருமான் இவர் முருகனுடைய திருஅவதாரம் என்பது வாக்கிற்கருணகிரியார் திருவாக்கு இந்த உண்மையை சைவத்தமிழ் மக்கள் நுண்மாண் நுழை புலனிற்செறிந்து அறியவேண்டும்.

சம்பந்தப்பெருமான் ''வெறும் தேவாரத்தை மட்டும் அருளவில்லை அவை அனைத்தும் பண் அமைந்த பாடல்கள். அவை ஆக்கப்படும் போதே திருவருள் வயத்தினால் காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்க ஓதப்பெற்றது என்பது யாவருமறிந்த ஒன்று.

சம்பந்தப் பெருமானது பாடல்களில் அனேகம் இயலிசையிலக்கணங்கள் பொதிந்தனவாக காணப்படுகின்றன இவையே இசைப்பாடல்களது ஆதி இலக்கணவிகற்பங்களாக அமைந்திருந்தன. என்பது கண்கூடு.

> ''செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்களான் மொழிமாற்றும்
> வந்த சொற் சீர்மாலை மாற்று வழிமொழி எல்லா முடக்கும்
> சந்தவியமகம் ஏகபாதம் தமிழிருக்குறள் சாத்தி
> எந்தைக் கெழுகூற்றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு
> நாலடி மேல் வைப்பு மேன்மை நடையின் முடுகுமிராகம்
> சால்பினிற் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிகம்
> மூல இலக்கியம்''

என்பார் சேக்கிழார் சுவாமிகள் இதிலிருந்து தமிழிசையின் மூல இலக்கிய கருநிதியங்கள் எவ்வளவு இருந்திருக்கின்றன என்பது நமக்குப் புலப்படுகின்றன இவ்வாறான அனைத்துதேவார இசைப்பாடல்களும் திருஞானசம்பந்தப் பெருமானால் அருளப்பெற்று அவைஇன்று நமக்கு கிடைத்திருப்பது நாம் செய்த அரிய பாக்கியமே.

இவ்வாறான பண்ணிசைப் பாடல்கள் மேற்கண்ட இலக்கணங்களுடன் பண்களுடனும் அருளப் பெற்றுள்ளமை ஆய்தற்குரியது.

உதாரணமாக இங்கு சிலவற்றைப் பார்ப்போம்

(1) ஈரடி: இவை இரண்டடிகளால் இயன்ற பாட்டுக்கள்

திருச்சிற்றம்பலம்

பண்: பழம்பஞ்சுரம் திருமுறை: மூன்று

> பரசுபாணியர் பாடல் வீணையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
> தாசு பேணி நின்றார் இவர் தன்மையறிவாரார்.

திருச்சிற்றம்பலம்

(2) ஈரடி மேல் வைப்பு: ஈரடிச்செய்யுள் மேல் ஈரடிஅமைதல் இரண்டடிப்பாடல்களுடன் அதாவது எடுத்துக் கொண்ட காலத்திற்கு ( முதல் அடிகள் இரண்டும் ) அதற்கு இரண்டாம் காலமாக சாகியத்தை

பின் இரண்டடியையும் பாடல் (ஈரடிகளை மேற்காலமாக்கல்) (நடைவேறுபாட்டுடன்)

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன் கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்று தாகிய நம்பன் தானே.

திருச்சிற்றம்பலம்

**(3) நாலடி மேல் வைப்பு:-** நாலடிச் செய்யுள் மேல் ஈரடி அமைந்தது. முன்னே உள்ள நான்கு அடிகளது காலப்பிரமாணம் ஒரே நடையாகவும் அடுத்து மேல் வரும் இரண்டு அடிகளது காலப் பிரமாணம் நடை வேறுபாடாகவும் காணப்படல்.

திருச்சிற்றம்பலம்

**பண்: காந்தாரபஞ்சமம்** திருமுறை - இரண்டு

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமை ஆளுமாறீவ தொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே.

திருச்சிற்றம்பலம்

**(4) இருமாலைமாற்று:-** ஒரு செய்யுளை முன்னிருந்து படிக்கினும், மாற்றிப் பின்னிருந்து முன் படிக்கினும் ஒன்றுபோல் வருவது மாலைமாற்று.

(விகடகவி உதாரணம்) சொற்பதம்.

திருச்சிற்றம்பலம்

பண்: கௌசிகம் **திருமுறை - மூன்று**

"யாமா மாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா"

திருச்சிற்றம்பலம்

(5) மடக்கு:- பாடலில் காணப்படும் சொற்பதங்களைத் திரும்பத் திரும்பத் வருதல் மடக்கிப்பாடல் இவை இருவேறு முறைகளாற் பாடப்படும். ஒன்று மகுடம். இரண்டாவது கோபுச்சம் (மாட்டு வால் போல்) மகுடம் கிரீடம் போன்றது. முத லில் மகுட முறைமையையும் அடுத்து கோபுச் முறைமையையும் பார்ப்போம்.

திருச்சிற்றம்பலம்

சிறையாரும் மடக்கிளியே என்ற தேவாரப் பாடலில் இருந்து பெறப்படுபவை.

கிரீட அல்லது மடகு முறை

முறையாலே
பால் முறையாலே
தேனொடு பால் முறையாலே
வா தேனொடு பால் முறையாலே
இங்கே வா தேனொடு பால் முறையாலே
கிளியே இங்கே வா தேனொடு பால் முறையாலே
மடக் கிளியே இங்கேவா தேனொடுபால் முறையாலே
சிறையாரு மடக்கிளியே இங்கேவா தேனொடுபால் முறையாலே.

அடுத்து வருவது கோபுச்சமுறை,

சிறையாரு மடக்கிளியே இங்கேவா தேனொடுபால் முறையாலே
மடக்கிளியே இங்கேவா தேனொடுபால் முறையாலே
கிளியே இங்கேவா தேனொடு பால் முறையாலே
இங்கேவா தேனொடு பால் முறையாலே
வா தேனொடுபால் முறையாலே
தேனொடு பால் முறையாலே
பால் முறையாலே
முறையாலே.

(உணத்தருவன்)

(6) **திருவிருக்குறள்:-** குறள் வடிவிலமைந்தவை. இரு அடிகளில் ஒரே சீர் நடையாகப் பாடப்படுவவை.இரு சீரடியாகிய குறளடி நான்காய் அமைந்தவை.

திருச்சிற்றம்பலம்

பண்: குறிஞ்சி திருமுறை - ஒன்று

"வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசலில்லையே"

திருச்சிற்றம்பலம்

(7) **மொழிமாற்று:-** மொழிகளை மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ள வைக்கும். மிறைக்கவி மொழிமாற்று ஆகும்.

உதாரணம்:- காடது - பதி காரவம் - அணிகலம்

திருச்சிற்றம்பலம்

பண்: வியாழக் குறிஞ்சி — திருமுறை - ஒன்று

''காடதணிகலங் காரரவம்பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக் காதினில் தூச்சிலம்பர்
வேடதணிவர் விசயற் குருவம் வில்லுங் கொடுப்பர்
பீடதணி மணி மாடப் பிரம புரத்தரே''

அவை மொழிமாற்றில் பின்வருமாறு அமையும்:-

காடது பதி காரரவம் அணிகலம் காலதனில் தூச்சிலம்பர்
சுந்தரக் காதினில் தோடது அணிகுவர் வேடது உருவம்
விசயற்கு வில்லுங் கொடுப்பர் (அவர் யாரெனின்)
பீடது அணிமணி மாடப் பிரமபுரத்து அரர் (என்று பொருள்)

(8) **திருஏகபாதம்:-** ஒரு அடி போலவே ஏனைய அடிகளும் வருதல் ஏக பாதம் எடுத்துக் கொண்ட காலத்தை ஒரே சீராய் இருக்கப் பாடல்.

திருச்சிற்றம்பலம்

பண்: வியாழக் குறிஞ்சி — திருமுறை - ஒன்று

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்
பிரமபுரத்துறை பெம்மானெம்மான்
பிரமபுரத்துறை பெம்மானெம்மான்
பிரமபுரத்துறை பெம்மானெம்மான்

திருச்சிற்றம்பலம்

(9) **திருச்சக்கரமாற்று:-** சக்கர (வட்ட) வடிவமாக அடைத்துச் சுழன்று வருவது போன்று சீகாழியின் பன்னிரு பெயர்களும் மாறி மாறிச் சுழன்று வரப் பாடிய பதிகம் சித்திரகவி. இப்பதிகம் இதில் இரு பாடல்களை ஒப்பு நோக்கித் தெளிக.

திருச்சிற்றம்பலம்

பண்: காந்தாரம் — திருமுறை - இரண்டு

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த்தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன் மன்னு தண் காழி கொச்சை வய முன்னிடங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றி திருக்கழுமலம் நாம்பரவுமூரே''

வேணுபுரம் பிரமனூர் புகலிபெரு வெங்குரு வெள்ளத் தோங்குந்
தோணிபுரம் பூந்தராய் தூநீர்ச்சிரபுரம் புறவங்காழி
கோணிய கோட்டாற்றுக் கொச்சை வயஞ் சண்பை கூருஞ் செல்வங்
காணிய வையகத்தோ ரேத்துங் கழுமலம் நாங்கருதுமூரே''

திருச்சிற்றம்பலம்

(10) **வழி மொழி:-** பாடலின் அடிமுதற் சீரின் இரண்டாம் எழுத்து அப் பாடலில் பின்வரும் சீர்கள் தோறும் ஒன்றி வழி எதுகையாய் வருவது வழிமொழி யாகும்.

திருச்சிற்றம்பலம்

வழிமொழித் திருவிராகம்

பண்: சாதாரி

திருமுறை - மூன்று

சுரருலகு நரர்கள் பயில் தரணிதலம் முரணழிய அரணமதில்முப்
புரமெரிய விரவுவகை சரவிசை கொள்கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன் முறையினிரை நிறைகொள் வருசுருதி சிரவுரையினுற்
பிரமனுயர் அரனெழில் கொள் சரணவிணை பரவவளர் பிரமபுரமே

இப்பாடலின் நடைகளையும் தாள நுணுக்கங்களையும் இசையமைதியையும் பாடும்போது காணலாம்.

திருச்சிற்றம்பலம்

(11) **திருக் கோமூத்திரி:-** கோமுத்திரியாவது ஒரு செய்யுளின் முன்னிரண்டடி கள் மேல் வரியாயும் பின்னிரண்டடிகள் கீழ் வரியாயும் வரைந்து அவ்வெழுத்துக்களை மேலும் கீழுமாக ஒன்றிடையிட்டு வாசித்தலும் அதே செய்யுளால் அமையும் சித்திர கவி ஆகும். இதனுல் மேலும் கீழுமுள்ள வரிகளில் அமைந்த எழுத்துக்கள் கோமுத் திர ரேகைபோல் ஒன்றிடையிட்டு வாசிக்கப் பெறுதலின் இப்பெயர் அமைந்தது.

திருச்சிற்றம்பலம்

பண்- காந்தாரம்

திருமுறை- இரண்டு

பூமகனூர் புத்தேளுக்கிறைவனூர் குறைவிலாப் புகலி பூமேல்
மாமகளூர் வெங்குரு நல் தோணிபுரம் பூந்தராய் வாய்ந்த இஞ்சிச்
சேமமிகு சிரபுரஞ்சீர்ப் புறவநிறை புகழ்ச்சண்பை காழி கொச்சை
காமனை முன் காய்ந்த நுதற் கண்ணவனூர் கழுமல நாங்கருதுமூரே

திருச்சிற்றம்பலம்

(12) **கூடற்சதுக்கம்:-** நான்கு தெரு ஒன்றுகும் இடம் சதுக்கம். அம்முறை யால் திருமயேந்திரம், திருக்கயிலாயம், திருவாரூர், திருவானைக்கா என்ற நான்கு தலங்களும் ஒன்று கூடிய நிலையில் அங்குஎழுந்தருளிய பெருமானை பரவிப் போற்று வதாக அமைந்தது.

இந்நான்கு பதிகளும் ஒரு முகத்தாற் கூடுதலானிது கூடற்சதுக்கம் ஆயிற்று.

திருச்சிற்றம்பலம்

பண்: பழம்பஞ்சுரம் — திருமுறை: மூன்று

''மண்ணது உண்டரி மலரோன் காணு
வெண்ணாவல் விரும்பும யேந்திரமும்
கண்ணது வேங்கிய கயிலாயரும்
அண்ணல் ஆரூரா தி யானைக்காவே''

திருச்சிற்றம்பலம்

(13) இயமகம்: அடிகள் தோறும் சீர்கள் மீண்டும் மீண்டும் மடங்கி வருதல் மடக்கு இதுதான் தமிழ்ப்பெயர் இதன் வடமொழிப் பெயர் இயமகம்.

திருச்சிற்றம்பலம்

பண்: பழம்பஞ்சரம் — திருமுறை மூன்று

உற்றுமை சேர்வது மெய்யினையே
    உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
    கனல் விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
    அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
    பிரம புரத்தை உகந்தனையே.

திருச்சிற்றம்பலம்

இதுகாறும் உவமையிலாக் கலைஞானி ஞானசம்பந்தப் பெருமானருளிய தேவாரப் பண்ணமைந்த பதிகங்களது ஆதிவிகற்பங்களையும் அவற்றின் வேறுபாடுகளையும் பார்த்தோம். இவை பார்வையிடுவதால் முற்று முழுதாக விளங்கமாட்டா அவை பண் ஒன்றதக்கார். ஊலம் ஓதப் பெறுங்கால் அவற்றின் நுணுக்கங்களையும் அருமைகளையும் அறிந்து கொள்ளலாம்.

தமிழிசையின் தாய்ப் பண்களாக 103 பண்கள் போற்றப்படுகின்றன. இன்று தேவாரத் திருமுறைகள் வாயிலாக நமக்கு இருப்பத்துமூன்று அல்லது இருபத்துநான்கு பண்கள் கிடைத்துள்ளன. அவை பல யாப்பு விகற்பங்களையும் பல கட்டளைகளையும் கொண்டு விளங்குகின்றன. இவற்றைக்கூட இன்று பேணிப்பாதுகாக்கக்கூடிய வாய்ப்புக்கள் அறவே இல்லாமற் போனது நாம்செய்த துரதிர்ஷ்டவசமே.

திருஞானசம்பந்தப்பெருமான் அருளிய பண்களில் முதலிடம் பெறுவது பண் நட்டபாடை. இப்பண்ணமைப்பு முறையில் தமக்கு முன்பதாக வாழ்ந்த இசை அருளாளர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி (காரைக்கால்அம்மை) இப்பண்ணை அமைத்தனர் போலும் அத்தோடு முதல் ஏழு திருமுறைகளிற் காணும் இருபத்து நான்கு பண்களில் சுமார் இருபத்துமூன்று பண்களையும் அவற்றின் கட்டளைபேதங்கள் யாப்பு விகற்பங்கள் முதலியவற்றைப் பாடியபெருமை ஏழிசையமுதுண்டு தாளம் வாங்கிய காழி வேந்தர்க்கே உரியது.

இவ்வகையில் ஒவ்வோர் திருமுறை வாயிலாகவும் அவர்கள் பாடிய பண்கள் அவற்றின் கட்டளை பேதங்கள் யாப்பு விகற்பங்களது தொகையை இத்தருணத்தில் குறிப்பிடுவது சாலவும் பொருந்தும் எனநினைந்து அவற்றை இங்கே தருகிறோம்.

முதல் மூன்று திருமுறைகளிலும் சம்பந்தப்பெருமானால் பாடப்பட்ட பண்களும் அவற்றின் கட்டளை பேதங்களும் யாப்பு விகற்பங்களும் பதிகங்களது தொகை முதலியனவும் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்படுகின்றன.

| திருமுறை இல. | பண் | கட்டளை - யாவி | பதிகம் |
|---|---|---|---|
| ஒன்று | நட்டபாடை | எட்டு | 22 |
| | தக்க ராகம் | ஏழு | 24 |
| | தக்கேசி | இரண்டு | 12 |
| | பழந்தக்கராகம் | மூன்று | 16 |
| | குறிஞ்சி | ஐந்து | 29 |
| | வியாழக்குறிஞ்சி | ஆறு | 25 |
| | மேகராகக் குறிஞ்சி | இரண்டு/யாவி 2 | 07 |
| | யாழ் மூரி | யாவி ஒன்று | 01 |
| இரண்டு | இந்தளம் | இரண்டு 9 யாவி | 39 |
| | சீகாமரம் | இரண்டு | 14 |
| | காந்தாரம் | யாவி 10—2 | 29 |
| | பியந்தைக் காந்தாரம் | மூன்று | 14 |
| | நட்டராகம் | யாவி 4 – 2 | 16 |
| | செவ்வழி | ஒன்று | 10 |
| மூன்று | காந்தார பஞ்சமம் | யாவி 3—3 | 23 |
| | கொல்லி | நான்கு | 18 |
| | கொல்லிக்கௌவாணம் | இரண்டு | 01 |
| | கௌசிகம் | யாவி 2-2 | 13 |
| | பஞ்சமம் | யாவி 3-1 | 11 |
| | சாதாரி | ஐந்து யாவி | 33 |
| | பழம் பஞ்சுரம் | யாவி 5-3 | 18 |
| | புறநீர்மை | இரண்டு | 06 |
| | அந்தாளிக்குறிஞ்சி | ஒன்று | 02 |

இதுகாறும் கானத்தின் எழுபிறப்பு தந்த ஞானத்தமிழிசை மூலக் கரு நிதியம் எவ்வாறு மிக்க ஆழமாக ஆய்வதற்கு தித்திப்பாக உள்ளது என்பது பற்றி ஒவ்வொரு மூலக்கருவையும் பதிகங்களுடனும் அவற்றிற்குரித்தான பண்களுடனும் திருமுறை முதல் மூன்றினதும் வாயிலாக ஆய்ந்து தெளிந்தோம்.

இவற்றின் ஓசை நயங்களை - அதாவது பண்பொலி ஓசையையும் சொற்பொருட் சுவையையும் தக்கார் வாயிலாகக் கேட்குந்தோறும் யாம் கண்ட ஆய்வின் பொருள் ஆத்மீகத்தை சூரியன் காந்தக் கல்லில் தீண்டினாற் போல் தீண்ட ஆங்கு குடி கொண்ட அறியாமை இருள் ஆதவன்முன் பனி என மறையும் அந்தோ!! இவற்றைச் சிம்மாசனத் தமர்த்தி சிரம் பணிந்து தொழும் பாக்கியமும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதக் கேட்கும் பாக்கியமும் இம்மானிடப் பிறவியில் நமக்கு வாய்க்குமோ? என்றிரந்தவாறு எல்லாம்வல்ல ஓசை ஒலியெலாம் ஆன பாட்டகத்து நின்றுட்டு கந்தானை வேண்டி யிறைஞ் சுதலல்லால் வேறொன்றும் யாமறிகிலோம்.

''ஞானத்தின் திருஉருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

— சேக்கிழார் —

திருச்சிற்றம்பலம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்,

# உன் அருளில் வாழ்வோம்!

செல்வி, சுகந்தி சுப்பிரமணியம்
கலை, 1ம் வருடம்

சக்தி எங்கள் வாழ்வினுயிர் மூலம் — இனி
ஒருபொழுதும் மாறும் நிலை கொள்ளோம்!
எத்திசையும் உன் கருணை வெள்ளம் — சக்தி
எந்தநிலை வந்திடினும் அஞ்சோம்!

அஞ்சேலெனும் மனஉறுதி தந்தாய் — இந்த
அவனியிலே வேறென்ன வேண்டும்!
என்னுள்ளே எனை உணரவைத்தாய் — சக்தி
எனக்குந்தன் அன்பொன்றே போதும்!

வேதனைதான் வாழ்க்கை என்றநிலையில் — இன்று
வெதும்பி நிதம் துன்பமுறும் மாந்தர்
நம்பிக்கை உளம் தனிலே கொள்ள — உயர்
சக்தியே நீ அன்புருவாய் வந்தாய்!

துன்பம் தொல்லை எது வந்தபோதும் — உன்
துணை ஒன்றே எம்முயிர்க்கு உறுதி!
ஓம் சக்தி என்ற ஒரு சொல்லே இன்று — மாரு
எங்களுள்ள மூச்சாய் என்றும் நிலைக்கும்!

சத்தியத்தின் பாதை எங்கள் வாழ்வு — உயர்
சக்தியேஎம் வாழ்க்கையெல்லாம் நீயே!
காலத்தினால் சருகாகி மறையும் — நிலை
வந்திடினும் உன் அருளில் வாழ்வோம்!

உங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கான பிரயாணச் சீட்டுக்களை
யாழ்ப்பாணத்திலேயே பதிவு செய்வதற்கும்
பேர்லின் (Berlin) லண்டன் (London) செல்வதற்கான
ஒழுங்குகளிற்கும் நம்பிக்கையாக நாடுங்கள்!

**CROSS TRAVEL SERVICES(PTE)Ltd.**

Stage II, Model Market, No. 5 1st Floor
Bus Stand Centre Road, JAFFNA.
Phone : 22065 – 22817

இத்துடன் உங்கள் உள்நாட்டுத் தொலை தொடர்புகளை தாமதமின்றி
பெற்றுக்கொள்ள நாடுங்கள் !

Cross International Telecommunication Services
Phone : 22040 —— 22816

---

**With Best Compliments from :**

# PILLAYAR METAL WORKS

Manufacturers of Aluminium, Brass, Copper, Stainless, Hollowares, Cutlery, Hospital Wares and Electro Platers Importers and Distributors of Machine Tools, Raw Materials.

# பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

215, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

☎ 237019

தரமான சுவையான ஐஸ்கிறீம்

குளிர்பான வகைகளுக்கு

✶ யாழ் நகரில் தன்னிகரற்ற ஒரே ஸ்தாபனம்!

T'Phone : 22578



# ஹோட்டல் சுபாஸ் Hotel Subhas

**176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

"நாளுக்கோர் புதுமை நாடுவது உண்மை"

இவற்றை அளிப்பது....

# SEEMATI சீமாட்டி

**TEXTILE'S OCEAN** ஜவுளி சமுத்திரம்

**158, நவீனசந்தை,** (மின்சார நிலைய வீதி) **யாழ்ப்பாணம்.**

தொலைபேசி : **24096**

*With best Compliments from :*

24186

# EXPO Furnishers (PVT) Ltd.

K. K. S. ROAD, JAFFNA.

**With best Compliments from :**

# A. Veluppillai & Son.

General Merchants

117, Kasthuriar Road.
JAFFNA.

50, Kasthuriar Road,
JAFFNA.

23159 — — 23561

# அழகியற் கலைகளும் ஆடல் அழகனும்

செல்வி க. சிவகுமாரி
நுண்கலைப் பிரிவு, இறுதி வருடம்

இயற்கையின் உருத்திரதாண்டவம் இடியாக, மின்னலாக, புயலாக எழுந்து ஆர்ப்பரித்தது கண்டு அச்சமுற்ற ஆதிமனிதன் இயற்கையை அமைதிப்படுத்த அதன் செயல்களையே தானும் பாவனை செய்து காட்டிய தன் வெளிப்பாடுகளே ஆடலும், பாடலுமாய் உருப்பெற்றன என்று மானிடவியலார் குறிப்பர். காலப் போக்கிலே மனித சிந்தனைகளும் உணர்வுகளும் பண்பட்டு வளர்ந்த காலத்தில் இவை சாஸ்திரிய மாக அமைந்து கற்றோரையும், மற்றோரையும் பெரிதும் கவரலாயின. மனிதனின் உள்ளத்திலே இறையுணர்வு கருக்கொண்டு உருப்பெற்ற பொழுது சித்திரம், சிற்பம் முதலியவற்றிலும் இறைவனுக்கு வடிவம் அமைத்து அவன் வழிபட்டான். இவையும் காலப்போக்கில் வளர்ந்து மனித உள்ளத்திலே எழும் தெய்வப் படிமங்களைப் பௌதிக வடிவில் உருப்பெறச் செய்தன. உலகம் எங்கணும் சமயம் சார்ந்த அழகியற் கலைகளின் வளர்ச்சி வரலாறு இதுதான். தெய்வ உருவங்களைப் போற்றிக் காக்கவும் வழிபடவும் அவற்றைக் காலப் போக்கிலே கோயில்களில் தாபிக்கும் மரபும் உருவாயிற்று. இம் மரபு யாவர்க்கும் பொதுவாயினும் இந்துக்களைப் பொறுத்தவரையில் பாரிய கோயில்களும், தெய்வப் படிமங்களும் அவை சார்ந்த சிற்பச் சித்திரங்களும் ஆடலும் பாடலுமே எல்லாவித கலைகளுமாய் மலர்ந்துள்ளன என்று சொல்வதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இந்து ஒருவனைப் பொறுத்தவரையில் அவனுக்கு எல்லாமே தெய்வ மயந்தான். "மாதா, பிதா, குரு, உணவு" என்ற அனைத்தையுமே அவன் தெய்வமாகப் போற்றுவதால் எவற்றிலும் உண்மை, அழகு, செம்மை என்பவற்றை அவனின் எல்லாவித வழிபாட்டம்சங்களிலும் நாம் காணக்கூடியதாய் உள்ளது. அழியும் அழகிலிருந்து அழியாத அழகினை நோக்கி அவன் ஒவ்வொரு கணமும் யாத்திரை செய்கின்றான் என்றே கூறத் தோன்றுகிறது. அழியாத அழகு எங்கு உண்டு? இறைவனிலேதான் என்பதில் இந்துவுக்கு அளவு கடந்த நம்பிக்கை. சிற்ப சாஸ்த்திரங்கள் ஆகமங்கள், ஓவிய நூல்கள், நாட்டிய சாஸ்த்திரங்கள் இசை நூல்கள்யாவும் இறைவனுக்கே அர்ப்பணமாக்கப்பட்டு அவனையே சார்ந்து வளர்ந்தன, வளர்கின்றன. இத்தகைய மனப்போக்கு மனிதனின் கற்பனை வளர்ச்சிக்கும், எதார்த்த நோக்கிற்கும் தடை என்று இக்கால கலாவிமர்சர்கள் சிலர் கூறிய போதிலும் பெரும்பாலான இந்துக்கள் தமது கோட்பாட்டினின்றும் அணுவளவேனும் விலகிப் போக ஆயத்தமில்லை. "இதுவே எமது தனித்துவம்" என்று அவர்கள் தம் கருத்திலே உறுதியாகவே இருந்து வருகின்றனர்.

தென் இந்தியாவை சிறப்பாகத் தமிழகத்தை நாம் எடுத்துக் கொண்டால் திராவிடக் கட்டிடக் கலையாயினும் சரி, சித்திர ஓவியக் கலைகளாயினும் சரி, சாஸ்த்திரிய சங்கீதம், நடனமாயினும் சரி பெருமளவு பழமையான மரபுகளையே இன்றும் பேணிவருதல் காணலாம். பழைமையான கோயில்களைப் புனருத்தாரணம் செய்யும் போதும் புதியனவாய் அமைக்கும் போதும் பழைமையான சாஸ்த்திர மரபுகள் அணுவளவேனும் தவறாது தூக்கப்படுகின்றன. தெய்வப் படிமங்கள் அமைத்தலும் அவ்வாறே. சாகித்தியங்கள் நடனப் பாணிகளெல்லாமே சாஸ்திரியம் தவறாத நிலையில் உள்ளவரைதான் போற்றுதலுக்கு உள்ளாகின்றன.

தெய்வங்களே கலைகளின் மூலாதாரங்களாகப் போற்றப்படுகின்றன. பரம் பொருளான சிவபெருமான் ஆடல் அழகன். அவன் யோக தக்ஷிண மூர்த்தியாக விளங்கும் அதே வேளையில் வீணாதார தக்ஷிண மூர்த்தியாகவும் விளங்குவான். எழிசையாய்

இசைப்பயனாய் இலங்கும் அவனுக்குப் ''பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள்'' குடிகளாக உள்ளனர். இசைக்கு இசைந்தும் ஆடலுக்கு உருகியும் அருள் பாலிப்பது அவன் இயல்பாக போற்றப்படுகின்றது. ''அழியா அழகனான முருகனின் சந்நிதியிலே காவடியாடி அவன் கவனத்தை ஈர்க்க முயல்கின்றனர். அவன் தனது சின்னஞ்சிறு அடிகளைப் பெயர்த்து ஆடினால் அகில உலகமும், தேவர்களும், மூவர், களும் அவனோடு சேர்ந்து ஆடத்தொடங்கி விடுவார்கள். விக்னவிநாயகனை நர்த்தன கணபதியாக உருவாக்கி நயந்து வழிபடுவதையும் நாம் காணலாம். அம்பாளின் பதினெட்டு மூர்த்தங்களில் ஒன்று அவள் வீணை ஏந்தி மாதங்கியாய் விளங்குவதாகும். திருமால் வேணுகோபாலனாகி வேயங்குழலிலே இசை பொழியும்போது சராசரம் அனைத்துமே மயங்கிக் கிறங்கித் தம்மை மறந்து தமது செயலிலந்து கிடப்பதாகச் சித்திரிக்கப்படுகின்றது. ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் அம்மையாகக் கலைவாணி உருவாக்கப்பட்டுள்ளாள். திருமுறைகள் (1-9) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய தெய்விக நூல்கள் பண்ணிசை வகுத்து ஆலயங்களிலே பாடப்படுகின்றன. சாமவேதம் இறைவனை இசைவிக்க இசைப் பாடல் வடிவிலே அமைந்துள்ளது.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்குகையில் இந்துக்களின் கலையீடுபாடு எத்துணை மகத்தானதாகவும், தெய்விகம் சார்ந்ததாகவும், பழைமை பேணுவதாகவும் விளங்குகின்றது என்ற உண்மை தெரியும்.

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

— அப்பர் சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

ஆடல் அழகனான தில்லைநடராசனின் திருக்கோலத்தைக் கண்டு மெய்மறந்த நிலையிலே அப்பர் சுவாமிகள் மனங்கனிந்து பாடியருளிய திருப்பாடல் இது சமண சமயத்தைச் சார்ந்து வாழ்க்கை நிலையற்றது, மானிடனாய்ப் பிறந்தது தமது முன்வினைப் பயன் என்று கழிவிரக்கம் கொண்டவர் அப்பர் சுவாமிகள். அத்தகையவர் சைவ சமயத்தைச் சார்ந்த பின்னரும் உடலைப் ''பொல்லாப் புழுமலி நோய்ப்புன் குரம்பை'' என்று அதனை வெறுத்தவர். ''மனிதப்பிறவியே வேண்டுவது'' என அதனை விரும்புமளவிற்கு நடராசனின்தெய்வத் திருவுருவின் பேரழகு கவர்ந்தது என்றால் இந்துக் கலைத் திறன் எத்தகைய உன்னதமான தென்பது சொல்லாமலே விளங்கும்.

சுந்தரத் திருக்கோலம் பூண்டு, தமிழகமெங்கும் யாத்திரை புரிந்து பலதலங்களிலும் சிவனார் திருக்கோலத்தினைக் கண்டு ''கண்ணீர் வாரமெய்ம் மயிர் பொடிப்ப நின்று'' பாடிக் கசிந்துருகியவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் கூடக் கலைத்துவத்தின் பூரணப் பொலிவாய் விளங்கிய தில்லையானின் திருக் கோலக் காட்சியிலே தம்மை இழந்து நின்றார். அவரின் அந்நேரநிலையினைச் சேக்கிழார் சுவாமிகள் தமது பெரிய புராணத்திலே பின்வருமாறு காட்டுவார்.

திருச்சிற்றம்பலம்

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத் துவிகமே யாக
இந்து வாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

இவ்வாறான அழகியற் கலைவடிவின் திறத்தினை உணர்வு பூர்வமாகக் கண்டவர்களின் நிலை இவ்வாறாக, அறிவு பூர்வமாக நோக்கும் சமாந்தரமாக வளர்ந்து வந்துள்ளது என்பதற்கு, மனவாசகம் கடந்த தேவரின் உண்மை விளக்கம் சான்றாக உள்ளது. ''நாதன் நடம் அஞ்செழுத்தாத்தான்'' எது? என்று மனவாசகம் கடந்த தேவர் தம் குருவான மெய் கண்டாரை வினவுகின்றார். அந்த வினவிற்கு விடையாக அமைந்த கருத்துக்கள் இவை.

''மாணவனே, உயிர்களுக்கு ஆனந்தம் அருளுகின்ற அம்பலவாணனின் ஆடல் நிகழ்த்தும் இயல்பினைக் கேட்பாயாக அன்பர்கள் நாடுகின்ற திருவடிகள் ''ந'' கரமாகும். திருவயிறு ''ம'' கரமாகும். வளரும் திருத்தோள் 'சி'' கரமாகும், முகம் ''வா'' ஆகும். திருமுடி ''ய'' ஆகும் (''நமசிவாய'' என்ற பஞ்சாட்சரத்தின் திருவடிவமாக நடராசர் உள்ளார் என்பது இதன் பொழிப்பு'')

ஆடல் அழகனின் திருக்கரத்தில் ஏந்திய உடுக்கை ''சி'' ஆகவும், வீசும்கரங்கள் ''வா'' ஆகவும், அபயகரம் ''ய'' ஆகவும், தீ ஏந்திய கரம் ''ந'' ஆகவும், முயலகனை மிதிக்கும் திருவடி 'ம' ஆகவும் உள்ளன. (''சிவாயநம'') என்ற பஞ்சாட்சரமந்திரத்தின் திருவடிவமாக நடராசத் திருவடிவம் உருவாக்கப்படுகின்றது. உலகியல் விடயங்களை விழைவோர் ''நமசிவாய'' (நகராதி பஞ்சாட்சரம்) வை உச்சரித்தல் வேண்டும் என்றும் முத்தியை விரும்புவோர் ''சிவாயநம (சிகராதி பஞ்சாட்சரம்) வை ஓதுதல் வேண்டும் எனவும் ''திருவருட்பயன்'' ஆசிரியரான உமாபதி சிவாசாரியார் உரைப்பர்.

''நடராசத் திருவடிவின் பின்னுள்ள திருவாசியில் உள்ளது ஓங்காரம் என்னும் பிரணவ மந்திரமாகும். திருவாசியிலே சுடர்விடும் சுடர்கள் ஓங்காரத்தினை நீங்காத மாத்ருகா அட்சரங்கள் (சக்தி மந்திர எழுத்துக்கள்) ஆகும்''

''நடராசரின் படைப்புத் தொழிலை அவர் தமது திருக்கரத்தில் ஏந்தியுள்ள உடுக்கையும் காத்தல் தொழிலை அபயகரமும், அழித்தல் தொழிலைத் தீ ஏந்திய கரமும், மறைத்தல் தொழிலை முயலகனை மிதித்து நிற்கும் திருவடியும் அருளல் தொழிலை தூக்கிய திருவடியும் காட்டுகின்றன.''

''உடுக்கையை அசைத்தல் மூலம் நடராசப் பெருமான் மாயையை ஆன்மாவிலிருந்து உதறி விலக்குகின்றார். அவர் தமது திருக்கரத்தில் ஏந்திய தீயின் மூலம் ஆன்மாவின் பவவினையை எரிக்கின்றார். ஊன்றிய திருவடி மூலம் ஆன்மாவை மறைக்கும் அறியாமையையும் உலகப்பற்றிலே வீழ்த்தும் வேட்கையையும் போக்குகின்றார். தூக்கிய திருவடி மூலம் மீண்டும் பிறவாய் பேரின்பத்தினை அருளுகின்றார்''

''மோனத்திலே திளைக்கும் முனிவர்கள் தம்மைப் பீடித்துள்ள மும்மலங்களையும் போக்கி ஆணவத்தின் வாதனையை ஒடுக்க உதவுதற்காயும் அவர்கள் தமது திருவுருவினைக் கண்களாற் கண்டு பேரானந்தத்திலே திளைப்பதற்காயும் பெருமான் அம்பலத்தில் நின்று ஆடி அருள்கின்றான்''

''உமாதேவியாரை இடப்பக்கத்தில் நிற்க, வாக்கு மனம் ஆகியன கடந்தவனும் ஒப்பிலாதவனுமாகிய ஒருவன் எழுத்துக்களுள்ளே தலைசிறந்தனவாகிய பஞ்சாட்சரத்தால் கருணையே வடிவாகி ஆடல் புரிந்தருளுகின்றான். அவன் ஆடுகின்ற அற்புதத் திருக்கூத்தினை மேற் கூறிய முறையில் உணர்ந்து கொண்டு காண முற்படுபவர்களுக்குப் பிறவி நோய் நீங்கும்.''

மேற்கு நாட்டினர் இன்று நடராசத் திருவுருவத்தை தலை சிறந்த கலைச்சின்னமாகப் போற்றுகின்றனர். தமது இல்லங்களிலே கலைவடிவமாகக் காட்சிப் பொருளாக அமைப்பதில் பெரு விருப்புக் காட்டுகின்றனர் இதனால் தமிழகத்தில் முறைகேடான விக்கிரக அபகரிப்பு முயற்சிகளும் அவ்வப்போது நடந்தேறுகின்றன. எனினும் தத்துவரீதியாகவும் கலைரீதியாகவும் நடராசத் திருவுருவத்தின் மகிமையை முன்பு இவர்கள் அறிந்திருக்கவில்லை. கலாயோகி கே. ஆனந்தக்குமாரசுவாமியின் ''சிவநடனம்'' என்ற ஆங்கில நூலே இவர்களின் கண்களைத் திறந்துவிட்டது. இத்துக்கலையின் மகோன்னதம் ''கிழக்கும் மேற்கும்'' சங்கமித்த இப் பெருமகனால் இன்று உலகறிந்த உண்மையாகிவிட்டது.

# சாங்கிய தரிசனமும் கடவுட் கொள்கையும்

திருமதி கலைவாணி இராமநாதன், எம். ஏ.
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இந்து சமயத்தின் அதிகார நூல்களாக விளங்குகின்ற வேதங்களையும், உபநிடதங்களையும் ஏற்றுக்கொண்டுள்ள தத்துவப்பிரிவுகள் ''வைதீகதரிசனங்கள்'' எனப்படுதலால்; சாங்கியதரிசனமும் அவற்றுள் ஒன்றாக அமைந்துள்ளது. இந்திய தத்துவப்பிரிவில் வைதீக அவைதீக தரிசனப்பிரிவுகள் காணப்பட்டபோதும் இருபிரிவுகட்கும் வேதநூல்களே அடிப்படை எனலாம். ஏனெனில் இருபிரிவினருமே ஒருபகுதியினர் வேதங்களை ஏற்றுக்கொண்டு தமது கருத்தினை நிலைநாட்டுவர்; இன்னோர் பகுதியினர் வேதவசனங்களை எடுத்துக் காட்டி அவற்றை மறுத்து நிறுவமுற்படுபவர்கள். ஆகையால் இருபகுதியினர்க்கும் வேதநூல்கள் அடிப்படை என்பது புலப்படும்.

வேதப்பிரமாணங்களை ஏற்றுக்கொண்ட வைதிகப்பிரிவுகளுள்ளும் கடவுட்கொள்கைபற்றிய கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. கடவுட்கொள்கையினைப் பொருட்படுத்தாத வைதிகதர்சனங்களும் உள்ளன. ஆஸ்திக - நாஸ்திகப் பொருளிலே கடவுள் உண்மையினை ஏற்றல், அதைஏற்காது விடுதல், என்பதாகக் கொண்டால் வைதீக தரிசனங்கள் பலவும் அவைதிக தரிசனங்களைப் போன்று நாஸ்திகதிட்டத்திலும் அடக்கப்படும்நிலை வரலாம். ஆகையினால் இந்தியதத்துவப்பிரிவுகள் கடவுள்கொள்கையினை முதன்மைப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டவை என்ற கருத்தோட்டம் பொருத்தமற்ற தென்றே கூறலாம். எவ்வாறெனில் வைதிகதரிசனங்களான சாங்கியம், வைசேஷிகம், மீமாம்சை பிரிவுகளில் கடவுள்கொள்கை பற்றிய தாக்கங்களே இடம்பெறாமை இவ்வுண்மையினை எடுத்துக்காட்டும். அதுமட்டுமன்றி யோகம் நியாயம், போன்ற பிரிவுகளிலும் கடவுட்கொள்கை இடம்பெற்றபோதும் அவைபூரணமான நிறைவைப் பெறமுடியவில்லை. இவற்றிலிருந்து கடவுட்கொள்கையினை முதன்மைபடுத்தி பௌதிக ஞானத்தையோ, உலகியல் வாழ்வினையோ வைதிகதரிசனங்கள் ஒருபோதும் நிராகரிக்கவில்லை. அத்துடன் கடவுட்கொள்கையினைவிட வேதமரபிற்கே (Tradition) மேலான முக்கியத்துவமளிக்கும் திட்டங்கள் (Systems) என்பதனையே சாங்கியம்முதலான வைதீகதரிசனங்கள் எடுத்தியம்புகின்றன எனலாம்.

இவ்வாறு வேதமரபின் அதிகாரத்தைக் கவனத்தில்வைத்து இந்தியதத்துவப் பிரிவுகள் பாகுபடுத்தப்பட்டனவே தவிர 'கடவுட்கொள்கையினை' வைத்துவரையறைசெய்யப்படவில்லை என்பதனை அவற்றின் வைதீக - அவைதீக பெயர் அமைப்பும்புலப்படுத்தும். 'கடவுள்' என்னும் பரம்பொருள் எத்தன்மையதாக இருக்கும என்ற ஆராய்ச்சியில் தான் வேதங்கள் ஈடுபட்டுள்ளனவே தவிர, 'இதுதான்பரம்பொருள்' எனவேதங்கள் மனித அறிவாராய்ச்சி நெறியினைக் கட்டுப்படுத்தவில்லை என்பதைத்தான் வேதமரபுவழிவந்த வைதீகதரிசனங்களும் அறிவுறுத்துகின்றன. எனலாம். அதனால்தான் கடவுள் உண்மைக்குப்புறம்பான கபிலரின் சாங்கியதரிசனம் வைதீக தரிசனங்களில் ஒன்றாக வளர்ச்சியடைய முடிந்தது.

மாற்றம், நிலைபேறு இரண்டும்தத்துவத்தின் அடிப்படை நியதிகள் எனக்கொண்ட சாங்கியம் அறிவுள்ளபொருள் - அறிவற்றபொருள் என்றும் இருமைக்கொள்கையைக் கொண்டதில் வியப்பில்லை. ஆனால் அறிவுள்ளபொருள் ஒன்றா? ஒன்றிற்கு மேற்பட்டதா? அது ஒன்றானால் அது ஆன்மாவா? பிரம்மமா? என்பதே சாங்கியத்தின் ஐயப்

பாடாகும். அறிவுள்ளபொருள் ''மாற்றமடையாது. மாற்றமடையும் பொருள் அறிவுள்ளதாகாது.'' (1) என்பது சாங்கியத்தின் அடிப்படைக் கொள்கையானது. உபநிடதங்களில் ஒரே ஒருமூலப்பொருள் தான். அறிவே சொரூபமானது, அதுஎன்றுமுள்ளது. என்பது பல இடங்களில் கூறப்பட்டுள்ள விடயமாகும். ஆனல் சாங்கிய நியதியின்படி அறிவுள்ளபொருள் தன்னிடமிருந்து அறிவற்றதான பிரபஞ்சம் தோன்றுவதற்கான மாற்றத்தை அடையமுடியாது. இதுவே சாங்கியம். உபநிடதத்தில் கண்ட முரண்பாடாகும். எனவே மூலப்பொருள் ஒன்றல்ல அது இரண்டு என்ற முடிவுக்கு சாங்கியம்வந்தது. அறிவுள்ளது அறிவற்றது என்றவகையில் இவற்றிற்கு சாங்கியம் கொடுத்த பெயர் புருடன், பிரகிருதி என்பதாகும் புருடனது இயல்புகளாவன.

மாற்றமடையாதது, அறிவுள்ளது, என்றுமுள்ளது, எல்லாம் அறிவது, எல்லாம் வல்லது, அருவமானது. (2) ஆனல்

செயலற்றது, இன்னெரு பொருள் தன்னிடமிருந்து தோன்றுவதற்குக் காரணம்மல்ல, காரியமுமல்ல, பிரகிருதியின் இயல்புகளாவன,

மாற்றம்அடைவது, அறிவற்றது, என்றுமுள்ளது ஆனல்

செயலாற்றுவது இப்பிரகிருதி உலகம் தன்னிடமிருந்து தோன்றுவதற்குக் காரணமாய் அமைவது. ஆனல் காரியமல்ல. இங்ஙனம் பிரகிருதியில் இருந்து விரிவடையும் உலகினைப் புருடனும் உற்பத்தியாக்குவதில்லை. கடவுளும் சடப்பொருளான பிரக்கிருதியை இயக்குவதில்லை.

இங்ஙனமாக சாங்கியத்தில் கடவுட்கொள்கை புறக்கணிக்கப்பட்டுள்ளதா? அன்றி பிரகிருதி வாதத்திற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளதா? எனக்கருதுமளவிற்கு அத்திட்டத்திலே இயற்கைவாதம் வளர்ச்சியடைந்துள்ளதெனலாம்.

> ''பிரகிருதி எப்போதும் ஒழிவடைவதில்லை. அது
> எப்போதும் சிருஷ்டித்துக் கொண்டேயிருக்கும்'' (3)

> ''புருடனுகவே இருப்பவன் பரிணமமடைவதில்லை
> செயலற்றிருப்பதால் கருத்தாவாகவும் ஆவதில்லை'' (4)

எனவே சாங்கியத்தரிசனத்தில் பிரகிருதிக்கு நிறுத்தாத இயக்கப்போக்கும், நித்தியத்தன்மையும் தாராளமாக வழங்கப்பட்டுள்ளது. அதாவது பிரகிருதியில் மூன்றுவேறுபட்ட முக்குணங்கள் காணப்படுகின்றன. அவற்றின் இயக்கம் ஒருபோதும் தடைப்படுவதில்லை. மேலும் முக்குணங்கள் சமநிலையில் இயங்குதல் உலகஒழுக்கம் எனவும், அச்சமநிலை தவறி இயங்குதல் உலகஉற்பத்தி எனவும் (5) சாங்கியம் கருத்தாவோ கடவுளோ இன்றியும் பிரகிருதி உலக உற்பத்தியிலும் ஒடுக்கத்திலும் இயங்கும் நிலையினை வருணிக்கின்றது. தம்முள் மாறுபட்ட அறிவற்ற முக்குணங்ளிடமிருந்து எங்ஙனம் பல்வேறு பொருட்கள் உண்டாகின்றன? என்ற கேள்வி எழுமிடத்து, திரி-எண்ணெய், விளக்கு, மூன்றும் சேருமிடத்துத் 'தீபம்' உண்டாவது (6) போன்றதே உலகப்பொருட்களின் உற்பத்தியும் என்பர். தீபத்தை ஏற்றவும், அணைக்கவும் எண்ணெய் தீர்ந்த விடத்து மறுபடி ஏற்றவும், கருத்தா ஒருவன் உண்டு என்பதைசாங்கியர் பொருட்படுத்தவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

தவிர பிரகிருதிக்கும் புருடனுக்கு மிடையேயுள்ள தொடர்பும் சாங்கியத்தில் தெளிவு பெற்றதாக இல்லை. புருடனை அவர்கள் அறிந்த முறையும் விசித்திரமானது. பிரகிருதி காலம் தோறும் பொருட்களை சிருட்டிக்கின்றது. அப்பொருட்களின் பலன் களை அநுபவிக்க ஒருவன் வேண்டும். அவ்வாறு பலன்களை அநுபவிப்பவன் 'புருடன்' என அவர்கள் அநுமானத்தினுல் அறிந்து கொண்டனர். உலகினைக் கொண்டு சாங்கி யர் அதனைப் படைத்தவனை நிறுவாது பயன்படுத்துவோனை நிறுவமுயற்சிப்பது குறிப் பிடத்தக்கதோர் அம்சமாகும். எனவே உலகினுண்மையைக் கொண்டு கடவுளுண்மை யினை நிறுவுதற்குச் சாங்கியர் முற்படவில்லை என்பது புலப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட பொருள் உற்பத்தியாகும் போது அதன் தேவை முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும் அப்பொருள் யாருக்காகச் செய்யப்பட்டது? என்ற வினாவெழும் போது யாரால் செய்யப்பட்டது? என்ற கேள்வியும் இயற்கையகாவே தோன்றும் சாங்கியத்திலே அவ்வாறு சிந்திக்காததுடன் பிரகிருதிக் கோட்பாட்டிலே பெருமுன் னேற்றம் ஏற்பட்டமையினையும் காணமுடிகின்றது (7) சாங்கியகாரிகா என்றநூ லின் உரையாசிரியரான வாசஸ்பதிமிஸ்ரா என்பார் இதுபற்றிக் குறிப்பிடும்போது

> ''வியாகரண சாஸ்திரப்படி 'பிரஹ்ம' என்ற
> பதத்திற்கு சூக்குமநிலையினைவிடுத்து ஸ்தூலமான
> நிலையில் விருத்தியடையும் வஸ்து எனப்பொருள்
> ஏற்படுவதால் அவ்விதநிலையைப் பிரகிருதியே அடையக்
> கூடுமாதல் பற்றிப் பிரகிருதியே பிரம்மம் என்றும் அப்பிரகிருதியே
> ஜகத் சிருஷ்டி, ஸ்திதி, லயம் ஏற்படுவதற்குக் காரணமென்றும்
> தெளிவுபடுத்தவே கபிலர் தமது சித்தாந்தத்தை வெளிப்படுத்த
> முன்வந்தார்'' (8)

எனக் சாங்கியது பிரகிருதிவாத வளர்ச்சிக்கான காரணத்தை விளக்கியுள்ளார்.

''பிரம்மமே உலக மாகின்றது'' என்ற உபநிடதங்களின் உட்கருத்தானது இங்ங னம் சாங்கியத்திலே பயன்பட்டிருக்கலாம். ஆயினும் உலகின் கருத்தாவாக அதனை சாங்கியம் வெளிப்பட ஒப்புக்கொள்ளாமைக்குத் தர்க்க வாதத்தால் ஏற்படும் பிரச் சனைகளே காரணமாகும். கருத்தா ஒருவனைப் பிரகிருதியின் உற்பத்திக்கு ஏதுவாகக் கொள்ளாமையினுல்தான் சாங்கியம் பிரகிருதி முக்குணங்களின் இயக்கநிலையினை ஒடுக்கத்திலும் நிறுத்தும் எனக் கொள்வதில்லை. அதிலும் சாங்கியர்க்குள்ள இடர்ப் பாடுயாதெனில் சமநிலையில் நின்ற முக்குணங்கட்கு எவ்வாறு பங்கநிலை ஏற்படும்? சமநிலைதவறும் முக்குணங்கள் மீண்டும் சமநிலைக்கு எவ்வாறு வருகின்றன? போன்ற சிக்கல்கட்கெல்லாம் சாங்கியத்தின் விடை திருப்தியளிப்பனவாக இல்லை.

புருடதத்துவத்தின்படி சடமாகிய பிரகிருதி செயற்படுவதற்கு புருடசன்னிதி மாத்திரம் போதுமானது எனச் சாங்கியம் கூறும் இப்புருடன் இயக்க மற்றவன் ஆகையினுல் அவன் பாசங்களில் சிக்குண்டு வினையாற்றுவதும், அதன் விளைவாகப் பிறந்திறப்பதும் பிரகிருதியுடன் கொண்டுள்ள தொடர்பினுலாகும். இத் தொடர் பானது விசித்திரமான முறையிலே சாங்கியத்தில் விளக்கப்பட்டுள்ளது. முடவன் ஒருவன் குருடன் ஒருவனது தோளில் இருந்து வழிகாட்டக் குருடன் நடந்து செல் வது போன்றதே புருடனுக்கும் பிரகிருதிக்குமுள்ள தொடர்பு நிலையாகும். புருடன் அறிவிருந்தும் இயங்கும் சக்தியற்றவன் - பிரகிருதிக்கு அறிவு கிடையாது. ஆனுல் இயங்கும் சக்தி படைத்தது. இதனை நோக்கு மிடத்து சித்துப் பொருளாகிய புருட னுக்குச் செயற்படுமுரிமையளிக்காது, சடப்பொருளாகிய பிரகிருதிக்கு செயலாற்று முரிமை அளித்திருப்பது சாங்கியத்தில் குறிப்பிடத்தக்கது. இதுபற்றிக் ஹரியன்ன என்பார் கூறும் பொழுது,

"ஸ்பாவதத்தைப் போல அப்போதிருந்த இயற்கைக் கருத்துச்சூழலால் கடவுள் பற்றிய எண்ணம் மிகையாகிப் பிரபஞ்சத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் முற்றிலும் பிரகிருதிக்கு மாற்றப்பட்டிருக்கலாம்"

எனக் குறிப்பிடுவது இவ்விடத்தில் பொருத்தமானதாகும்.

மூடவன் குருடன் போன்ற மேற்கோளிலிருந்து சாங்கியத்தில் புருடனோ பிரகிருதியோ பூரணநிறைவுடைய பொருளல்ல என்பதும் பெறப்படுகின்றது. மேலும் இத்தகைய புருடன் பிரகிருதியின் பிடியிலிருந்து கடவுளின் துணையின்றி எங்ஙனம் விடுபட்டு சுதந்திரமடைவான்? என்ற விடத்தும்; புத்திதத்துவத்தை அறிந்தவன் விடுதலை அடைந்தவன் எனச் சாங்கியம் கூறும்.

"அறிகின்ற ஒருவன் அறியப்படுகின்ற புத்திதத்துவம் முதலியவற்றினின்றும் வேறுபட்டவனாய் இருக்கின்றான் அவனே ஆத்மா எனப்படுகின்றான்" (10)

"தூக்கமற்ற அந்நிலையே கைவல்யம்" (11)

"லிங்க சரீரத்தினின்றும் புருடன் தன்னை எப்போது விலக்கிக் கொள்கின்றானோ அப்போது துக்கானுபவம் ஏற்படாது" (12)

"புருடன் கர்மாதிகள் அற்றிருப்பதால் மோட்சத்தை அடைதுமில்லை. ஜனனமரணத்தையடையவதுமில்லை" (13)

இவற்றிலிருந்து அவைதிக தரிசனங்கள் போன்று 'அறிவு' ஒன்றுதான் ஆன்மவிடுதலைக்கு இன்றியமையாதது என்பதே சாங்கியதரிசனத்தின் மூலமும் புலப்படுத்தப்பட்டுள்ளது பௌத்தத்தின் 'விஞ்ஞான' என்னும் அறிவுநிலையினை ஒத்ததே சாங்கியத்தின் புத்திதத்துவமெனலாம்.

"பல்லாற்றல்களின் அனுபவம் கடந்ததும், பலபொருட் சேர்க்கையினால் உருவான நாற்பூதங்கட்கும் அப்பாற்பட்டதுமான ஐந்தாவது நுண்பொருட் கூறே அறிவெனும் புத்திதத்துவமாகச் சாங்கியமும் பௌத்தமும் கூறுகின்ற 'விஞ்ஞான' என்ற அறிவெழுச்சிநிலையாகும்" (14)

சாங்கியரது இந்நிலை சீவன்முத்தாது நிலையினை ஒக்கும் எனக்கருதவும் இடமுண்டு. அறிவெழுச்சி பெறுவதுடன். முக்குணங்களினின்றும் விடுபட்டுப் புருடனவன் இயற்கையினையும் அதன் அனாத்மதன்மைகளையும் கடந்து நித்தியமானவனாய்; அழியாதவனாய்; மாறுபாடற்றவனாய்; காலம் கடந்தவனாய்; என்றுமுள்ளபடி இறைத்தன்மை எய்துவான்" (15) என்றபடி சாங்கியத்தில் புருடதத்துவம் இறுதியிலே 'அறிவெனும்' பிரம்மமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதோ எனச்சந்தேகிக்கவும் இடமுண்டாகின்றது.

பொதுவாகச் சாங்கியத்திலே புருடர்களின் பன்மையும், பிரகிருதியின் கட்டுப்பாடற்ற தன்மையும், பரம்பொருளின் வீழ்ச்சியும் காணப்படுகின்ற போதிலும், 'அறிவு' என்னும் உயர்பண்பு சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. ஆதலால் சுதந்திரமான அறிவுநிலை கடவுள்நிலையின் வெளிப்பாடெனவும் அவர்கள் கருதியிருக்கலாம்.

"கடவுளின் இருப்பை மறுக்கும் நோக்கம் கபிலருக்குக்கிடையாது எனினும் அவர் வலியுறுத்த நினைத்ததெல்லாம் கடவுள் இருத்தலை அறிவு முறையால் நிலைநாட்ட முடியாதென்பதே" (16)

கடவுட் கொள்கைபற்றிய சாங்கியத்தின் நிலைப்பாடாகும். எப்படியானபோதும் முற்கால சாங்கியம் நிரீஸ்வரக்கோட்பாடாகவே கருதசப்பட்டு வந்துள்ளது. காலப்போக்கில் கடவுள் இருப்பின் தேவை கருதி பிற்கால அறிஞர்கள் அதனைத் தமதுநூல்களில் இணைத்துக் கொண்டனர். அதனால் முற்கால சாங்கியம் 'நீரீஸ்வரசாங்கியம்' எனவும் பிற்கால சாங்கியம் 'ஈஸ்வர சாங்கியம்' அல்லது யோகதத்துவம் எனவும் அழைக்கப்பட்டது.

வைதிக தரிசனங்களில் காலத்தால் முற்பட்டசாங்கியம் கடவுட்கொள்கைக்குப் போதிய மதிப்பளிக்க வில்லையெனில், அதற்கு வேத உபநிடத வாக்கியங்களும் ஒரோருசால் காரணமாய் இருக்கவேண்டும். ஏனெனில் அந்நூல்கள் கடவுட்கொள்கை பற்றிய சிந்தனைகளின் இறுதி அம்சமாக நேதி, நேதி என எதிர்மறைப் பொருளிலேயே அதனை எடுத்தோதியுள்ளன அதுவும்தவிர இன்னதன்மையதுதான் என ஒரு வெளிப்படையான நிச்சயத்தையும் கூட அவை திடமாக உறுதி செய்ய முற்படாததும் சாங்கியத்தின் கடவுட் திட்டத்திற்கு அனுசரணையாக அமைந்திருக்கலாம். ஆதலால்தான் வேத உபநிடதங்களை அதிகாரநூல்களாக ஏற்றுக்கொண்டும் அவற்றின் 'கடவுட்கொள்கை' பற்றிய கருத்தோட்டத்தினை சாங்கியம் பொருட்படுத்தாது தவிர்த்திருக்க வேண்டும்.

வேதங்களிலிடம்பெற்ற ஆரம்பகாலப் பன்மைக் கொள்கையினுல் - இறுதியான 'உள் பொருள்' என்பது பன்மைக் கொள்கையிலா?
இருமைக் கொள்கையிலா? ஒருமைக்கொள்கையிலா?

அமைந்துள்ளது? என்ற சந்தேகங்களை உபநிடதங்கள் தோற்றுவித்தன. எனவே கடவுட்கொள்கையை ஆராயும்விடயம் சர்ச்சைக்குரியதென உணர்ந்து கொண்டசாங்கியம்; அறிவே சொரூபமான பரம்பொருள் ஆத்மனில் உறைவதாக, புருடனில் உறைவதாக முடிபு பண்ணியது புருடன் பிரகிருதி என்னும் இருமைக்கொள்கையினை அறிமுகப்படுத்தியது. கட்டுப்பாடற்ற பிரகிருதிக் கொள்கையினூடாகவும் வேதகால 'ருதம்' என்னும் அறஒழுங்குமூலமே பிரகிருதி இயங்குகின்றது என்பதனை முக்குணங்களின் சீரான இயக்கநிலைமூலம் சாங்கியம் அறிவுறுத்துகின்றது எனவும் கொள்ள இடமுண்டு. 'சத்காரியவாதம்' என்ற 'காரண காரியக்' கோட்பாட்டை அறிமுகப்படுத்தியதன் விளைவாக பிற்கால தத்துவசிந்தனை வளர்ச்சியிலும் சாங்கியம் மறைமுகமான பங்களிப்பினை ஆற்றியுள்ளதெனலாம்.

## அடிக்குறிப்புகள்


1. லக்ஷ்மணன் கி., இந்தியதத்துவஞானம், பழனியப்பா பிரதாஸ், சென்னை, 1970, பக். 185
2. Radhakrisnan S., INDIAN PHILOSOPHY, Vol. 2., George Allen Unwin Ltd, London 1948, P P. 280 – 82
3. கடலங்குடி நடேச சாஸ்திரிகள், (உரையாசிரியர்) சாங்கியதத்துவ கௌமுதி, சென்னை, 1925, பா. எ 56, பக். 220—21
4. கடலங்குடி நடேசசாஸ்திரிகள்., மே கு நூ , பா. எ. 64, பக். 216—17
5. லக்ஷ்மணன்., கி., மே கு நூ , பக். 196
6. லக்ஷ்மணன் கி., மே கு நூ , பக். 194
7. ஹிரியன்னு எம்., இந்தியதத்துவம், பகுதி II தமிழ்நாடு, 1956, பக். 117
8. கடலக்குடி நடேச சாஸ்திரிகள்., மே கு. நூ . முகவுரை, பக். 5
9. ஹரியண்ணு எம்., மே கு நூ , பகுதி II, பக் 104
10. கடலங்குடி நடேச சாஸ்திரிகள்., மே. கு நூ , பா. எ. 17
11. கடலங்குடி நடேச சாஸ்திரிகள்., மே, கு. நூ , பா. எ. 9
12. கடலங்குடி நடேச சாஸ்திரிகள் , மே கு நூ., பா. எ. 55
13. கடாங்குடி நடேச சாஸ்திரிகள்., மே. கு. நூ., பா. எ. 62
14. Dasgupta, S. N., INDIAN IDEALISM, Cambridge University Press, 1962 P. 119
15. Keith Berriedate A., SAMKYA SYSTEM, Second Edition Calcutta, 1949, P. 39
16. ஹரியண்ணு எம் , மே.கு.நூ., பகுதி II, பக். 120
Radha Krisnan S , OP. CIT, Vol. 2, P. 317

# சிலப்பதிகாரத்தில் சிவநெறி

எம். வேதநாதன் B. A. (சிறப்பு)
இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக் கழகம்

தமிழர் சிந்தனையைக் கவரும் செந்தமிழ் இலக்கியங்களுள் சிலப்பதிகாரமும் ஒன்றாகும். 'தமிழன்' என்னும் இனஉணர்வுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் ஒரு காப்பியம் உண்டானால் அது சிலப்பதிகாரமாகத்தான் இருக்கமுடியும். தமிழில்உள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் மேலானதாக மிளிரும் சிலப்பதிகாரம் தமிழ் இனத்தின் வரலாற்றுக்களஞ்சியமாகவும், இந்துப்பண்பாட்டுப் பெட்டகமாகவும் இலங்குகின்றது புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம், என மூவேறு காண்டங்களைக் கொண்டமைந்த இக்காவியமாளிகையில் சிவநெறியின் மேன்மை சிறப்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சிலப்பதிகாரத்தினை இயற்றிய இளங்கோ முனிவர் கி. பி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். வஞ்சிநகரத்தில் பிறந்து முற்றும் துறந்த துறவியாகவிளங்கிய இவரைச் சமணமுனிவர் எனவும், இவர் இயற்றிய நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைச் சமணஇலக்கியம் எனவும் இலக்கியஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இலக்கியம் காலத்தின் கண்ணாடியாக விளங்குமாதலால் சிலப்பதிகார இலக்கியத்தினுள் சமணசமயக் கருத்துக்கள் மட்டுமன்றி, அக்காலத்தில் நின்றுநிலவிய பிறசமயக் குறிப்புக்களையும் ஆங்காங்கே காணமுடிகிறது. இந்திய சமயங்கள் பலவற்றை இணைக்கின்ற ஒருபாலமாக விளங்கும் சிலப்பதிகாரத்தினுள் சிவநெறிக்கும் உயரியஇடம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

சிவநெறி என்பது சிவனைக்குறிக்கும் தொன்நெறியாகும். சைவநெறியாவதும் இதுவே. இந்நெறி சமணஇலக்கியமொன்றில் சிறப்பிக்கப்பட்டிருப்பது ஆய்வுக்குரியதாகும். இன்றுகிடைக்கும் தமிழ் இலக்கியங்களிலே சைவசமயத்தின் தத்துவத்தை எடுத்துக்காட்டும் மிகப்பழைய நூல் மணிமேகலையாக இருப்பதையும் கருத்தில்கொண்டு நோக்கும்போது இவ்விருநூல்களும் எழுந்தகாலத்தில் சிவவழிபாடு சிறப்புற்றுத் திகழ்ந்திருக்க வேண்டுமென்ற முடிவுக்குவரமுடிகிறது.

'சிவன்' என்ற சொல் பழந்தமிழ் இலங்கியங்களில் குறிப்பிடப்படாததுபோலவே சிலப்பதிகாரத்திலும் இச்சொல்லை நேரடியாகக் காணமுடியவில்லை. ஆயினும் சிவனெனக் கருதத்தக்க பல சொற்றொடர்கள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றனர்.

சிவனைக்குறிக்கும் திருநெறியாகிய சிவநெறிக்குள் இந்துசமய நெறிகள் பலவும் இணைந்திருப்பது இந்நெறியின் தனிச்சிறப்பாகும் எனவே பரந்தநோக்கில் சிவநெறி என்பதை இந்துசமயநெறி என்று கூடக்கூறமுடியும். சிவநெறியை ஒரு வாழ்க்கை நெறியாகவும் கண்டுகொள்ள முடிகின்றது.

சேக்கிழார் சிவநெறிசிறக்கப் பெரியபுராணம் இயற்றியருளினார். கூலவாணிகன் மதுரைச்சாத்தனார் பௌத்தசமயத்தை வளர்ப்பதற்கென்றே மணிமேகலையையாத்தார். திருத்தக்கதேவர் சமணத்தை வாழ்விற்பதற்காகவே சீவகசிந்தாமணிக் காப்பியத்தைச் செய்தருளினார். ஆனால் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமோ எல்லாமதங்களையும் ஒன்றாகநோக்கும் சமயசமரச நூலாக மிளிர்கின்றது.

சமயசமரசப் பண்புடையவராக இளங்கோ விளங்கியதனாலன்றோ புகார்க்காண்டத்து இந்திரவிழவு ஊர் எடுத்தகாதையில் மருதநிலத்தெய்வமான இந்திரவழிபாட்டையும், கானல்வரியின் இறுதியில் நெய்தல் நிலத்தெய்வமான வருணன் வழிபாட்டையும்; மதுரைக்காண்டத்து வேட்டுவவரியில் பாலைநிலத்தெய்வமான கொற்றவைவழிபாட்டினையும், ஆய்ச்சியர் குரவையில் முல்லைநிலத்தெய்வமான திருமால் வழிபாட்டையும், வஞ்சிக்காண்டத்திலுள்ள குன்றக்குரவையில் குறிஞ்சிநிலத்தெய்வமான முருகவழிபாட்டையும் கூறியுள்ளார். தொல்காப்பியத்தில் ஒருநிலத்திற்குரிய தனித்தெய்வமாகச் சிவன் கூறப்படாதது போலவே சிலப்பதிகாரத்திலும் சிவன் ஒருநிலத்திற்குரிய திணைவழித்தெய்வங்களில் ஒன்றாகக் கூறப்படவில்லை. வஞ்சிக்காண்டத்தை இளங்கோவடிகள் இயற்றவில்லை எனச்சில அறிஞர்கள் கூறுகின்ற போதும், அதை இளங்கோவடிகளே இயற்றினரெனச் சிலப்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் ஆணித்தரமாகக் கூறும் கருத்து ஏற்கக்கூடியதாகவுள்ளது.

சிவனைத் திணைவழித் தெய்வங்களிலொன்றாகச் சிலப்பதிகாரம் கூறாதவிடத்தும் புகார் நகரத்திலும், மதுரையம்பதியிலும் சிவபெருமானுக்குக் கோயிலமைத்து வழிபட்டார்களென்பதைப் பின்வரும் சிலப்பதிகார அடிகள் உறுதிசெய்கின்றன.

> "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
> வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
> நீல மேனி நெடியோன் கோயிலும்
> மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
>
> (இந்திரவிழவூரெடுத்த காதை 169-73)

> நுதல் விழிநாட்டத்து இறையோன் கோயிலும்
> உவணச்சேவல் உயர்த்தோன் நியமமும்
> மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
> கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்
>
> (ஊர் காண்காதை 7-10)

இங்கே 'பிறவா யாக்கைப் பெரியோன்' 'நுதல் விழிநாட்டத்து இறையோன்' எனக்குறிப்பிடும் சிலப்பதிகார வரிகள் சிவபெருமானைக் குறித்து நிற்கின்றன. புகாரிலும், மதுரையிலும் முருகன், திருமால், இந்திரன், பலராமன் ஆகிய கடவுளர்களுக்கும் கோயில்கள் காணப்படுகின்ற போதும் அக்கோயில்களின் வரிசையினைக் கூறவந்த சிவன்கோயிலை இளங்கோவடிகள் முதற்கண்வைத்துக் கூறியது சிலப்பதிகார காலத்தில் அவ்விருநகரங்களிலும் சிறப்புற்றிருந்த சிவநெறி மாண்பைக் காட்டுவதாகக் கருதமுடியும்.

கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடந்தபின்னர் அவர்களிருவரும் பள்ளியறையில் சந்தித்த முதல்நாள் இரவில் கோவலன் கண்ணகியின் உறுப்பழகை வருணிக்கும் முறை தெய்விக உவமைகளை உள்ளடக்கியதாகவுள்ளது. முதலில் கண்ணகியின் நெற்றியை வெறும் பிறையோடு ஒப்பிடாமல் சிவபெருமானின் சடாபாரத்தில் உள்ள பிறைச்சந்திரனுடன் உவமையாக்கிப் பேசியபின்னரே அவளின் இடையழகை தேவர்கோமானின் வச்சிராயுதத்தோடும், கண்ணழகை முருகனின் கைவேலோடும் பிணைத்துப் பேசுகின்றார். (இளங்கோவடிகள், மனையறம் படுத்தகாதை 37-50) இந்தத்திருவுருவ வருணனையில் கூட முதலில் சிவப்பிறையுடன் அவள் திருநுதலை ஒப்பிட்டமை இளங்கோ அடிகளின் சிவபக்திமையின் வெளிப்பாடே என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் இறவாத புகழோடு நின்று விளங்கும் மாங்காட்டு மறையவன் என்னும் வேதியன் வைணவக்கடவுளை வழிபடுபவனைக் காணப்படினும் சித்தத்தைச் சிவன்பால்வைத்த சிவநெறியாளராகவும் விளங்குகின்றான். மூன்றுகிளைகளாக பிளவுகளாகப் பிரிந்து செல்லும் வழியைக் குறிப்பிடுங்கால், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளாகிய சிவபெருமான் திருக்கரத்தில் விளங்கித் தோன்றும் வடித்த முக்கிளைச் சூலாயுதத்தையே உவமையாக அமைத்துக் கூறுகின்றான்.

"பிறைமுடிக்கண்ணிப் பெரியோன் ஏந்திய அறைவாய்ச்
சூலத்து அருநெறி கவர்க்கும்"
(காடுகாண்காதை 72-73)

இதன்கண் உள்ள பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் என்பது சிவபெருமானைக் குறிப்பதாகும். சிலப்பதிகாரகாலத்தில் சிவவழிபாடு சாதாரணமக்கள் மத்தியிலும் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தமையினைற்றான் சாதாரண வழிப்பாதைப் பிரிவைக்கூட சிவனது திரிசூலத்துடன் தொடர்புபடுத்தி மக்களுக்கு இலகுவாகச்சிவநெறிச்சிறப்பை விளக்கி விடுகிறார் இளங்கோ அடிகள்.

சிவமும் சக்தியும் ஒருவரிலிருந்து மற்றவரைப் பிரிக்கமுடியாத வகையில் அர்த்தநாரியாக விளங்குகின்றார்கள். இது சிவநெறியின் தனிச்சிறப்பாகும். சிவமும்சக்தியும் ஒன்றென்பதும் சைவநெறியின் தாற்பரியமாகும். இதனால்தான சிவபெருமானுக்கு உரியவளாக மதிக்கப்படும். கொற்றவையென்னும் துர்க்கை, சிவபெருமான் செய்த செயல்களையெல்லாம் செய்தவளாக வைத்து மதிக்கப்படுகின்றாள். அதனால்தான், சிவபெருமான் நஞ்சுண்டதாகச் சொல்லப்படும் செய்தியைக் கொற்றவைக்கு ஏற்றிக் கூறியுள்ளார் இளங்கோவடிகள்.

"விண்ணோர் அமுதுண்டுஞ் சாவஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்"
(வேட்டுவவரி 153—154

என்று கவிஞர் கூறுவது நயக்கத்தக்கது 'விண்ணோர்கள் அமுது உண்டார்கள் நீயோ அமுது உண்ணவில்லை. அமுது உண்டவர்கள் உயிரோடு இருப்பது எதிர்பார்க்கப்படுவது; நஞ்சுண்டவர்கள் மாய்வதும் எதிர்பார்க்கப்படுவது விண்ணோர்கள் நஞ்சுண்ணவில்லை ஆயினும் இறந்துபட்டார்கள். நீயோ நஞ்சுண்டும் உயிரோடு இருக்கிறாய் உயிரோடு இருப்பது மாத்திரமல்லாமல் மற்றையோருக்கு அருள் சுரக்கின்றாய். உன்னுடைய பெருமை இருந்தவாறு என்னே! 'என்று பொருள் செய்யக் கூடிய வகையில் இவ்விரண்டு அடிகளைத் திட்பமாகவும், நுட்பமாகவும் இளங்கோவடிகள் அமைத்திருப்பது அற்புதமானது.

சிவபெருமானுடைய பெருமையை, வீரதீரச்செயல்களைக் கொற்றவைக்கு ஏற்றிக் கூறும் பான்மையாளரான இளங்கோ அடிகள், நஞ்சுண்டு கறுத்த கண்டத்தினள், பாம்பை நாணாகப்பூட்டி மகாமேருமலையினை வளைத்தவள், நச்சரவினைக் கச்சையாகக் கட்டியவள், சூலம் ஏந்தியவள், யானைத் தோல் போர்த்தவள், புலித்தோல் அணிந்தவள் என்றெல்லாம் கொற்றவையை வருணிக்கின்றார்.

நஞ்சு உண்டு கறுத்த கண்டி, வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சு உடை முலைச்சி
வளையுடைக்கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்கு ஆகிய

அரியின் உரிவை மேகலையாட்டி
நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகுபொதி உருவத்து, உயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து

(கால்கோட்காதை 54—56)

சேரன் செங்குட்டுவன் பிறருக்கு வணங்காத தன் திருமுடியால் சிவன் சேவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்கி வலம் வந்தான் என்ற செய்தி அக்காலத்தில் சிவபெருமானே மிகவும் உயர்ந்த கடவுள் என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது. சிலப்பதிகாரத்தில் சிவன் மேலானவனாக விளங்கினான் என்பதற்கு இந்த ஆதாரமொன்றே போதுமானது.

"இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி, வலங்கொடு"

(கால்கோட்காதை 57)

சிவபெருமானது சேவடியைத்தன் மணிமுடியில் ஏற்கனவே வைத்துக் கொண்டதனைப் போலும் மக்கள் கொடுத்த திருமாலின் சேடத்தைத் தன் தடந்தோளில் தரித்துக்கொண்டு போருக்குப் புறப்பட ஆயத்தமாகின்றான். "செங்குட்டுவன்"

"சேடம் கொண்டு" சிலர் நின்று ஏத்த
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணி முடி வைத்தலின்
ஆங்கது வாங்கி, அணிமணிப் புயத்துத்
தாங்கினன் ஆகித், தகைமையின் செல்வழி.

(கால்கோட்காதை 63 - 67)

இதில்வரும் 'செஞ்சடைக்கடவுள்' சிவபெருமான் என்பதில் ஐயப்பாடு எழநியாயமில்லை. மன்னர் செங்குட்டுவனின் சிந்தைக்கினிய கடவுளாகத் திருமாலை விடச் சிவபெருமானே இருந்தார் என்பதையும் நோக்க முடிகிறது. மன்னர் எவ்வழியோ குடிகளும் அவ்வழி என்ற பழமொழிக்கு ஏற்ப செங்குட்டுவன் சைவனாக விளங்கியதால் சேரநாட்டுமக்களுள் பலரும் சைவர்களென்பது தெளிவு.

செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த கோயிலில் அவளது சிலையை வைத்து வழிபாடுவகுக்கும் வேளையில் நடுகல்லிற்குக் கடவுள் மங்கலம் செய்வதற்கு முன்னால் தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமானையே அவன் வணங்கினான் எனக் கூறப்பட்டுள்ளது.

இமையவர் உறையும் இமயச் செவ்வரைச்
சிமையச் சென்னி தெய்வம் பரசி

(நடுகற்காதை 22.—227)

எனவே சிவவழிபாட்டிற்குப் பின்புதான் கண்ணகியின் படிமத்திற்கு அணிகலன்கள் பூட்டப்பட்டு அருச்சனை செய்யப்பட்டதென்பது தெளிவு.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்து
(வேட்டுவ வரி - 99)

இத்தகைய வருணனைகளை நோக்கும்போது சிறப்புற்றிருந்த சிவவழிபாட்டுடன் சக்தி வழிபாடானது சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் எனக் கூறத்தக்க வகையில் பிணைந்திருந்த தன்மையினைப் பிரதி பலிக்கின்றது.

சிவசக்தி ஐக்கியத்தை வெளிப்படுத்தும் அர்த்தநாரி வடிவத்தைக் குறிப்பிடுவதனாலும் சிலப்பதிகாரத்தில் சிவநெறி சிறப்பிக்கப்படுகின்றதெனலாம்.

"கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய், மறை ஏத்தவே நிற்பாய்"

(வேட்டுவவரி 109—110)

சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சேரன் செங்குட்டுவனோடு தொடர்புறும் செய்திகளாலும் சிலப்பதிகார சிவநெறிச் சிறப்பைப் புரிந்துகொள்ள முடிகின்றது. சிவபெருமான் திருவருளினால் வஞ்சிமா நகரின் கண் சேரன் செங்குட்டுவன் தோன்றினனெனக் கூறப்பட்டுள்ளது.

"செஞ்சடைவானவன் அருளினில் விளங்கி
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்"

(கால்கோட் காதை 98—99)

இக்குறிப்பிலிருந்து செங்குட்டுவன் சைவன் என்பது மட்டுமன்றி அவனது தந்தையும் சைவன் என ஊகிக்கமுடிகிறது. தந்தையைச் சைவனாகக் கருதமுடியுமானால் மைந்தன் இளங்கோவும் ஒரு சைவ மதத்தவனே என்லாம். சைவனாகப் பிறந்த இளங்கோ அப்பர் சுவாமிகள் போல சமணராக மாறி சிலப்பதிகாரத்தை இயற்றினரா? இது ஆய்வுக்குரியதாகும். செங்குட்டுவன் சிவபெருமானுக்குப் பெருமதிப்புத் தந்தவன் என்பது கால்கோள்காதையில் வருகின்ற ஒரு செய்தியாலும் விளங்குகிறது. அவன் வடநாட்டு அரசரை வெல்லும் நோக்கத்துடன் புறப்பட்ட வேளையில் வஞ்சிமா நகரைவிட்டு நீங்கு முன் சிவபெருமானின், செவ்வையான திருவடிகளை வெற்றி பொருந்திய வஞ்சிமாலையுடன் தன்சிரசிலே சூடிக்கொண்டமை சிவனை அக்காலத்தில் வீரத்துக்கும் வெற்றிக்கும், உரிய தெய்வமாக வழிபடப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதமுடியும். இவை போன்ற செய்திகள் சிலப்பதிகார காலத்தில் நிலவிய சிவநெறிச் சிறப்பினையும் அக்காலத்தில் சிவபெருமானுக்கு இருந்த பெருமதிப்பினையும் நிச்சயம் நிறுவ உதவுமெனலாம். இவ்வாறு பல வழிகளாலும் சிவநெறியைச் சிறப்பித்த இளங்கோ அடிகளைச் சமணமுனிவர் என உறுதியாகக் கூறும் ஆய்வாளரின் கருத்துக்கள் எதிர்காலத்தில் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும்.

# அவனருளாலே...

செல்வி அ. சுப்பையா (உமா)
தமிழ் சிறப்பு இறுதி ஆண்டு

குன்றுகள் தோறுடி வரும் குமரன் வீதி உலாவரும் நேரம். ஒருபுறம் அடியார்களின் அரோஹரா கோசம் விண்ணைப்பிளந்து கொண்டிருக்கின்றது. இன்னொருபுறம் பக்தர்களின் காவடியாட்டம் கற்பூரச்சட்டியைத் தலையில் ஏந்தியவண்ணம் பரவசம் பொங்க ஆடும் காட்சிகள் ஒருபுறம், மெய்மறந்து தியானத்தில் ஈடுபட்டிருப்போர் ஒருபுறம், கார்த்திகை மைந்தனின் நாமங்களை உச்சரித்துப்பாமாலை பாடுபவர், பாடிப்பஜனை செய்பவர் இன்னொரு புறமாக தங்கரதத்தில் கைலாயவாகனத்திலேறி ஆலயத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறான். பக்தர் குறைதீர்க்கும் பக்மஞபர் ஆலயத்திற்குட் செல்வதற்காக வந்த தட்சா கற்பூரத்தைக் கொழுத்திவிட்டுத் தன்னை மறந்து கண்களில் நீர்மல்கத் தன் குறைகளை அவனிடம் முறையிட்டு அவன்தாள் பணிந்த வண்ணம் நின்றாள்

திடீரெனத் தன்னுடல் எங்கும் ஏதோ ஒரு உஷ்ணம் பரவுவதை உணர்ந்த அவள் மீண்டும் நிஜவுலகிற்கு வந்தபோது தன்னுடைய சாறி தலைப்பு முழுவதும் தீப்பற்றி எரிவதையும் ஒரு இளைஞன் தன் கைகளால் கசக்கி அணைத்துக் கொண்டிருப்பதையும் கண்டாள். நிமிர்ந்து அவளை நோக்கிய அவ்விளைஞன் இப்படித் தன்னை மறந்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்தீர்களே நான் வராவிட்டால் உங்கள் நிலை என்ன என்றான். அவனை வணங்கியவர்களுக்கு அபயமளிப்பதில் எவ்வளவு வல்லவன் என்பதை நான் கண்டு கொண்டேன். கடவுள் உங்கள் ரூபத்தில் வந்து என்னைக் காப்பாற்றியுள்ளான். உங்கள் உதவிக்கு ஆண்டவன் என்றுமுங்களுக்கு அருள் பாலிப்பாராக, என்று கூறிவிட்டு, மேலும் உள்ளே சென்று தியானத்தில் ஆழ்ந்தாள். அவளைத் தொடர்ந்து சென்று அவ்விளைஞனும் வீதிவலம் வரும் இறைவன், ஆலயத்துள் பிரவேசிக்கும் அருட்கடாட்சத்திற்காகக் காத்திருந்தான்.

எம்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக உள்ளே வந்து தீபாராதனை முடிந்தபின் அடியார்கள் தீர்த்த பிரசாத விபூதி பெற்றுக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். தட்சாவும் தன் இல்லத்திற்கு திரும்பும் வழியில் அவ்விளைஞனும் அவ்வழியால் வந்து கொண்டிருந்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டனர். ''நீங்கள் இந்த வேளையிற் தனியாகச் செல்கின்றீர்களே வீடு அருகிலிருக்கின்றதா'' என அவன் கேட்க இல்லை சற்று தூரம் தள்ளிப் போகவேண்டும் என்றாள்.

கடவுளை நம்பியவர்களுக்கு அபாயமேற்பட அவன் விடமாட்டான் என்ற நம்பிக்கையிற்தான் நான் ஒவ்வொரு கிழமையும் தனியே வந்து போகிறேன் என்றாள், நானும் இந்த வழியாற் தான் போகவேண்டும். ''உங்களுக்கு ஆட்சேபனையில்லையென்றால் உங்கள் வீடுவரை உங்களுக்குத் துணையாக வருகின்றேன்'' என்றான் அதற்கு அவள் சம்மதிக்கவே அவளை வீட்டில் விட்டு விட்டுச் சென்றான்.

நாட்கள் நகர்ந்தன. அடுத்து வந்த வெள்ளிக்கிழமையன்று மீண்டும் அவர்கள் ஆலயத்திற்கு சந்தித்துக் கொண்டனர். ஆலயத்தில் விதைக்கப்பட்ட அவர்களது சந்திப்பு ஆலயத்திலேயே நட்பென்னும் பயிராக வளர்ந்தது. ஒரு நாள் ஆலயவெளி வீதியில் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டபோது ''தட்சா இதுவரை என்னுடன் பழகிய நீங்கள் உங்களைப் பற்றி எதுவுமே கூறவில்லையே'' என்று கேட்டான் அதற்கு அவள் தான் ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றும் தனக்குப் பிறகு நான்கு சகோதரிகள் இருப்பதாகவும் தான் பட்டப்படிப்பை முடித்துவிட்டு

தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிவதாகவும் தாய் தந்தையரோ சகோதரர்களோ தன் வருவாயைக் கொண்டே குடும்ப வண்டியினை இழுக்க வேண்டியுள்ளதெனவும் கூறினாள். பின்னர் அவற்றிற்கெல்லாம் விடிவு வேண்டியும் தனக்கும் தன் உடன் பிறப்புக்களுக்கும் பிரகாசமான வாழ்வு தரும்படியும் வேண்டியே ஆறுமுகத்தானை அயராது வெள்ளிதோறும் விரதமிருந்து துதிப்பதாக கூறினாள் அவளது பரிதாபமான கதையை கேள்வியுற்ற தனஞ்சயன் என்னும் அவ்விளைஞன் தட்சாமீது அளவிலாத பற்றுதலும் பரிவும் கொண்டான். நட்பெனும் பயிராக வளர்ந்த அவர்களது தொடர்பு காதலெனும் மலராக மலர்ந்து மணம்பரப்ப தொடங்கியது. தட்சாவும் தனஞ்செயன் பால் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்த போதிலும் தன் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கேற்பதற்கு ஒரு துணையளித்த அவன் நாள்களை மறவாது போற்றிய வண்ணம் இருந்தாள். இவ்வாறு இருக்கும் நாளில் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். என தனஞ்செயன் வேண்டினான், ஆனல் தட்சா அதற்கு மறுத்துதான் திருமணம்செய்துவிட்டால் தனது சகோதரிகள் அனாதைகளாகி விடுவார்கள், எனவே கடைசித் தங்கை வளரும் வரை பொறுத்திருக்கும்படி வேண்டினாள்.

ஒரு நாள் ஆலயத்திற்குச் சென்று வீடு திரும்பிய தட்சா வீட்டில் மயான அமைதி நிலவுவதைக் கண்டு திடுக்கிட்டவளாக தனது கடைசி சகோதரியிடம் வீட்டில் என்ன நடந்தது என வினவினாள். அவள் ஒன்றும் அறியாதவளாக மேலும் கீழும் விழித்தாள். அவள் இரண்டாவது தங்கை கடிதம் ஒன்றைக் கொணர்ந்து அவளிடம் கொடுத்தாள். கடிதத்தை பிரித்தவள் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக சொரிய தலையை கைளால் தாங்கியவாறு அசைவற்று அப்படியே அமர்ந்து விட்டாள். 'கடவுளே' நாளும் பொழுதும் உன்னிடம் கையேந்தும் எனக்கா சோதனைகளும் வேதனைகளும். என் சகோதரிகளுக்கு நான் என்ன குறை வைத்தேன். ஏன் என்னை இப்படி அவமானப்படுத்தினாய் ஆம் அவள் தன்னுடன் படித்த ஒரு வரை விரும்புவதாகவும் அவருடன் செல்வதாகவும் எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தாள். இதனால் மனமுடைந்த நிலையிலிருந்த தட்சா அடுத்த வாரம் தனஞ்சயனைச் சந்தித்த போது வீட்டில் நடந்ததைக் கூறி தனது அடுத்த இரண்டு தங்கைகளுக்கும் உடனடியாக என்ன பாடுபட்டாவது திருமணம் செய்து வைத்து விடவேண்டும் எனக் கூறினாள். ஒருவாறு அயராத உழைப்பினால் இருவரது திருமணத்தையும் முடித்துவைத்துவிட்டு அவர்களின் திருமணத்திற்காக உதவிபுரிந்ததிற்கு நன்றி கூறவந்த தட்சா தன்னுடன் தனது நான்காவது தங்கை தயாவையும் அழைத்து வந்தாள்.

அன்று ஆலயத்தில் கார்த்திகைத்திபத் திருநாளாகையால் சனக் கூட்டம் பெருந்திரளாகக் காணப்பட்டது. ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்ட தட்சாவும் தயாவும் தனஞ்சயனின் வருகைக்காக காத்திருந்தார்கள். அப்போது தங்கை தயா தனக்கு வளையல் வாங்கித் தரும்படி கேட்டாள். தங்கைக்கு வளையல் வாங்கிக் கொடுக்கும் போது தட்சா தற்செயலாக வந்த ஒரு மோட்டார் வாகனத்தில் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள்.

தட்சா விபத்திற்குள்ளானதை அறிந்த தனஞ்சயன் துடியாய் துடித்துப் போனான் உடனே எல்லாம் வல்ல இறைவன் பிரணவத்திற்கு பொருளுரைத்தவா. ஒளவைக்கு பழம் ஈந்தவா! அன்பருக்கன்பனே! சூரபத்மனை அழித்த தேவ சேனாபதியே! வள்ளி மணவாளா! உன் திருவடி படிந்தே உன்னையே கதி என்று கிடக்கும் என் உயிரின் இனிய தட்சாவிற்கு இந்த கதி, அவளைக் காப்பாற்றித் தர வேண்டும். சரவணபவா சண்முகா! வருகின்ற கார்த்திகைத் தீபத் தினத்தன்று அங்க பிரதட்ஷை செய்கின்றேன்.

கார்த்திகை மைந்தா! கடம்பா எனவேண்டிக் கொண்டு மருத்துவ மனைக்கு விரைந்தான்.

அங்கே நினைவற்றவளாக தட்சா கட்டிலில் கொம்பிழந்த கொடியைப் போன்று கிடந்ததைக் காண தனஞ்சயனுக்கு நெஞ்சமெல்லாம் அடைத்துக் கொண்டு வந்தது. சற்று நேரம் செல்ல தட்சா மெதுவாக கண் திறந்து பார்த்தபொழுது தனக்கு நேர்ந்ததை உணர்ந்தாள். கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. அதைக்காண சகிக்காத தனஞ்செயன் தட்சா 'கண் கலங்காதே அம்மா' ஆண்டவன் பக்தர்களைத்தான் அதிகமாக சோதிக்கின்றான். சோதனை அதிகமாக இருந்தால்த்தான் சுகம் பெருமளவில் வரப்போகின்றது என்று அர்த்தம். இன்னும் இரண்டொரு வாரங்களில் நீ குணமாகி விடுவாய் என்றும் கூறினான். இரண்டு வாரங்கள் என்ன ஆறு மாதங்கள் ஆகியும் எழுந்து நடமாட முடியவில்லை. கால்கள் நடக்கும் சக்தியை இழந்து விட்டபடியால் தனது அலுவல்களைக்கூட கவனிக்க முடியாது சிறகொடிந்த பறவையாக வீட்டுக்குள் சிறைப்பட்டாள். தங்கைமார் இருவரும் ஆரம்பத்தில் அவளுக்கு உதவியாக இருந்தனர் பின்பு இருவரும் அவள் மீது சலிப்படைந்து வெறுப்பினைக் காட்டினர். ஓடாய்த் தேயும் வரை அவர்களுக்கு உழைத்து தன்னலம் கருதாது தன் சகோதரர்களுக்காக வாழ்ந்தவளை உதாசீனம் செய்துவிட்டு, இருவரும் தாம் வாழும் வழியைத் தேடிக் கொண்டனர். கால்கள் இழந்த நிலையிட் கூட தன்னன்பு மழையைப் பொழிந்த ஒரே ஒரு ஜீவன் தனஞ்சயன்தான், ஆம் அந்நிலையிலும் அவளுக்கு மங்களநான் பூட்டி மனைவியாக்கிக் கொண்டான்.

வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்திற்கு அவளையும் சக்கர நாற்காலியில் வைத்து அழைத்துச் சென்றான். ஆம் அன்பை மறவாத இரு உள்ளங்களையும் இணைத்து வைத்தவனல்லவா, 35 வருடங்களாக மணவாழ்வைப் பெறாத தட்சாவிற்கு மணவாளனைத் தன்னாலயத்திலே தேடித் தந்தவனல்லவா.

காலத்தின் ஏடுகள் மெதுவாகப் புரட்டப்பட்டன. தட்சாவும் மெதுவாக எழுந்து நடக்கத் தொடங்கினாள். அவனருளால் மீண்டும் தன் அன்பு மனைவியின் கால்கள் கட்டிலில் கட்டுண்டு கிடக்காமல் கந்தன் சந்நிதியை நோக்கி நடைபயில்வதைக் காணும் தோறும் அந்தக் கருணை வள்ளலின் கடைக்கண் பார்வையை அயராது தரிசித்தான்.

மீண்டும் அதே கார்த்திகை தீபத்திருநாள். கலி தீர்க்கும் கலியுகவரதன் கண்கொள்ளாக் காட்சியை களித்துக் காண மழை பொழியும் அடியார் நடுவே கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக கற்பூரச்சட்டி ஏந்திய வண்ணம் தட்சாவும் அவளருகே ஆண்டவனை நோக்கி அங்கப் பிரதட்சை செய்து தனஞ்சயனும் தம் காணிக்கையை அவன் பொற்பாதத்திற்குச் சமர்ப்பணமாக்கினர்.

## செயலாளர் அறிக்கை

யாழ் பல்கலைக்கழக இந்துமன்ற வளர்ச்சியானது சிறிது கால இடைவெளிக்கு பின் மீண்டும் இந்து மாணவர்மத்தியில் ஓங்கிவளரத்தொடங்கியுள்ளது 'இந்து நெறி' சஞ்சிகையானது வெளியாகும் இவ்வேளையில் இந்துமன்ற செயலாளர் என்ற முறையில் அதன்கடந்தகால நிகழ்வுகளை மீட்டிப்பார்ப்பது எனது கடமையாகின்றது.

இந்து மன்றமானது யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தை அடிகோலாக வைத்து இந்து மாணவர்களுக்கு ஓர் உறுதுணையாக இருந்து வருகின்றது. யாழ் வளாகத்தின் இத்துணை பெருவளர்ச்சிக்கு ஓர் முக்கிய கர்த்தாவே, எமது பரமேஸ்வரக்கடவுளின் பேரருள் தான் என்பதில் சந்தேகமில்லை.

சிறிதுகால இடைவேளையின்பின் மீண்டும் புதுப்பொலிவு பெற்று பலகட்டுரைகளைக் கொண்டு வெளிவரும் இந்துநெறி சஞ்சிகையின் வளர்ச்சிப்பாதையில் அக்கறை கொண்டு அதனை வெளியிடுவதற்கு ஊக்கமளித்த இந்துமன்ற பெருந்தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களையும் பெரும் பொருளாளர் கலாநிதி சி. க.சிற்றம்பலம் அவர்களையும் நினைவு கூராமல் இருக்கமுடியாது.

இந்துமன்றத்தின் கடந்தகால செயற்பாடுகள் சிலவற்றை மீட்டிப்பார்க்கின்றேன் இந்துமன்றமானது நூல் வெளியீடுகளையும் அத்துடன் உரியதின வேளைகளில் விசேட பூசைத்தினங்களையும் கொண்டாடி வந்துள்ளது. இந்துமாணவர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பித்து வந்திருக்கின்றார்கள்.

கடந்தகாலங்களில் இந்துமன்றமானது சிவராத்திரிவிழாவை இந்து நெறிப்படி கொண்டாடியது மட்டுமல்லாமல் ''சிவபுராணம்'' என்ற நூலினை ஆங்கிலமொழி பெயர்ப்புடன் வெளியிட்டு மாணவர்களுக்கு இலவசமாகவழங்கியது. இதுபோன்றே நவராத்திரி விழாவை ஒட்டி 'சகலகலாவல்லிமாலை' போன்ற ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய நூலையும் இராமநாதன் நம்பிக்கைபொறுப்புக்குழு வினரிடமிருந்து இலவசமாகப் பெற்று விநியோகம் செய்தது.

இந்துமன்ற வளர்ச்சிப்பாதையில் அக்கறை கொண்ட எமது இந்துமன்றஉறுப்பினர்களின் விடாமுயற்சியின் பிரதிபலனாக கடந்தகாலத்தில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடமிருந்து ஓர் அலுவலகம் பெறப்பட்டு இந்துமன்ற நடவடிக்கைகள்யாவும் அலுவலகத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் சிறியநூலகமும் இவ்அலுவலகத்தில் இயங்குகின்றது. விசேட தினங்களின்போது கலைநிகழ்ச்சிகளையும் நடனநிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது. இந்துமன்ற வளர்ச்சியின் நிதி சேகரிப்பின் பொருட்டு நடிகமணி வி. வி. வைரமுத்து குழுவினரின் நாடகம் மேடையேற்றப் பட்டு குறிப்பிடத்தக்களவு நிதி சேகரிக்கப்பட்டு இந்துமன்ற வளர்ச்சியில் மேலும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இந்துமன்றத்தலைவர் செல்வன் அ. பாலகுமார் அவர்களும் பத்திராதிபர் செல்வன் சுவர்ணராஜா அவர்களும் ஏனைய எமதுமன்ற உறுப்பினர்களும் இந்துநெறி வெளிவர பெரிதும் உறுதுணையாக நின்று உழைத்துவந்துள்ளார்கள்.

இறுதியாக இந்துநெறியானது இந்துமக்களுக்கு ஒருமைல் கல்லாக இருந்துஓங்கி வளரவேண்டுமென பரமேஸ்வரப்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

— எஸ். ஞானசேகரன்

## அன்பளிப்பு

**விற்பனையாளர்**

- கிருமி நாசினி
- உரம்
- சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- சிமந்து

**ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**

இணுவில் சந்தி,

இணுவில்.

ருசிமிக்க சைவ உணவு

வகைகளுக்கு...

**மகேஸ்வரன்**

**தேனீர்ச்சாலை**

கோவில் வாசல், இணுவில் சந்தி,

இணுவில்.

இந்து நெறி வளர்க !

**வீனஸ் லோன்றி**

கோவில் வாசல், இணுவில் சந்தி

இணுவில்.

**வாழ்த்துக்கள்**

**NIRU TUITION CENTRE**

**KONDAVIL.**

**With Best Compliments from :**



# S.V.MURUGESU

**154, HOSPITAL ROAD, JAFFNA.**

*T'phone:* **22564**

Spa·e ·onated

by

T'phone: 2 2 0 6 4 ... Road,
T'grams: 'ARVEGIE' ... JAFFNA